வாலிபர் உள்ளம்



S. ராமநாதன்

வாலிபர் உள்ளம்

தோழர் பொன்னம்பலனார்
அவர்கட்கு அன்புடன்
பொ. ராமச்சந்திர
8. X. 46

S. ராமநாதன்

ராயல் பிரிண்டிங் ஒர்க்ஸ்
11, மவுண்ட் ரோடு, சென்னை.

விலை] [ரூ. 1—8—0

முதற் பதிப்பு 1946 ஏப்ரல்

அடக்கம்

கையினால் செய்த காகிதம்

முகவுரை

1946-ஆம் வருஷம் ஜனவரி மாதத்தில் மகாத்மா சென்னைக்கு விஜயம் செய்ததே இந்தப் புத்தகம் எழுதியதற்குத் தூண்டுகோல். அச்சமயம் நடைபெற்ற இரண்டு சம்பவங்கள் என் மனதில் தைத்தன. முதலாவது, இம் மகாணத்தில் கால் நூற்றுண்டுக்கு முன்னர் ஆரம்பமான தேசீய இயக்கத்தை வருணித்து அதை நடத்துவதற்குத் தனக்கு முக்கிய துணைவர்களாக விளங்கிய மூவர்களின் பெயரை மகாத்மா விளம்பரம் செய்தார். அம் மூவர்களில் இருவர் ஒத்துழையாமை இயக்கத்தைத் தங்கள் முழு பலத்தோடும் எதிர்த்து வந்தவர்கள். தேசீயப் போராட்டத்தின் முழுப் பொறுப்பையும் வகித்த வாலிபர்களுக்கு மகாத்மாவின் வருணிப்பு அநீதி வழங்கிற்று. என்னைப் பற்றியோ, எனது நண்பர்களைப் பற்றியோ நான் எதுவும் கூற முற்படவில்லை. இப்புத்தகத்தின் முதலாவது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்ட வாலிபர் சங்கம் நமது நாட்டில் நூதனக் காட்சி அல்ல. அம் மாதிரி பலசங்கங்கள் தங்கள் ஆவியைத் தத்தம் செய்து இந்தியாவுக்குச் சுதந்தரம் சம்பாதிப்பதற்கென்று மகாத்மா ஆரம்பித்த போராட்டத்தில் ஈடுபட்டன. அந்த வாலிபர் கூட்டத்திலுள்ள அனைவரையும் மகாத்மா

மறந்து விட்டார். எதிரிகளை நினைவிலிருத்தி அவர்களுக்கு வாகைமாலை சூட்டுகிறார்.

மகாத்மா விஜயத்தின் போது நடை பெற்ற இரண்டாவது சம்பவம் : பிரார்த்தனை என்ற பெயரால் நம் நாட்டு அரசியலை அவர் உருவழித்தது. அவர் சென்னையில் தங்கியிருந்த நாட்கள் முழுதும் சென்னை வாசிகள் 15-வது நூற்றாண்டு வாழ்க்கை நிலையை அனுபவித்து வந்தார்கள். தங்களுடைய அரசியல் விடுதலைக்கு வழி தேடி மகாத்மாவின் முன்னிலையை அடைந்த லட்சக் கணக்கான மக்களை ராம் துன் பஜனை செய்யும்படி அவர் வற்புறுத்தினார். கவாத்துப் பழகும் போது ஒன்று, இரண்டு ; இடம், வலம் என்று தட்டுவது மாதிரி இந்தியில் ஏக், தோ, என்று தாளம் போட்டுக்கொண்டு பஜனை செய்தது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஒரு முஸ்லிம் எழுந்து நின்று "இவை யெல்லாம் இந்து மதப் பிரசாரம்போல் தோன்றுகிறதே?" என்று ஆட்சேபனை செய்தார். அவரை வெகு சுலபமாக அடக்கிவிட்டார்கள்.

மகாத்மாவின் விஜயத்தின்போது இருந்த சென்னை வாசிகளின் மனப்பான்மையைத் தெளிவாக்கு வதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். அப்போது நடந்த களேபாரத்தில் மோட்டார் பஸ் கம்பெனிகளுக்கு நல்ல வேட்டை. அளவுக்குமேல் பிரயாணிகளை

பஸ்ஸில் ஏற்றிக்கொள்ளும் குற்றத்தைப் பற்றி போலீஸ் அதிகாரிகள் தெரிந்தும் தெரியாதவர்கள்போல் ஜாடையாக இருந்து விட்டார்கள். நான் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒரு மோட்டார் பஸ்ஸில் திடீரென்று மகாத்மாவின் பிரார்த்தனையிலிருந்து திரும்பிய பெண்கள் கூட்டம் ஒன்று ஏறிற்று. குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் இரண்டு பங்கு நபர்களை கண்டக்டர் திணித்து அடைத்துவிட்டார். அத்தனை பேரையும் உள்ளே அடைக்க முடிந்ததே ஒழிய அவர்களிடமிருந்து கட்டணம் வசூலிப்பதற்குக் கண்டக்டரால் நடுவில் புகுந்து செல்ல முடியவில்லை. ஆகவே ஜன்னல்களின் வழியாக எல்லோரும் பணத்தைக் கொடுத்துவிட வேண்டும் என்று கண்டக்டர் பல தடவை கேட்டுக்கொண்டார். ஆனால் ஒருவரும் கட்டணத்தைக்கொடுக்க முன்வரவில்லை. உள்ளே புளி மூட்டை மாதிரி அடைபட்டுக் கிடப்பவர்கள் ஜன்னலின் பக்கம் நகருவது வெகு துர்லபமாயிருந்தது. பணம் வசூலாகாமற் போகவே, கண்டக்டர் கடைசியாக ஒரு சூழ்ச்சி செய்தார். ஒரு சத்தம் போட்டார் :—

“அம்மாக்களே! நீங்களெல்லாம் மகாத்மா தரிசனம் செய்துட்டு வர்றீங்கோ, எம் பணத்தைச் சன்னல் வளியாக் கொடுத்துடுங்கோ, இல்லாட்டி உங்களுக்கு மகாத்மா தரிசன புண்ணியம் கிடைக்காது!”

இதைக் கேட்டதும் பஸ்சுக்குள் ஒரு அமளி நடந்தது. ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு ஜன்னல் வழியாகப் பணத் தோடு கையை நீட்டினார்கள். பைசா பாக்கி யில்லாமல் பணம் ஒரு நொடியில் வசூலாகி விட்டது. மகாத்மாவின் பிரார்த்தனையில் ஈடு பட்ட மக்களின் அறிவின் பெருக்கம் அந்த அளவுக்குத்தான் இருந்தது.

சந்தோஷப்படவேண்டிய ஒரு விஷயம் மாத்திரம் என்னவென்றால், குழந்தைகளும் கிழவிகளும் தவிர மற்ற எல்லோரும் இந்தப் பிரார்த்தனையை ஒரு தமாஷாகவே கருதி வந் தார்கள். கூட்டத்திற்குப் போய் வரும் வாலி பர்கள் வழி நெடுக அந்த பஜனையை பற்றிக் கேலியும் பரிகாசமுமாகப் பேசிக்கொண்டு போனார்கள். நான் மாத்திரம் அதை விளை யாட்டாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. மகாத்மாவுக்கு அரசியல் அதிகாரம் இல்லாத சமயத்தில் அவர் இம்மாதிரி காலங்கழிப்ப தால் தேசத்திற்கு ஒரு அபாயமும் இல்லை. ஆனால் நாளையதினம் காங்கிரசின் ஏக தலைவர் என்ற முறையில் அரசியல் அதிகாரம் முழு வதும் அவர் கை வசப்படுமானால் நாமும் நமது நாடும் என்ன கதி யடைவோம் என்று பயந்தேன். அந்த பயமே இப் புத்தகத்தின் மூலம் மக்களை எச்சரிக்கை செய்யும்படி என் னைத் தூண்டிற்று.

இவ்வித எச்சரிக்கை தற்சமயம் அவசிய மாகிவிட்டது. பாக்கிஸ்தான் வருகிறதோ இல்லையோ, அரசியல் அதிகாரம் பிரிட்டனி லிருந்து நகர்ந்து இந்தியாவை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. நமது நாட்டில் தற்சமயம் உள்ள நிலையில் அந்த அதிகாரத்தை வகிப்ப தற்கு மகாத்மாவின் ஆதிக்கத்தில் உள்ள காங்கிரஸ் கட்சி ஒன்றுக்குத்தான் சக்தி யிருக் கிறது. அந்தச் சக்தியின்மூலம் ஏற்படும் புதிய மந்திரி சபைகள் தங்களுக்கு சட்ட சபைகளில் உள்ள மெஜாரிட்டி வலிமையால் மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்தை தேசத் தாரிடையே வலுவில் புகுத்த முயற்சிப்பார் கள். அம்முயற்சியின் பலனாக நமது நாட்டுக் குப் பேராபத்து ஏற்படும். பொருளாதாரத் தில் மாத்திரமன்றி, அரசியலிலும் நமது மக் கள் உருப்படமாட்டார்கள். நிர்மாணத் திட் டம் நமது மக்களை மிருகப் பிராயத்திற்கே திரும்பவும் அழைக்கிறது. பிற்போக்கிற்கு அதுதான் ராஜ பாதை. என்னுடைய இந்த எச்சரிக்கை பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. ஆயினும் இந்த அபாயத்தை உணர்ந்த பிறகு எச்சரிக்கை செய்யாமலிருக்க என்னால் முடியவில்லை. இந்த புத்தகத்தைப் படிக்கும் எனது நண்பர்களும் பழய சகாக் களும் மிகவும் வருத்தப்படுவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆயினும் எனது கடமை யைச் செய்து விட்டேன்.

இந்த புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கும் நபர்களின் பெயர்களுக்கு முன், ஸ்ரீமான், ஸ்ரீ முதலிய கௌரவ பதங்களை நான் வழங்கவில்லை. அப்படிச் செய்வது அநாவசியம் என்று தற்காலத்தில் பலர் கருதுகின்றனர். ஆனால் யாரையும் மரியாதைக் குறைவு செய்திருப்பதாக நினைக்காமலிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள அவ்வளவு பேர்களிடமும் எனக்கு அளவு கடந்த மரியாதை உண்டு. இப்பொழுது நவீனமாகச் சிலர் பெயருக்குப் பின் ஜி என்ற இந்தி அடைமொழியைச் சேர்த்துக் கொள்ள முயற்சி செய்கின்றனர். இந்தி பாஷையில் வழங்கும் போது அது எப்படியிருந்த போதிலும் தமிழ் பாஷையில் அம்மாதிரி வழங்க முயற்சிப்பது தமிழை அவமதிப்பதாகும்.

இப்புத்தகம் தமிழில் வெளியாவதற்கு காரணகர்த்தா சாமி. சிதம்பரன் ஒருவரே. அவருக்கு எனது நன்றி.

சென்னை
25-4-1946.

S. ராமநாதன்.

வாலிபர் உள்ளம்

அரசியல் கொந்தளிப்பு

எவ்வளவு வேகமாகக் காலம் பறந்து விட்டது! மகாத்மா காங்கிரசைக் கைப்பற்று வதற்கு முன், முப்பது வருஷங்களுக்கு முன், சென்னைத் திருவல்லிக்கேணிக் கடற்கரை. ஏழை பணக்காரர்கள் அனைவரும் கூடும் இடம். அக்காலத்தில் ரேடியோ கிடையாது. காற்றிலே கிளம்பும் சப்தத்தின் தொல்லையில் லாமல் ஒருவரோடொருவர் பேச்சு வார்த்தை கள் நடத்தமுடியும்.

பீச்சு ரோட்டில் வரிசையாக மோட்டார் கள் வந்து நிற்கின்றன. அவற்றிலிருந்து சில அதிர்ஷ்ட சாலிகள் இறங்குகிறார்கள். இடை யில் மல் வேஷ்டியும், தலையில் சரிகைத் தலைப் பாகையும், காதில் வயிரக் கடுக்கன்களும் பிரகாசிக்கின்றன. கையில் வெள்ளிப் பூண் போட்ட பிரம்புகளைச் சுழற்றிக்கொண்டு உல்லாசமாக உலாவுகிறார்கள். இவர்களுக்கு மாறாகக் கிழக்கே கடல் ஓரத்தில் துரதிஷ்ட சாலிகளின் கூட்டம். கோவணத்தோடு விளங்கும் மீன் பிடிக்கிறவர்கள் தங்கள் கட்டு மரங்களைக் கரை சேர்க்கிறார்கள். அவர்களை எதிர்பார்த்து நிற்கும் மனைவிமார்களின் கூடைகளில் அன்று கிடைத்த மீன்களைக் கொட்டுகிறார்கள்.

இந்த இரண்டு கூட்டங்களுக்கு மத்தியில் நடுத்தர வகுப்பினர் சிறுசிறு கும்பல்களாக

வந்து உட்காருகிறார்கள். பகல் முழுதும் ஆபீசில் வேலைசெய்து களைத்துப்போன குமாஸ்தாக்களும், வகுப்பு அறைகளில் அடைபட்டுக்கிடந்து வற்றிப்போன மாணவர்களும் ரோட்டுக்கும், கடல் நீருக்கும் நடுவேயுள்ள மணல்வெளியை நிரப்பி விடுகிறார்கள். அவரவர்கள் தாங்கள் அன்று சாதித்த காரியங்களைப் பற்றியும், எதிர்காலத்தில் தாங்கள் சாதிக்கப்போகும் காரியங்களைப் பற்றியும் பிரமாதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

கடற் காற்றின் குளிர்ச்சியும், அலையின் ஓசையும், வானத்தின் நீல நிறமும், அஸ்தமிக்கும் சூரியனின் தங்கக் கிரணமும், அங்கு கூடியிருக்கும் ஏழை பணக்காரர்கள் எல்லோருக்கும் பொதுவுடைமையாக நின்று நிலவின.

அப்பொழுது நான் மாணவன். மாணவர் விடுதியில் வசித்து வந்தேன். அக்காலத்தில் விளையாட்டுக்களுக்கு அவ்வளவு வசதிகள் இல்லாதபடியால் நாங்கள் மாலைப்பொழுதைப் பெரும்பாலும் கடற்கரையிலேயே கழிப்பது வழக்கம். எப்போதும் என்னுடைய சகாக்கள் கூடுகிற மணல்வெளியில் உள்ள இடத்திற்கு நான் நேரே நடந்துபோனேன். நாங்கள் சுமார் பத்துபேர். ஒரேவயது, ஆனால் ஒரே வகுப்பில் படிக்கவில்லை. ஒரே பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தவர்களும் கூட அல்ல. சிலர் மாத்திரம் விக்டோரியா மாணவர் விடுதியில் உள்ளவர்கள். மற்றவர்கள் வெளியில் வசிப்பவர்கள். ஆனால் ஏதோ ஒரு காரணத்தால் நாங்கள் பிரிக்கமுடியாத நெருங்கிய நண்பர்களாகி விட்டோம். அந்தக் காரணம் என்னவென்று எனக்குத் தெரியாது.

நாள் தவருமல் வருஷக்கணக்காக கடற் கரையில் குறிப்பிட்ட ஒரே இடத்தில் கூடி வந் தோம். அங்கே உலகத்தில் உள்ள எல்லா விஷயங்களைப்பற்றியும் விவாதித்து வந்தோம். ஆனால் ஒரு விஷயத்தைப்பற்றியாவது நாங் கள் ஒற்றுமையான முடிவுக்கு வந்ததில்லை. ஒவ்வொருவரும் மற்ற எல்லாருடைய கருத் துக்கும் புறம்பான ஒரு தனிக்கருத்தையே கொண்டிருந்தோம். தர்க்கம் நடத்தும் வேகத் தில் எங்களுக்குள் கைகலப்பு ஏற்படுவதும் உண்டு. அந்தக் கைகலப்பின் மூலம் விழுகிற அடிதடியைப்பற்றி அடிப்பவர்க்கோ அடிபடு கிறவர்க்கோ உணர்ச்சி யிருப்பதில்லை. தர்க் கத்தின் வேகம் மாத்திரம் தடையின்றி ஓடிக் கொண்டிருக்கும்.

நான் ஏன் இந்தக் கூட்டத்தைத் தேடிச் சேர்ந்தேன் என்பது எனக்குத் தெரியாவிட்டா லும், அவர்களுடைய சவகாசத்தில் அலாதி யான ஒரு ஆனந்தம் எனக்கு இருந்து வந்தது. அவர்கள் எல்லோருடைய எல்லாக் கருத்துக் களையும் நான் நிராகரித்தேன். ஆனால் வாலிப ஊக்கம், குற்ற மற்ற உள்ளம், உறுதியான நம்பிக்கை, இவைகள் மாத்திரம் எங்களை ஒன்றுபடுத்தி வந்தன.

வீரன்

எங்கள் கூட்டத்தின் அன்றைய நட வடிக்கை ருசிகரமாயிருந்தது. எங்களுள் ஒரு வர் திடீரெனக் கியாதி பெற்றுவிட்டார். அவ ருடைய பெயர் தினசரிகளில் வெளியாகிவிட் டது. முதல்நாள் நடைபெற்ற சத்தியமூர்த்தி கூட்டத்தில் அவர் கேள்வி கேட்டுவிட்டார். எங்கள் கூட்டம் அவருக்குப் புகழ்மாலை

சூட்டிக்கொண்டிருந்தது. ஆனால் அவரோ எங்கள் கும்பலின் நடுவில் நாங்கள் செய்த அமளியைத் தாங்கமுடியாமல் வெட்கித் திகைத்து நின்றார்.

அந்தக் காலத்தில் தாராளக் கட்சி யென்று பெயர் வைத்துக்கொண்டிருந்த மித வாதிகளின் அரசியலை நாங்கள் அனைவரும் ஆதரித்து வந்தோம். தீவிர தேசிய எண்ணம் எங்கள் மனத்தில் குடிகொண்டிருந்தது. ஆனால் தேசீயக்கட்சி என்ற பெயரோடு விளங் கிய அரசியல் வாதிகளை நாங்கள் வெறுத் தோம். ஏனெனில் அவர்கள் வாய்ப்பந்தல் போடுவதைத் தவிர செயலில் உண்மையோடு நடப்பவர்கள் என்று நாங்கள் நம்பவில்லை. ஆனால் மிதவாதிகள் மிகவும் பயந்த சுபாவம் உடையவர்களாகக் காணப்பட்ட போதிலும் உண்மையோடு நடக்கிறவர்கள் என்று நாங் கள் மதித்தோம்.

எங்கள் கூட்டத்தில் நான் மாத்திரம் தனி யாக நின்று சத்தியமூர்த்தியை ஆதரித்தேன். அதற்கு நான் சொன்ன காரணங்கள் இரண்டு உண்டு. முதலாவது அவர் ஒரு ஏழை. அக் காலத்தில் அவர் ஏழையாகத்தான் இருந்தார். அப்பொழுது அவருக்கு மோட்டார்கார் இல்லை. எங்கும் ரிக்ஷாவில்தான் போவார். அப்படியிருந்தும் அவர் எப்படியோ அரசிய லில் இருந்து பேர்சொல்லி வந்தார்.

இரண்டாவது காரணம், சென்னை மாகாண அரசியலில் அவர் ஒரு பெரிய புரட்சி யைச் செய்துவிட்டார். அதுவரையில் சென்னை தேசீயக் கட்சியில் ஐயங்கார்கள் தான் சேர் வார்கள். நரம்பில் உண்மை அய்யர் இரத்தம்

ஓடுகிற ஒவ்வொருவரும் மிதவாதக் கட்சியில் சேருவதுதான் வழக்கம். உதாரணமாக மித வாத நட்சத்திரங்களின் பெயர்களையெல்லாம் பாருங்கள்! V. கிருஷ்ணசாமி அய்யர், P.S. சிவ சாமி அய்யர், V. S. சீனிவாச சாஸ்திரி, C. P. ராமசாமி அய்யர், T.R. வெங்கட்ராம சாஸ்திரி, G. A. நடேசன். பிறகு அந்தப்புறம் திரும்பி தேசீயக் கர்ச்சனையிடும் சிங்கங்களின் பெயர் களைப் பாருங்கள்! C. விஜயராகவாச்சாரி யார், S. கஸ்தூரிரெங்க அய்யங்கார், V.K. இரா மாநுஜாச்சாரியார், C. ராஜகோபாலாச்சாரி யார், A. ரெங்கசாமி அய்யங்கார், C. R. சீனி வாசய்யங்கார்.

அந்தச் சமயம் S. சீனிவாசய்யங்கார் உத்தியோகத்திலிருந்தார். ஆனால் அவருக் காகத் தேசியக் கட்சியில்ஒரு முக்கியஸ்தானம் காலியாகவே காத்துக்கொண்டிருந்தது. என் றைக்கு வேண்டுமானாலும் உத்தியோகத்தை விட்டால், அவர் அந்த ஸ்தானத்தை அடை யலாம். ஆனால் எந்தக்காரணத்தைக்கொண் டும் அவர் மிதவாதக் கட்சியில் சேரவே முடி யாது. ஆகவே சாதாரண அய்யராக மாத்திரம் இல்லாமல்,ஒரு சாஸ்திரியாகப் பிறந்த சத்திய மூர்த்தி தன் இனத்தைவிட்டுப் பிரிந்து தேசீயக் கட்சியில் சேருவதென்றால் அது ஒரு புரட்சி அல்லவா? என்னுடைய நண்பர் களுக்கு உண்மைப்புரட்சி மனப்பான்மை யிருந்தது. அன்று நான் வீண்கேலி செய்வ தாக என்னுடையவார்த்தைகளை அடக்கி விட்டார்கள்.

கண்ணீர்

இந்தக் கூட்டத்தின் சகவாசம் நான் பள்ளிக்கூடத்தை விட்டுஅரசியலில்சம்பந்தப்

படும் வரையில் தொடர்ந்து வந்தது. அத் தொடர்ச்சி முழுவதும் எனக்கு இன்பத்தையே ஊட்டிக்கொண்டிருந்தது. அதற்கு எதிரிடையாக ஒரு சம்பவம் மாத்திரம் உண்டு. அது எனது நினைவிலிருந்து மறையவில்லை.

ஒருநாள் விடுமுறையன்று சென்னையின் அருகாமையில் உள்ள புழலேரிக்கு நாங்கள் உல்லாசப் பிரயாணம் போனோம். அங்கே நெடுநேரம் ஏரியில் நீந்தி விளையாடினோம். எங்களுக்குகளைப்பும் பசியும் ஏற்பட்டுவிட்டன. அங்கேயுள்ள ஒரு பிராமணர் வீட்டில் எல்லோருக்கும் சாப்பாட்டுக்கு ஏற்பாடுசெய்திருந்தோம். ஆவலோடு எல்லோரும் அந்த வீட்டையடைந்தோம். உள்ளே இலைபோட்டப்பட்டிருந்தது. எல்லோரும் உள்ளே அனுமதிக்கப்பட்டுச் சாப்பிட உட்கார்ந்தார்கள். என்னைமாத்திரம் வாயிற்படியிலேயே நிறுத்திவிட்டார்கள். ஏனென்றால், நான்பிராமணன் அல்ல. பாக்கிபேர் சாப்பிட்ட பிறகு எனக்கு வெளியில் பரிமாறுவதாகச் சொன்னார்கள். முகத்தில் அடித்தது மாதிரி இருந்தது. எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியினால் நினைவிழந்தேன். கோபம் பொங்கிற்று. ஓட்டல் காரனைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் எனது நண்பர்களின் செய்கையைசகிக்கமுடியவில்லை. அப்பொழுதுதான் என்னைத் தவிர மற்றவர்கள் எல்லோரும்பிராமணர்கள் என்ற விஷயம் எனக்குப் புலப்பட்டது. அவர்களுக்கு நான் வெளியில் நிறுத்தப்பட்டது தெரியும். தெரிந்தும் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப் படவில்லை.

அதுதான்வழக்கம். வழக்கபடி நடந்தாக வேண்டும். மேல்ஜாதியார் திருப்தியடைந்து

தங்கள் முறைவருகிறவரையிலும் தாழ்ந்த ஜாதியர் காத்திருக்கவேண்டும். இந்த அக்கிரமம் மற்றவர்களுக்குச் சரியாகத் தோன்றலாம். ஆனால் எனது நண்பர்கள் அதை எப்படிச் சகித்துக் கொள்ள முடிந்தது? நவீன நாகரிக முதிர்ச்சியில் திளைத்தவர்கள் அன்றோ அவர்கள் எல்லோரும்?

அப்பொழுது என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. பலவந்தமாக உள்ளே நுழைந்து கலகம் பண்ணலாமா? என்னை அவமதித்ததற்காக எனது நண்பர்களை உதைக்கலாமா? என்றெல்லாம் ஆத்திரப் பட்டேன். கடைசியில் அந்த வீட்டிலிருந்து வெளியேபோய் ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தேன். என்னுடைய கண்களிலிருந்து நீர் சொட்டுவதைக்காண நான் வெட்கப்பட்டேன். ஆனால் அதை நிறுத்த எனக்குச் சக்தியில்லை. குழந்தைப் பருவத்தைக் கடந்து வெகுநாள் ஆகாததனால், குழந்தை சுபாவம் என்னை விட்டு முற்றிலும் போய் விடவில்லை. சீக்கிரம் என்மனதைத் திடப்படுத்திக்கொண்டு, ஏரியில் முகத்தைக் கழுவிக்கொண்டு அந்த வீட்டுக்குத் திரும்பினேன்.

அதற்குள் எனது நண்பர்கள் தங்கள் சாப்பாட்டை முடித்துவிட்டு எனக்குப் பரிமாறுவதற்காக என்னைத் தேடினார்கள். எனக்குத் திடீரென்று வயிற்றுநோய் வந்துவிட்டதென்று கூறி நான் சாப்பிட மறுத்துவிட்டேன். மாலையில் புழலேரியிலிருந்து நாங்கள் எல்லோரும் நடந்து திரும்பினோம். வழிநெடுக நடந்த சிரிப்பு விளையாட்டுக்களிலும், களியாட்

டீங்களிலும் நான் கலந்துகொள்ளவில்லை. எனது அருமை நண்பர்களில் ஒருவராவது என்னைப்பற்றிக் கவலைகொள்ளவில்லையென்றும், நான் சாப்பாடு வேண்டாம் என்றதின் உண்மைக் காரணத்தை அவர்கள் அறிந்துகொள்ள வில்லையென்றும் எண்ணி எண்ணி என்மனம் புண்ணடைந்தது.

கொரில்லா சண்டை

இம்மாதிரியான சம்பவங்கள் மாணவர்களின் வாழ்க்கையில் இப்பொழுது நடைபெறுவதில்லை. அதாவது இப்பொழுது வெளிப்படையாக நடைபெறுவதில்லை. வெளிப்படையாக நடந்தால் கலகம் மூண்டுவிடும். காலப்போக்கு ஜாதித் திமிருக்குப் புடம் போட்டுவிட்டது. ஆயினும் ஜாதி அழிந்து போகவில்லை. ஜாதிச் சின்னமாகிய கட்டுப்பாடுகள் அவமானங்கள் எல்லாம் இன்னும் இருக்கின்றன. ஆனால் அவைகள் நேரிடையாக இல்லாமல் மறைமுகமாகவும், எளிதில் அழிக்க முடியாத மாதிரியிலும் உருவாகியிருக்கின்றன. உச்சிக்குடுமியும் நெற்றிக் குறியும் மறைந்துவிட்டன. ஆனால் ஜாதிக்கர்வம் மூளையைவிட்டுப் போகவில்லை. போகவும் போகாது. போகவேண்டுமானால் ஜாதி பேதத்தை வளர்க்கும் ஆணிவேராகிய வருணாச்சிரம கொள்கையை அடியோடுபிடுங்கி யெறிய வேண்டும்.

பிற்காலத்தில் நமது நாட்டு அரும்பெருந் தலைவர்களோடு பழகும் பாக்யம் எனக்குக் கிடைத்தது. அவர்களில் சிலர் நமது நாட்டில் உன்னத நிலைமையில் உள்ள பிராமணர்கள்.

எனது பால்ய நண்பர்களைவிட புத்திக் கூர்மையிலும், ஆழ்ந்த நோக்கத்திலும் அவர்கள் எத்தனையோ மடங்கு மேலானவர்கள். எனினும் ஜாதியபிமானம் என்னும் ஒரு விஷயத்தில் மாத்திரம் அந்த மேம்பாட்டை நான் அவர்களிடம் காணவில்லை. வெகு உன்னத நிலையில் உள்ளவர்கள் ஜாதி குணங்களை மறைத்து வைத்துக்கொள்ள அரும்பாடு படுகிறார்கள் என்பதை மாத்திரம் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதை முழுதும் மறைத்துக்கொள்ளவும் முடிவதில்லை. திடீரென எதிர்பாராத சமயத்தில் அது வெளிக்கிளம்பி விடுகிறது.

உதாரணமாகத் தற்சமயம் நடைபெறும் C. R. கட்சித் தகராறைக் குறிப்பிடலாம். இச்சமயத்தில் C. R. பற்றிய வேறொரு விஷயத்தைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. அவர் புதிதாக "ராஜாஜி" என்று ஒரு பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார். அது தமிழ் அல்ல. ஏதோ மார்வாடிக் கடன்காரன் பெயர் மாதிரி இருக்கிறது. பாவம்! அவர் உண்டாக்கியதை அவர் அனுபவித்தே தீரவேண்டும். ஜாதி அபிமானத்தை வெளியில் தலை காட்ட முடியாதபடி அடித்தால் அது உள்ளூறவே புரையோடுகிறது. நேரில் நின்று போர்புரியும் பீரங்கிப்படையை எதிர்த்து வெல்லமுடியும். மறைவில் இருந்து அடிக்கும் கொரிலாப் படையை வெல்வது கடினம் என்பதை அவர் உணர்ந்துகொண்டிருப்பார்.

சங்க உற்பத்தி

இரண்டு வருஷங்கள் கழிந்தன. எனது காலேஜ் வாழ்க்கை முற்றுப்பெற்றது. ஆனால்

கட்டுக்கரை நட்பு மாத்திரம் முடிவடையாமல் திரண்டு ஒரு சங்கமாக உருவெடுத்தது. அதற்கு "வாலிபர் சங்கம்" என்று பெயரிட்டோம். முதலாவது உலகயுத்தத்தில் ஈடுபட்டுப் போர்க்களத்திலிருந்து மீண்ட பிரஞ்சு வீரர்கள் இதே பெயருடன் ஒரு சங்கம் அமைத்திருந்தார்கள். அந்தப் பெயரையே எங்களது சங்கத்திற்கும் சூட்டினேம். வாலிபர் சங்கத்திற்குத் தகுந்த ஒரு திட்டம் தயாரித்தோம். எங்கள் எண்ணத்தில் எவையெவை அதிதீவிரமானவைகள் என்று தோன்றினவோ அவைகளையெல்லாம் அத்திட்டத்தில் புகுத்தினேம்.

இந்தியாவுக்குப் பரிபூரண சுதந்தரம், வயது வந்தோர் அனைவருக்கும் ஓட்டுரிமை, மாற்று ஓட்டு மூலம் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம், தொழிலாளர் அனைவருக்கும் எட்டுமணிநேரவேலை, பலவிதமான பொதுவுடைமை ஏற்பாடுகள், ஜாதி ஒழிப்பு, இம்மாதிரி அநேக விஷயங்கள் அந்தத் திட்டத்தில் அமைந்திருந்தன. அவைகளில் மிக முக்கியமானது ஒன்று உண்டு. அதாவது, வக்கீல்கள் டாக்டர்கள் போன்ற தொழில்களில் உள்ளவர்கள் 55-வது வயதில் கட்டாயமாக தொழிலிலிருந்து விலகி வாலிபர்களுக்கு இடங்கொடுக்கவேண்டும். எங்கள் சங்கத்தில் 35 வயதிற்குமேற்பட்டவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதில்லை.

பலருடைய அதிர்ப்திக்கும் எதிர்ப்புக்கும் இடையே எங்களுடைய சங்கம் வளர்ச்சியடைந்து வந்தது. எதிர்பாராத ஒரு அதிர்ஷ்டம் எங்களுக்கு ஊக்கத்தை ஊட்டியது. அதா

வந்து: எங்களுடைய வேலைத் திட்டத்தை அனி பெசண்ட் அம்மையாருக்குக் கொண்டுபோய்க் காட்டினோம். அவர்களுடைய அன்பு ததும்பிய ஆதரவு எங்களைத் திகைப்படையச் செய்தது. ஒரு தங்கச் சவரன் நாணயத்தை எங்களுக்கு நன்கொடையாகக் கொடுத்தார். தன்னுடைய நியூ இந்தியா தினசரிப் பத்திரிகையில் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒரு காலம் எங்களுக்கென்று ஒதுக்கி விடுவதாகக் கூறினார். எங்களுக்கிஷ்டமான விஷயங்களை எழுதி வரலாம் என்றும், நாங்கள் எழுதுவதை எவ்வித மாறுதலும் இன்றிப் பதிப்பித்து வெளியிடுவதாகவும் எங்களுக்கு வாக்களித்தார்.

அது முதல் தென்னிந்திய அரசியலில் எங்களுக்கு நிரந்தரமான ஒரு இடம் கிடைத்துவிட்டது. எங்களைப்பற்றி ஒருவரும் அலட்சியமாக இருக்க முடியவில்லை. எங்களையும் ஒரு பொருட்டாக மதிக்கவேண்டியிருந்தது. எங்களைவிட அங்கத்தினர் தொகையிலோ கொள்கை உறுதியிலோ பலமுள்ள அரசியல் கட்சி தென்னாட்டில் வேறு ஒன்றும் இல்லை. எங்கள் வாலிபமும், தைரியமுமே, மற்றவர்களுக் இல்லாத எங்களுடைய விசேஷபலம். வயது வந்தவர்களுக்கெல்லாம் எங்களை நினைக்க நடுக்கம் ஏற்பட்டுவிட்டது.

மஹாஜன சபை

அவ்வருஷம் நடைபெற்ற சென்னை மகாஜன சபையின் வருஷாந்தரக் கூட்டத்தில் எங்களுடைய பலம் எல்லோருக்கும் தெளிவாகப் புலப்பட்டது. அந்த சபை வெகுநாளாக மிதவாதிகளின் கோட்டையாக விளங்கிவந்தது. மவுண்ட் ரோடில்

அதற்குச் சொந்தமான கட்டிடம் இருந்தது. இப்பொழுதும் இருக்கிறது. அதைவிட் முக்கியம், அதற்கு பாங்கியில் சேமநிதியும் திரண்டிருந்தது. அந்த நிதி இப்போதில்லை.

தேசீய வாதிகள் மகாஜன சபையைக் கைப்பற்றப் பலதட்வை முற்றுகை யிட்டுத் தோல்வியடைந்தார்கள். எங்கள் வாலிபர் சங்கம் மகாஜன சபைக்குள் நுழைந்தது. அதைக் கைப்பற்றவேண்டும் என்ற நோக்கம் எங்களுக்கில்லை. அப்படிக் கைப்பற்றுவது சாத்தியம் என்றுகூட நாங்கள் நினைக்கவில்லை. அந்த வருஷத்திய தேர்தலிலும் மிதவாதிகளும், தேசீய வாதிகளும், போட்டியிட்டுத் தங்களுடைய பலத்தை அளவு பார்த்தார்கள்.

தேர்தல் தினத்தில், சென்னையில் பல பாகங்களிலும் மோட்டார் வண்டிகள் பறந்து கொண்டிருந்தன. கடைசி நிமிஷம் வரையிலும் இருதரப்பிலும் புதிய அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டு வந்தார்கள். நாங்கள் மாத்திரம் இந்தப்போட்டியில் ஈடுபடவில்லை. அந்த இரண்டு கட்சிகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு மூன்றுவது கட்சியாகவே விளங்கினேம். வழக்கம்போல் மிதவாதிகள் தங்களுக்கு மெஜாரிட்டி சேர்த்து விட்டார்கள். நாங்கள் தேசீய வாதிகளோடு சேர்ந்துவிட்டால் மிதவாதிகளை எண்ணிக்கையில் தோற்கடிக்க முடியாவிட்டாலும் உண்மையில் அவர்களுக்கு ஒரு நெருக்கடியை உண்டாக்கி யிருப்போம். எங்களுக்கு ஒரு முக்கியநிலை ஏற்பட்டிருந்தது. நாங்கள் கூட்ட நடவடிக்கையின்போது மிதவாதிகளுக்கே ஓட்டுக்கொடுத்தோம். தேசீயவாதிகள் எங்களைக் "குட்டி மிதவாதிகள்" என்று ஏளனம்

செய்தார்கள் L. A. கோவிந்தராகவய்யர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் C. P. ராமசாமி அய்யர் உபதலைவர்.

தேர்தலின் முடிவு ஒரு விநோதமாக இருந்தது. மிதவாதிகளின் கட்சியில் ஒரு சிலரே நிர்வாகப் பதவிக்குத் தகுதியுடையவர்களாக இருந்தார்கள். பெரும்பாலான அங்கத்தினர் சென்னையில் உள்ள ஒரு தொழிற் சங்கத்திலிருந்து வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வரப்பட்டவர்கள். ஆகவே மிதவாதிகள் தங்களுடைய நிர்வாக சபையில் எங்கள் வாலிப சங்கத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. என்னைக் காரியதரிசியாகவும், மற்றொரு சங்க அங்கத்தினரைப் பொக்கிஷ தாரராகவும், எங்கள் சங்கத்தைச் சேர்ந்த மற்றும் சிலரை நிர்வாகசபை அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுத்தார்கள். மிதவாதத் தலைவர்கள் எல்லோரும் வேறுபல ஜோலிகளில் ஈடுபட்டவர்களானதால், வருஷாந்தரத் தேர்தலுக்குப் பிறகு அவர்கள் மகாஜனசபையை எட்டிப்பார்க்கவேயில்லை. ஆகவே ஒரு வருஷ காலம் மகாஜன சபையானது "வாலிபர்சங்க"த்தின் சொந்த சொத்தாகவே விளங்கியது.

ஆனால் அவ்வருஷம் காந்தீயம் என்னும் சுழற் காற்று எங்களை மடக்கிக்கொண்டது. எங்களுக்கு ஏற்பட்ட பலவித தொல்லைகளுக்கிடையே மகாஜன சபையின் சொத்துக்களைப் பாதுகாத்து வருஷ முடிவில் மிதவாதிகள் அனைவரையும் நீக்கிய காங்கிரஸ்காரர்கள் அடங்கிய ஒரு நிர்வாக சபையினிடம் சபையை ஒப்புவித்தோம். அது முதல் நாளது

வரையில் மகாஜனசபையானது காங்கிரசுக்கு ஒரு உபகருவியாகவே விளங்கி வருகிறது. காங்கிரசுக்கு ஏற்படுகிற பண நெருக்கடிகளை மகாஜன சபை சமாளித்து வருகிறது. காங்கிரசில் உள்ள நிர்வாக ஊழல்களுக்கும் மகாஜன சபை இரையாகி வருகிறது. இவ்வருஷம் சபையின் தற்கால நிர்வாகஸ்தர்கள் வயிர விழாக்கொண்டாட்டத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். ஆனால் ஒரு காலத்தில் மிதவாதிகளின் கோட்டையாக விளங்கிய மகாஜன சபையின் சரித்திரமாறுதல்களை அவர்கள் அறிய மாட்டார்கள்.

அமிர்த சரசு

அவ்வருஷம் அமிர்த சரசில் நடைபெற்ற காங்கிரசுக்குப் பிரதிநிதியாகச் சென்றேன். திரும்பும் பொழுது ஜாலியன் வாலா பாகிலிருந்து ஒரு பிடி மண் கொண்டு வந்தேன். கங்கையிலிருந்து ஜலம் கொண்டுவரவில்லையே யென்று என் தாயார் கோபித்துக் கொண்டார்கள். கங்காதீர்த்தத்தை விட ஜாலியன் வாலா மண் புண்ணியம் நிறைந்ததென்று நான் அவர்களுக்குச் சமாதானம் சொல்லிப் பார்த்தேன்.

அமிர்தசரசின் குளிர் எங்களால் சகிக்க முடியவில்லை. கட்டிலுக்கு அடியில் நெருப்புச் சட்டியை வைத்துக்கொண்டு தூங்கினோம். சென்னைப் பிரதிநிதிகள் முகாமுக்கு டாக்டர் பட்டாபி தான் தலைவர். அப்பொழுது அவர் வாலிபராக இருந்தார். அவருடைய பேச்சு, அகராதியிலிருந்து படிப்பதுபோன்றிருந்தது. எந்தவார்த்தையைச் சொன்னாலும் அதே

பொருளுள்ள மற்ற சொற்களையும் அகராதி போல அடுக்கிச் சொல்லிவிட்டுத்தான் அடுத்த சொல்லுக்குப் போவார்.

அந்தக் காங்கிரசின் அதிகாரம் முழுவதும் திலகர் கையில் இருந்தது. அவருக்கு அடுத்தபடி முக்கியஸ்தராக ஜின்னு விளங்கினுர். காந்தியார் அதற்கு முன்பே மகாத்மா பட்டம் பெற்றுவிட்டார். ஆனுல் அப்பொழுது தான் அவருக்கு அரசியலில் செல்வாக்கு ஆரம்பமாகிக்கொண்டிருந்தது. காங்கிரசில் அவருடைய பேச்சு உணர்ச்சி யுள்ளதாயிருந்தது. மாண்டேகு சீர்திருத்தத்தைக் கண்டிக்கும் தீர்மானத்தில்

> "இந்திய மக்களுடைய தகுதிக்குப் போதுமான தல்ல, திருப்தியளிக்கவில்லை, ஏமாற்றம் அளிக்கிறது."

என்ற வார்த்தைகள் இருந்தன. மகாத்மா பேசும் பொழுது

> "இம் மாதிரி வார்த்தைகளால் இந்தச் சீர்திருத்தத்தைக் கண்டித்தீர்களேயானுல் நீங்கள் அவ்வித சீர்திருத்தத்தைப் பகிஷ்கரிக்கக் கட்டைப்பட்டிருக்கிறீர்கள். இம் மாதிரி கண்டித்துவிட்டுப் பிறகு நீங்கள் அதில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது"

என்று பேசினுர். அந்தப் பேச்சுதான் பிறகு தேசத்தைத் தன் வ்யப்படுத்திக் கொண்ட ஒத்துழையாமை இயக்கத்திற்கு விதையாகும்.

அதன் பின் சில மாதங்கள் "வாலிபர் சங்கம்" வெகு ஊக்கமாக உழைத்து வந்தது.

ஜாலியன்வாலா ஞாபகார்த்த நிதிக்கு உண்டி வசூல் செய்தோம். அப்பொழுது C.R. சேலத்திலிருந்து சென்னைக்கு வந்துவிட்டார். அந்த வசூலை அவர்தான் முன்னின்று நடத்தினர். "வாலிபர் சங்கம்" இல்லாவிட்டால் தன்னல் சென்னையில் ஒன்றும் சாதித்திருக்க முடியாது என்று எங்களை அவர் புகழ்ந்தார்.

திருநெல்வேலி

சென்னை மாகாண அரசியல் மகாநாடு பழைய காங்கிரஸ் அமைப்பின்படி அவ்வருஷம் திருநெல்வேலியில் கூடிற்று. கடைசி தட்வையாக மிதவாதிகள் அம்மகா நாட்டுக்கு வந்திருந்து T. V. கோபாலசாமி முதலியாரிடமிருந்து சவுக்கடி பெற்றார்கள். அவர் பேசும் பொழுது, மேடையிலிருந்த அனிபெசண்ட், சீனிவாச சாஸ்திரியார் முதலிய மிதவாதிகளைச் சுட்டிக் காட்டிச் சொன்னதாவது :—

இவர்களும் தேச பக்தர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். மக்களுக்குத்தேசபக்தி யென்பது பெண்களுக்குக் கற்புபோன்றது. இவர்களுடையமிதவாதமானது பெண்கள், நாங்கள் மிதமான கற்போடு இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்வது போல் இருக்கிறது.

இதைக்கேட்டதும் மிதவாதிகள் தலை குனிந்தனர். அப்பொழுது தான் தன்னுடைய அட்வகேட் ஜெனரல் வேலையை ராஜிநாமாச் செய்த S. சீனிவாசய்யங்கார் முதல் முதலாக

அரசியலில் பிரவேசித்து அந்த மகாநாட்டுக்கே முக்கிய புருஷராக விளங்கினார்.

அப்பொழுது மகாத்மா கிலாபத் இயக்கத்தை ஆரம்பித்து ஒத்துழையாமைத் திட்டப் பிரசாரத்தைத் தொடங்கியிருந்த சமயம். யாகுப் ஹாசனால் காந்தியாரின் திட்டத்தை மகா நாட்டில் நிறைவேற்றுவதற்கான தீர்மானம் பிரரேபிக்கப்பட்டு, C. R. ஆல் ஆதரிக்கப்பட்டது. மிதவாதிகள் தீர்மானத்தை நேரிடையாக எதிர்த்தார்கள். சீனிவாசய்யங்கார் தலைமையில் உள்ள தேசீய வாதிகளுக்கு ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டது. அவர்கள் சட்டசபையைக் கைப்பற்றுவதற்குப் பரிபூரணமான ஆசை வைத்திருந்தார்கள். தீர்மானப்படி பகிஷ்கரிப்பதென்றால் அது அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை விளைவித்தது. ஆகவே தந்திரமாக அவர்கள் ஒரு மத்தியஸ்தம் பேசினார்கள்.

> அகில இந்தியக் காங்கிரஸ் பகிஷ்காரத் திட்டத்தை ஒப்புக்கொள்ளும் வரையில் இந்தத் தீர்மானத்தை ஒத்திப் போட வேண்டும் என்றார்கள்.

ஆனால் பிரதிநிதிகளில் மெஜாரிட்டியார் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று ஆத்திரப்பட்டார்கள். மேடையில் உள்ள தலைவர்கள் அனைவரும் எதிர்த்து நின்றதைக் கண்டதும் மத்தியஸ்தத்தை ஒப்புக்கொள்ளுவதே சரியென்று C. R. எண்ணினார். அங்கு வந்திருந்த எங்கள் வாலிபர் சங்கப் பிரதிநிதிகள், அம்மாதிரி தலைவர்களுடைய தயவுக்

காகப் பிரதிநிதிகள் தங்கள் சுதந்தரத்தை விட்டுக் கொடுக்கக்கூடாது என்று போராடினேம். C. R. க்குக் கோபம் வந்துவிட்டது.

"தீர்மான ரூபத்தில் இந்தப் பிரதிநிதிகள் எது வேண்டுமானாலும் செய்வார்கள். அமுல் நடத்துவது யார்? ஒரு வக்கீலாவது தன்னுடைய வேலையை விட்டு விடுவர்ரா? நீ விட்டுவிட முடியுமா?"

என்று என்னைப் பார்த்து ஆத்திரத்தோடு கேட்டார். எனக்கு அது ஒரு சோதனையாகப் போய் விட்டது. சில நாளைக்கு முன்புதான் வக்கீல் சன்னது பெற்றிருந்தேன்.

"தீர்மானம் நிறைவேறினல் நான் தொழிலை விட்த்தான் செய்வேன்" என்று பதில் அளித்தேன்.

இந்த பதிலை அவர் எதிர்பார்க்கவில்லை. சிறிது நேரம் என்னை உற்றுப்பார்த்தார். பிறகு மேடையில் ஏறி யாகுப் ஹாசனிடம் மத்தியஸ்தத்தை ஒப்புக்கொள்ளவேண்டாம் என்று சொன்னர்.

ஒத்துழையாமைத் தீர்மானம் குதூகலமாக மகாநாட்டில் நிறைவேறிற்று. மிதவாதிகள் எங்களை எதிர்த்த போதிலும், எங்களிடம் வெகு மரியாதையாக நடந்து கொண்டனர். தேசிய வாதிகளுக்கு மாத்திரம் எங்களை வெட்டி வீழ்த்தி விடலாம்போல் இருந்தது. இந்தத் தீர்மானம் சட்ட வரம்புக்கு மீறியது என்று சீனிவாசய்யங்கார் அறிக்கை விடுத்தார். மாஜி அட்வகேட் ஜெனரல் என்ற ஹோதாவில் அவருடைய சட்ட நிபுணத்

துவத்தை அப்பொழுது கவர்னராக இருந்த லார்டு வில்லிங்டன், ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்ப்பதற்கு உபயோகப்படுத்திக் கொண்டார்.

தீமூட்டும் சொற்கள்

ஒத்துழையாமையைப்பற்றி ஒரு முடிவு கட்டுவதற்குக் கல்கத்தாவில் விசேஷ காங்கிரஸ் கூட்டப்பட்டது. அதற்கு முன் திலகர் இறந்துவிட்டார். லாலா லஜபதிராய் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். காங்கிரஸ் கூட்டத்திற்குமுன் தன் அபிப்பிராயத்திற்கு ஆதரவு தேடுவதற்காக மவுலானா ஷவுக்கத்தலியோடு மகாத்மா காந்தி தேச முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தார்.

ஷவுக்கத்—காந்தி ஜதை விநோதமாயிருந்தது. அவர்கள் இருவரும் இந்தியர் முழுவதுக்குமே பெரிய மனிதர்கள்; ஒருவர் உருவத்தில், மற்றொருவர் சக்தியில்.

அக்காலத்தில் அவர்களைப்பற்றி ஒரு புரளி கட்டியிருந்தார்கள். தினசரி, அவர்கள் ஆகாரத்திற்கு ஒரு உயிருள்ள ஆடு தேவை. பாலைக் கறந்து மகாத்மாவுக்கும், ஆட்டை அடித்து மவுலானாவுக்கும் கொடுத்துவிட வேண்டும். இதுவே அப்புரளி.

சென்னையில் இரு தலைவர்களையும் எதிர்பார்த்து வாலிபர் சங்கத்தார் வசதிகள் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிய கூட்டங்களுக்கு ஒன்று தவறாமல் நான் போயிருந்தேன். கிலாபத் விஷயம் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் **இந்திய**

விடுதலை யென்னும் சுயராஜ்யத்திற்கு ஒத்துழையாமை ஒரு வழி என்றபோது அதைத் தடுக்க முடியவில்லை. திருவல்லிக்கேணிக் கட்டற்கரையில் பிர்மாண்டமான கூட்டம் கூடியிருந்தது. வாலிப சங்கத்தார் வழக்கமாகக் கூடும் இடத்தில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. அச்சமயம் மகாத்மாவின் வாயிலிருந்து கிளம்பிய சொற்கள் நெருப்புக் குண்டுகள் மாதிரி என்னுடைய இருதயத்தை ஊடுருவிச் சென்று என்னை ஒரு புது மனிதனாக்கிவிட்டது. அவ்வார்த்தைகளாவன :

நான் பிரிட்டிஷாருக்கு விரோதியல்ல. உண்மையை மறைக்கிறவர்களுக்கு விரோதி. ஹம்பக் பண்ணுகிறவர்களுக்கு விரோதி

பின்னால் நடைபெற்ற சம்பவங்கள், இந்த வார்த்தைகளின் கருத்தை நிறைவேற்றி வைத்தனவா? இல்லையா? என்பது சரித்திர ஆராய்ச்சிக்குரிய விஷயம். ஆனால் அச்சமயத்தில் எனக்கு எவ்வித சந்தேகமும் தோன்றவில்லை. இம்மாதிரியான ஒரு தலைவருக்காக உயிர் விடுவதில் லாபம் இல்லையா?

நான் முடிவான ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். அது வெறும் தேசபக்தியல்ல. அதை விட ஆழ்ந்த நோக்கமுடையது. தேசம் எம் மாத்திரம். மனித சமூகந்தான் எம்மாத்திரம். எனக்கு முன் காட்சியளித்தது. அண்ட சராசரங்களின் அந்தரங்கமான உண்மைத் தோற்றமே. அவ்வித உயர்ந்த தன்மையை அடைவதற்கு ஒரு தடவை மாத்திரம் அல்ல. நூறுயிரக் கணக்கான தடவைகள் உயிரை விடலாம். வாலிபர் சங்கத்தில் மற்றவர்களை

விசாரித்தேன். எல்லோரும் ஏறக்குறைய என்னுடைய நிலைமையிலேயே இருந்தார்கள். ஆனால் சிலருக்கு குடும்பபாரம் மிகுதியால் உடனே முடிவுக்கு வரமுடியாமல் தவித்தார்கள்.

வக்கீல்களுக்கும் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு மாகத் தனியே ஒரு கூட்டத்தில் மகாத்மா பேசினார். அப்பொழுது எங்களுடைய நிலைமையை விளக்கிக் காட்டினோம். நாங்கள் பணக்காரர்கள் அல்ல. சிலர் பெரிய குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. எங்களுடைய தொழிலை விட்டு விட்டால் எங்களையும் எங்களைச் சார்ந்தவர்களையும் போஷிப்பது எப்படி? என்று கேட்டோம். மகாத்மாவின் பதில் :

"இதற்கு என்னையே உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள். நான் ஒரு தொழிலும் செய்யவில்லை. நான் அதிகமாகச் சாப்பிட்டுவிட்டாலும் ஏதாவது சாப்பிட்டாக வேண்டும். வேளைக்கு இரண்டு வாட்டிய ரொட்டிகள் தேவை. ஆனால் நான் சாப்பிடும்போது இரண்டல்ல, இருபது ரொட்டிகள் கொண்டு வந்து வைக்கிறார்கள். என்னுடைய பிரசாரத்திற்காக வெளியில் அலைவதற்கு ஒரு மோட்டார் கார் அவசியம். நான் கிளம்பும்போதெல்லாம் இருபது மோட்டார்கள் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. ஒரு மனிதன் இரண்டு கார்களில்கூட ஏற முடியாதபோது இவைகளெல்லாம் தேவைக்கு அதிகம் என்பது உங்களுக்குத் தெரியும்.

தேவைக்கு அதிகமாக எனக்குக் கிடைப்பதற்குக் காரணம் என்னுடைய தியாகம் தான். நீங்களும் தேசத்திற்காக உங்களைத் தியாகம் செய்யுங்கள். உங்களுடைய தேசமாகிய பெண் உங்கள் வசப்பட்டு உங்கள் கையைப்பற்றிக் கொள்ளுவாள்''

இந்தச் சொற்களில் சித்தரிக்கப்பட்ட உருவம் எங்களுக்கு ஆநந்தத்தை உண்டாக்கியது. தேசம் தாய் நாட்டாக விளங்கி எங்களுடைய வணக்கத்தைக் கோரவில்லை. காதலியாக உருவெடுத்து எங்களை அணைக்க அழைத்தாள். இதன் பிறகு எங்களுக்கு எவ்வித சந்தேகமும் எழவில்லை. எங்கள் சங்கத்தின் அங்கத்தினர்களில் ஆறுபேர் மகாத்மா தங்கியிருந்த ஜாகைக்குப் போய், ஒத்துழையாமைத் திட்டத்தின்படி வேலையைப் பகிஷ்கரித்த வக்கீல்களின் பெயர் வரிசையில் எங்களையும் சேர்த்துக்கொள்ளும்படி விண்ணப்பம் செய்தோம்.

குடும்பம் குறுக்கிடுதல்

எங்களுடைய விண்ணபத்தைக் கண்டு மகாத்மா சந்தோஷப்படுவார் என்று எண்ணினோம். ஆனல் சந்தோஷப்படவில்லை. அது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. எங்கள் கோரிக்கைப்படி அறிக்கை வெளியிடவில்லை. அதற்குப் பதில் அவர் எங்களுக்கு ஒரு கதை சொன்னார். அதற்குமுன் அவர் தொடங்கிய சத்தியாக்கிரக இயக்கத்தில் கும்பகோணத்திலிருந்த ஒரு வாலிபர் தன்னையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று ஒரு விண்ணப்பம் அனுப்பினராம். அவர் பெயரையும் சத்தியாக்கிரகிகள் ஜாப்தாவில் சேர்த்துப் பிரகடனப்

படுத்திய பிறகு இரண்டு வாரங்கள் கழித்துத் தன்னுடைய பெயரை வாபீஸ் வாங்கிக் கொண்டாராம். அதற்குக் காரணம் அவர் குடும்பத்தார் அவருடைய தியாகத்தை ஒப்புக் கொள்ள வில்லை என்பதுதான்.

பொதுவாகத் தென்னுட்டார் மற்றவர்களைவிட குடும்பக் கட்டுப்பாடுகளுக்கு மிகவும் அடங்கினவர்கள் என்பது மகாத்மாவின் எண்ணம். இதில் ஓரளவு உண்மை உண்டு என்பதை நாங்கள் ஒப்புக்கொண்டோம். மகாத்மா எண்ணியது மாதிரி வட்நாட்டாரை விட்த் தென்னுட்டார் குடும்ப பாரத்திற்கு அடிமைப்பட்டவர்களா என்பதை என்னுல் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை.

பொதுவாகக் கூறுமிட்த்து **குடும்பம் என்பது மனிதனுக்கும் அவன் கோரும் விடுதலைக்கும் நடுவே நிற்கும் ஒரு தடைகல்லே ஆகும். சுதந்திர யுத்தம் நடைபெற்ற மற்ற தேசங்களில் எல்லாம் இந்த உண்மை வெளிப்பட்டிருக்கிறது.** இதில் ஒரு வேடிக்கை என்னவென்ருல். மகாத்மாவால் குடும்ப பாரம் கண்டிக்கப்பட்டுக் கால் நூற்ருண்டு கழிந்தபிறகு, இன்றைய தினம் நமது தேசத்தில் குடும்ப உணர்ச்சியே ஒரு உயர்ந்த குணமாகக் கருதப் படுகிறது. காங்கிரஸ்காரர்கள் தங்கள் பேச்சிலும் நட்த்தையிலும் தாங்கள் ஒரு குடும்பம் என்று கருதுகிருர்கள். அதாவது; காங்கிரசைச் சேராத மற்ற பொது மக்களை வேருகவும், தங்களை வேருகவும் பிரித்து பாவிக்கிருர்கள். ஒருவன் கொள்கையைக் கைவிட்டாலும், உண்மைக்கு மாருக நட்ந்

தாலும் அவன் காங்கிரசில் சேர்ந்தவனுக இருந்தால், குடும்பத்தில் எல்லோரும் ஒத்துப் போகவேண்டும் என்ற உணர்ச்சி மேலிட்டு, அவனுடைய குற்றங்குறைகளை மறைத்து விடுகிருர்கள். இது ஒரு அருவெறுக்கத்தக்க ஆபத்தான மனப்பான்மையாகும்.

தேச முழுவதையும் ஒரு குடும்பமாகக் கருத வேண்டுமேயொழிய, அதற்குச் சேவை செய்வதற்கு வெளிக்கிளம்பிய தொண்டர் கூட்டம், தங்களுக்குள் ஒரு குடும்ப உணர்ச்சியை வளர்த்து, அதன் மூலம் குற்றங்களை தாட்சண்யம் காட்டி மறைப்பது, தேச பக்திக்கு நேர்மாருன சுய நலத்தையும் மோசடியையும் வளர்ப்பதாகும். நம் கட்சியில் சேராமல் மற்ற கட்சியில் உள்ளவர்கள் தீண்டப்படாதவர்கள் அல்லர். அவர்கள் கண்ணுக்குத் தோன்றுகிற உண்மையை அவர்கள் கடைப் பிடித்திருக்கிருர்கள். அவர்களுடைய யுக்திக்கும் சக்திக்கும் ஏற்ற அளவு அவர்கள் பொது ஜன சேவை செய்கிருர்கள். ஒரு அரசியல் கட்சிக்குள் குடும்ப உணர்ச்சி புகுந்து விடுமாஞல் அந்தக் கட்சியை, அது, சுயநலக் கும்பலாக மாற்றி விடுகிறது. ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சிகள் தாராள நோக்கத்தோடு மற்ற கட்சிகளில் உள்ள நல்ல அம்சங்களைத் தாங்களே கைப்பற்றவும், வேறு கட்சியில் உள்ளவர்களைத் தங்கள் கட்சிக்குள் சந்தோஷத்தோடு வரவேற்கவும் எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும்.

அறிவுத்துறை

எங்கள் விண்ணப்பத்தை மகாத்மா நிரா கரிக்கவில்லை. அதை ஏற்றுக்கொண்டு தன் னுடைய தீர்ப்பை இரண்டு வாரம் ஒத்திப் போட்டார். அந்த இரண்டு வாரங்களில், எங் கள் நடவடிக்கையைக் கவனித்து, அந்த இரண்டாவது வாரக் கடைசியில் நாங்கள் மன மாற்றம் அடையாவிட்டால் எங்கள் பெயர் களை வெளியிடுவதாக வாக்குக் கொடுத்தார்.

இதற்கிடையில் தென் ஜில்லாக்களுக்குச் சுற்றுப் பிரயாணம் கிளம்பினார். சுற்றுப் பிர யாணத்தின்போது என்னையும் கூடவே வரும் படி அன்போடு அழைத்தார். அப்பொழுது தான் நான் முதல் முதல் பெரிய தலைவர் களோடு பிரயாணம் செய்தேன். அதன் பிறகு மகாத்மாவின் பல சுற்றுப்பிரயாணங்களில் கூடவே சென்று நெருங்கிப்பழகி அவருடன் வாக்குவாதம் செய்யும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது. இங்கே நான் குறிப்பிடும் கருத் துக்கள் அம்மாதிரி நான் நெடுங்காலம் பழகி யதின் முடிவுகள்தாம்.

பிற்காலத்தில் எனக்கும் அவருக்கும் நெருக்கம் இல்லையென்பது உண்மை. நான் எழுதும் நீண்ட கடிதங்களுக்கு ஒரு வார்த்தை யில் பதில் அனுப்பி விடுகிறார். இதற்குக் காரணம் அவருடைய வயது என்றுதான் எண்ணுகிறேன். தள்ளாத வயதில் புது விஷயங்களைக் கிரகித்துக் கொள்ள முடிவ தில்லை. முக்கியமான விஷயங்களைப்பற்றி அவர் ஏற்கனவே முடிவு கட்டிக் கொண்டார்.

அவற்றை மாற்றுவதற்கில்லை. எதிர்வாதத்திற்கு அவர் பதில் சொல்வதில்லை. ஒதுக்கி விடுகிறார். அந்தரங்க சிஷயர்களாகச் சிலரை வெகுகாலத்திற்கு முன்னரே தேர்ந்து எடுத்துக் கொண்டு விட்டார். கஷ்டமான சமயங்களில் எல்லாம் அவருக்குப் பதில் இவர்கள் முடிவு செய்து விடுகிறார்கள்.

இருபத்தைந்து வருஷத்திற்குமுன் காங்கிரசின் அதிகாரம் யாரிடத்தில் இருந்ததோ அதே சிறு கூட்டத்தின் வசந்தான் இன்றைக்கும் அதிகாரம் இருக்கிறது.

அரசியலில் வெளிப்படையாக ஆட்சி செய்வது மகாத்மாவின் அந்தராத்மாதான். வெளிநாட்டினர், இந்த அந்தராத்மாவைப் பற்றிக் கேள்விப்பட்டால் திகைத்துப் போவார்கள். அது மனித அறிவுக்கு அப்பாற்பட்டது. சாதாரண மக்கள் அதைப் பற்றி வாதம் புரிவதில் பயன் இல்லை.

ஆனால் அந்தக் காலத்தில் நான் காதலித்து எனது வாழ்நாள் முழுவதும் பின்பற்றுவேன் என்று சத்தியம் செய்த மகாத்மாவுக்கு அந்தராத்மா இல்லை. அவருடைய மனது சுருசுருப்புடன் இருந்தது. ஆவலோடு எங்கள் வாக்கு வாதத்தில் அவர் கலந்து கொள்வார். தென்னாட்டார் மயிர் பிளந்து வாதம் புரிகின்றார்கள் என்று எங்களை மட்டந் தட்டுவார். இப்பொழுதைப்போல எதற்கெடுத்தாலும், அவர் கட்டுவுளைத் துணைக்குக் கூப்பிடுவதில்லை. பொது மேடைகளில் ராம் துன் பாடுவதில்லை. 1920 ஆகஸ்டு மாதத்தில் தமிழ் நாட்டில் அவர் செய்த பிரசங்கங்கள்

எல்லாம் அறிவுச் சுவையோடு கூடிய விருந்துகளாக இருந்தன. அவருக்கு எதிர்ப்பிரச்சாரம் செய்த இந்துப் பத்திரிகைக்கு அவர் திருச்சிராப்பள்ளியில் கொடுத்த சூடு இன்னும் மறக்க முடியாதது.

அந்தரங்கம்

மகாத்மாவின் தென்னாட்டுச் சுற்றுப் பிரயாணம் முடிவடைந்தபின் வாலிபர் சங்கம் பழைய தீர்மானத்தை மீண்டும் உறுதி செய்தது. நாங்கள் மறுபடியும் மகாத்மாவைச் சந்தித்து எங்களுடைய தியாகத்தை ஏற்றுக் கொண்டு தேச சேவையில் எங்களுக்குப் பங்கு கொடுக்கும்படி வேண்டினோம். எங்கள் கோரிக்கைப்படியே அறிக்கை வெளியிட்டார். ஆனால் எங்களுக்கு என்ன வேலை கொடுப்பது என்பதைப்பற்றி அவருக்கு மனக்கவலை உண்டாயிற்று.

மகாத்மா சென்னையை விட்டுக் கிளம்பு முன் தனியாக என்னோடு பேசவேண்டுமென்று செய்தி அனுப்பினார். ஏதோ ரகசியமான விஷயமாயிருக்கலாமென்று கருதி நான் பரபரப்போடு சென்றேன். என்னை இரண்டு கேள்விகள் கேட்டார். முதலாவது கேள்வி, எனக்கு இந்தி பாஷை தெரியுமா என்பது. இரண்டாவது கேள்வி, எனக்கு இராட்டையில் நூல் நூற்கத் தெரியுமா என்பது. இரண்டு கேள்விகளுக்கும் தெரியாது என்று ஒரே பதில் சொன்னேன். நான் இவை இரண்டையும் கற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்றும், இவ்விரண்டுந் தான், தான் சிருஷ்டிக்கப்போகும் சுயராஜ்யத்

திற்கு அடிப்படை யென்றும் சொன்னார். வாலிபர் சங்கத்தின் மற்ற நண்பர்களிடம் இந்தச் செய்தியைச் சொல்லி அவர்களேயும், இவைகளைக் கற்றுக்கொள்ளச் செய்ய வேண்டுமென்று எனக்குக் கட்டளையிட்டு விட்டு வட இந்தியர்வுக்குப் பிரயாணமானார்.

எங்கள் தலைவன் பணித்த கட்டளையைக் கேட்டுத் திகைத்து விட்டோம். நாங்கள் சேர்ந்தது சுதந்தர யுத்தத்தில் பங்கெடுத்துக்கொள்ளவே. அதற்கும் இந்தி—ராட்டைக்கும் என்ன சம்பந்தம். இது மேகத்திற்கு மேல் பறந்து கடைசியில் கழுநீர்ப்பானையில் விழுந்தது போல் இருந்தது. ஆனால் நாங்கள் மனக்கலக்கம் அடையவில்லை. மகாத்மா ஒரு வேளை எங்களைச் சோதிக்கிறாரோ என்று நினைத்தோம். எந்த வேலையிட்டாலும் செய்து முடிப்பது என்று வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பினோம். முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்று வந்ததை அனுபவித்துக்கொள்ள மனதைத் திடப்படுத்திக் கொண்டோம்.

வாலிபர் சங்க முடிவு

அன்றோடு வாலிபர் சங்கம் முடிவடைந்து விட்டது. அதன் பிறகு அங்கத்தினர்கள் திக்காலுக்கு ஒருவராகச் சிதறிப்போனார்கள், ஒருவரோடு ஒருவர் சம்பந்தம் வைத்துக் கொள்ள முடியாத பல வேலைகளில் ஈடுபட்டார்கள். ஆனால் பிற்காலத்தில் அவர்களில் ஒருவராவது தன்னுடைய தியாகத்தை நினைத்து வருந்தியதில்லை என்பதை நினைக்க நான் பெருமை யடைகிறேன்.

எங்களில் ஒருவரைத் தவிர மற்ற எவரும் வக்கீல் தொழிலுக்குத் திரும்பிப்போகவில்லை. எங்களுடைய தியாகத்தினல் வக்கீல் தொழிலுக்கு நஷ்டம் ஏற்படாமல் இருந்திருக்கலாம். ஏற்கனவே வக்கீல் தொழிலில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம். ஒரு வேளை எங்களுக்குள் ஒரு பாஷ்யம் அய்யங்காரோ, ஒரு மணி அய்யரோ இருந்து எங்களுடைய அறியாமையால் செய்த தியாகத்தின் பலனுல் அவர்கள் பிரகாசிக்க முடியாமல் போயிருக்கலாம்.

அடக்கத்தோடு எங்களுக்கு இட்ட வேலையை, எங்கள் சக்தியுள்ள அளவு செய்து வந்தோம். தனித்த முறையில் யோசித்துப் பார்த்தால் இந்த தியாகத்தால் எங்களில் ஒருவருக்கும் நஷ்டம் உண்டாகவில்லை. எங்களுடைய வாழ்க்கை விரிவும் உயர்வும் அடைந்துதானிருக்கிறது. லௌகீகத் துறையில் நாங்கள் பணக்காரர்களாக ஆகாமல் இருக்கலாம். ஆனல் சாதாரண வக்கீல்களின் மந்தமான வாழ்க்கைக்கு எட்டாத உயர்வும், தாழ்வும், சுவையும் எங்கள் வாழ்க்கையில் நிரம்பியிருக்கிறது. எங்களுடைய தியாகத்தைப்பற்றிப் பெருமை பேசிக்கொள்ளுவதற்கில்லை. தாஸ், நேருவைப் போன்று நாங்கள் பிரகாசிக்கவில்லை. ஆனல் அன்புள்ள வாசகர்கள் நினைத்துப்பார்க்கட்டும். பெரியோர்களின் கொடை தங்கள் பொற்குவியல்களிலிருந்து அள்ளி யெறியப்படுகின்றது. ஏழைகளின் கொடை தாம் குடிக்கும் கஞ்சியின் ஒரு பாகம். தனக்கு உள்ளதையே தானம் செய்ய முடியும். எங்களிடம் உள்ளவை அனைத்தையும் கொடுத்துவிட்டோம்.

வாலிப உள்ளம் அழியாது

வாலிபர் சங்கத்தை நாங்கள் வேண்டுமென்று கலைக்கவில்லை. ஆனால் நாங்கள் அகப்பட்டுக்கொண்ட அரசியல் கொந்தளிப்பில் அது நிலைநிற்கவில்லை. மாணவர் கண்ட கனவில் தோன்றிய அமைதியான ஏரியைக் கடப்பதற்கு ஒரு விளையாட்டுப் படகு கட்டினோம். ஆனால் எங்களுடைய விளையாட்டு வினையாக முடிந்து யுத்தக் கடலில் அகப்பட்டுக்கொண்டோம். சங்க அங்கத்தினர்கள் திசைக் கொருவராகப் பிரிந்து வெவ்வேறு யுத்தங்களில் ஈடுபட்டோம். அதன் பயனாக எங்களுக்கு வெவ்வேறு குணங்கள் அமைந்து ஒருவர்க்கொருவர் முரண்பட்ட அபிப்பிராயங்களைக் கொண்டோம். எங்களுக்குள் சந்திப்பு ஏற்படுவதுகூட அரிதாகிவிட்டது. எப்பொழுதாவது சந்தித்தாலும் எப்போதும் போலவே அபிப்பிராய ஒற்றுமையின்றி வர்க்கு வாதங்கள் செய்து கொள்ளுகிறோம். வயதாகி விட்டதால், கை கலந்து கொள்ளுவதில்லை. ஆனால் பேசிக் கொள்ளுவதே அடித்துக் கொள்ளுவது மாதிரி இருக்கும்.

அந்தக் காலத்தில் நான் அவர்களுக்குக் காரியதரிசியாக இருந்தேன். இப்பொழுது நான் எவருக்கும் பிரதிநிதியாக இருக்கவில்லை. இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் அவர்கள் ஒவ்வொருவரும் ஆட்சேபிப்பார்கள். இருந்தாலும் வார்த்தையளவில் அவர்கள் எவ்வளவு நிராகரித்தபோதிலும் அவர்களுக்காகவே நான் இதை எழுதுகிறேன். அதுமாத்திரம் அல்ல; இன்னும் ஒரு பெரிய பொறுப்பையும் நான் ஏற்றுக்

கொள்ளுகிறேன். மகாத்மாவிற்குத் தொண்டு செய்வதற்காகத் தங்களை மாய்த்துக்கொண்ட வாலிபர்களின் தலைமுறை சார்பில் நான் பேசுகிறேன். ஒரு விக்ரகத்துக்கு முன் தங்களை மாய்த்துக் கொள்வதற்காகத் துடி துடிக்கும் வாலிபர் தலைமுறைகள் அத்தனைக்காகவும் நான் இதை எழுதுகிறேன். ஆனால் ஒரு எச்சரிக்கை. யாரிடமிருந்தும் நான் அதிகாரம் பெறவில்லை. என்னுடைய வார்த்தைகளின் முழுப் பொறுப்பும் என்னையே சார்ந்தது.

முடிவு

என்னுடைய வாழ்க்கையில் நடத்திய ஆராய்ச்சியின் முடிவு என்னவென்றால், காந்தீயக் கொள்கை என்பது ஒரு மாயத்தோற்றம் என்பதேயாகும். இதைச் சொல்லும் பொழுது புகழ்ச்சிபெற்ற மகாத்மாவினிடம் எனக்குள்ள மரியாதையில் சிறிதளவும் குறைவு ஏற்படவில்லை. ஆனால், கொள்கை வேறு; நட்பு வேறு. நமது தேசத்தில் இந்த வித்தியாசம் பலருக்குப் புரிவதில்லை. இந்த வித்தியாசத்தை உணராதவர்களுக்கு இந்த புஸ்தகத்தின் அர்த்தம் விளங்காது; தப்பர்த்தம் செய்து கொண்டும் அவதிப்படுவார்கள்.

மகாத்மா உன்னத நிலையிலிருக்கிறார். அவரை நான் நேசித்திருக்கிறேன். பல வருஷங்கள் எனது உயிர் அவரது ஆணைக்குக் கீழ்ப்பட்டுக்கிடந்தது. ஆனால் என்றும் நான் அவரை வணங்கியதில்லை. அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டதோ, அவருக்கு நேரில் கீழே விழுந்து தண்டனிட்டதோ இல்லை. அம்மாதிரி செய்வது அருவெறுக்கத்தக்க பழக்

கம். அதை அவர் ஆரம்பத்திலிருந்தே அனுமதிக்காமல் இருந்திருக்கவேண்டும். அனி பெசன்ட் அம்மையார் ஏதோ ஒரு அவசரத்தில் மகாத்மா பட்டம் சூட்டி விட்டார். அந்தப் பட்டத்தை அவர் ஏற்காமல் அன்றே நிராகரித்திருந்தாரானால் மகாத்மா இன்றைய தினம் நம்மை யொத்த ஒரு சாதாரண மனிதராக விளங்கி பொது மக்களின் வாழ்க்கையில் ஒரு பெரிய புரட்சியை உண்டாக்கி யிருப்பார். ஆனால் மகாத்மாவான பிறகு மனிதத்துவத்தை இழந்துவிட்டார். மனிதத்துவத்துக்கு அப்பாற்பட்ட, இயற்கைக்கு விரோதமான ஒரு தோற்றமாக இன்றையதினம் மகாத்மா காட்சி அளிக்கிறார்.

நமது தேசத்தில், பாமர மக்கள் மகாத்மாவைத் தங்களைப் போன்ற மனிதர் என்று கருதுவதில்லை, அவர்களுடைய உள்ளத்தில், மகாத்மாவுடைய பேச்சும் அவருடைய செய்கையும் மகாத்மா ஒருவருக்குத்தான் தகுதியென்று எண்ணுகிறார்கள். மகாத்மா சொல்வதையும், செய்வதையும் சாதாரண மனிதர்கள் செய்வதற்குத் துணிவது பாவம். கிராமவாசிகளுடைய கனவில் மகாத்மா அடிக்கடி தோன்றி அவர்களுடைய சொந்த வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கிறார். சாவு வாழ்வுக்கு உட்பட்ட சாதாரண மனிதர்களுடைய நிலைக்கு மகாத்மா மேம்பட்டவர். அவரைப் பின்பற்றுவது என்பது நினைக்கக் கூடாத காரியம். தூரத்தில் நின்று அவருக்கு வணக்கம் செலுத்துவது மாத்திரமே செய்யக்கூடிய காரியம். அவருக்கு ஜே போட்டுவிட்டு,

அவரவர்கள் தங்கள் காரியத்தைப் பார்க்க வேண்டும். அவரை வணங்காவிட்டால் கட்டாயம் ஆபத்துவரும். இம்மாதிரி நான் எழுதுவது வீண் கோபத்தினால் என்று வாசகர் நினைக்காமல் இருக்கவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். வருத்தத்தில் மூழ்கி எழுதுகிறேனே ஒழியக் கோபத்தினால் அல்ல. உலக முழுவதும் கீர்த்திபெற்ற மகாத்மாவின் முன்னிலையில் நான் எம்மாத்திரம். மகாத்மாவுக்கு நான் மரியாதையே செலுத்துகிறேன். ஆனால் சுதந்தரங்களுக்கெல்லாம் அடிப்படையான அறிவுச் சுதந்தரத்தை அவர் அழித்து விட்டார்.

> பிரிட்டிஷார் நமது நாட்டை விட்டு மூட்டை முடிச்சுகளுடன் நாளையதினமே வெளியேறலாம். ஆனால் இந்தியா தேசம் ஒரு சிறைச்சாலையாகவே காட்சியளிக்கும். அந்தச் சிறைச்சாலையில் நாலா பக்கங்களிலும் இருந்து ஜெய கோஷங்கள் கிளம்பிக் கிடு கிடுக்கச் செய்யும். ஆனால் அறிவு என்னும் சூரியனிடமிருந்து ஒரு கிரணங்கூட உள்ளே செல்ல இடம் இருக்காது.

வனவாசம்

காந்தியக் கொள்கை ஒரு மாயக்கொள்கையென்று சொன்னேன். அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். அது ஒரு கொள்கையே அல்ல. தத்துவ அமைப்புக்கு அது ஒத்து வராது. தர்க்க ஆராய்ச்சிக்கு அது நிலை நிற்காது. மகாத்மாவின் மனப்போக்கு ஒரு கதம்பம். போகிற போக்கில் எது பலம் உள்ள

தாகத் தோன்றினாலும் அதை எடுத்து ஒரு ஆயுதமாக உபயோகித்துக் கொள்வார். அப்படி அவருடைய அனுபோகத்தில் கிடைத்தவைகளை அடுக்கி ஒரு முறையோடும் அமைத்துக் கொள்வதில்லை. அவருடைய திட்டங்கள் எல்லாம் நாலா பக்கங்களிலும் சம்பந்தா சம்பந்த மின்றிச் சிதறிக் கிடக்கின்றன.

தற்காலத்துப் பேராசிரியர் நூல்களை அவர் படிப்பதில்லை. பழங் காலத்துச் சாரமற்ற புராணங்களையே புரட்டிப் புரட்டிப் படிக்கிறார். மகா பாரதக் கதையில் உள்ள கீதையே அவருக்குத் தேவவாக்கு. சாதாரண மனிதனுக்கு அந்த தெய்வீகக் கட்டளையை அலசிப் பார்க்கும் உரிமை உண்டு என்பதை அவர் ஒப்புக் கொள்ளுவதில்லை. விஞ்ஞானமும், யந்திர நாகரிகமும் ஒரு சைத்தான் என்று கருதி அவற்றை நிராகரிக்கிறார். பழமையில் பட்டணங்கள், யந்திரசாலைகள், ரோடு, ரயில் இவைகள் இல்லாமல் மனிதன் இயற்கை வாசம் செய்த காலத்தையே பெரிதெனக் கருதி ஆசைப்படுகிறார். அவருடைய போதனைகள் எல்லாம் தற்கால நாகரீகத்தைப் புறக்கணித்து, மனிதர்களை வனவாசத்துக்கு அழைப்பதாகும். காந்தீயத்திற்கு ஒரு கொள்கை உண்டென்றால் அது இதுதான். இதற்கு மேம்பூச்சாகச் சமயத்திற்குத் தக்கவாறு பல பல திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. அவை தற்கால ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் ஒத்திருப்பதாக மகாத்மா சொல்லிக் கொள்வதுகூடக் கிடையாது. ரஸ்கின், டால்ஸ்டாய்க்குப் பிறகு, உலகத்தில் தோன்றிய அறிவாளிகளை அவர் மதிப்பதில்லை.

ஆனால் மகாத்மாவின் சிஷ்யகோடிகளில் பலர் விஞ்ஞானப் பேச்சுக்களை உபயோகித்துப் பழமையை நிலைநிறுத்த முயற்சிசெய்கிறார்கள். பொருளாதார சாஸ்திரப் பேராசிரியர், பிரின்ஸ்பால், ஆச்சாரியர் என்று நாமம் சூட்டிக்கொண்ட சிலர் விஞ்ஞானத்தின் புதிய பரிபாஷைகளை உபயோகித்து உளுத்துப் போன பழங் குப்பை கூளங்களுக்கு ஆதரவு தேடுகிறார்கள். புத்தி கூர்மையுள்ளவர்களுக்கு இந்தப் புரட்டு வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் அறியாத பாமரமக்கள் இந்தப் போலி விஞ்ஞானப் பிரசாரத்தால் ஏமாந்து விடுகிறார்கள்.

II

சூரியனை நோக்கிப் பிரயாணம்

காந்தீயத் திட்டத்திற்கு இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று பகிஷ்காரம், மற்றொன்று நிர்மாணம். இவை யிரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப்போல ஒன்றையொன்று ஆதரித்து நிற்கிறது. இந்த இரண்டு பகுதிகளிலும் இதுவரையில் எவை சாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சுருக்கிக் கூறுகிறேன்.

முதல் முதல் சாதித்தது 1920-ல் நடந்த சட்டசபை பகிஷ்காரம். அதன் பலன் சட்டசபைகளில் காங்கிரஸ் அல்லாதவர்கள் போய் நிறைந்தார்கள். இது தற் கொலைக்கு ஒப்பாகும் என்று ஸி. ஆர். தாஸ் எதிர்ப்பு ஆரம்பித்தார். நிராயுத பாணிகளான நமது மக்களுக்கு ஜனநாயக ஓட்டுரிமை எவ்வளவு அவசியம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அவர் ஒரு புதிய கட்சியை ஏற்படுத்தி இந்த பகிஷ்காரத்தைக் கைவிட்ச் செய்தார். சட்டசபைகள் விஷயத்தில் இன்றைய தினம் தாஸ் திட்டத்தையே காங்கிரஸ் கடைப்பிடித்திருக்கிறது. தற்போது காங்கிரசுக்குள்ள உயர்ந்த செல்வாக்கிற்குக் காரணம் தாஸ் திட்டந்தான்.

ஆனால் அந்தத் திட்டம் காந்தீயத்திற்கு நேர் எதிரிடையாக உள்ளது என்பதை மக்

கள் மறந்து விட்டார்கள், காந்தியம் ஒரு திட்டம்கூட அல்ல வெறும் சமயோசிதம் என்றிருந்தால்தான் அவ்வாறு மறந்துவிட முடியும். சட்டசபைகளில் பிற்போக்காளர்கள் உள்ளே நுழையாமல் தடுப்பதற்காகக் காங்கிரஸ்காரர்களே அவற்றைக் கைப்பற்ற வேண்டும் என்று இன்று மகாத்மாவே சொல்லுகிறார். இந்த வாதம் 1920-ல்கூட செல்லுபடியாகக் கூடியதென்பதை மகாத்மா மறந்து விட்டார். இந்த வாதத்தை ஜஸ்டிஸ் கட்சியார்கூடக் கையாண்டிருக்கலாம். 1920ல் ஜஸ்டிஸ் கட்சியார் சட்டசபைக்குள் போனதற்குக் காரணம் மற்ற பிற்போக்காளரை உள்ளே விடாமல் தடுப்பதற்காகத்தான் என்று அவர்கள் சொன்னார்கள். அதில் தவறு என்ன? தேச பக்தி என்பது எல்லாக் கட்சிக்கும் பொது. கொள்கையளவில் ஒவ்வொரு கட்சியினரும் மற்ற கட்சியினரைப் பிற்போக்காளர் என்றுதான் சொல்லிக்கொள்ளுகிறார்கள். மோசடி செய்கிறவர்கள் எல்லாக் கட்சிகளிலுந்தான் இருக்கிறார்கள். எல்லா ஸ்தாபனங்களிலுந்தான் ஊழல் இருக்கிறது. எந்தக் கட்சியும் ஊழலைச் சரியென்று சொல்லுவதில்லை. காங்கிரசில் உள்ளவர்கள் அனைவரும் பரிசுத்த ஆத்மாக்கள் அல்ல. ஆகவே சட்டசபை பகிஷ்காரம் என்னும் காந்தீயத்தின் முக்கிய அம்சம் மகாத்மாவின் பூரண சம்மதத்தோடும் ஒத்துழைப்போடும் துண்டிக்கப்பட்டு விட்டது.

இமயமலைபோன்ற தவறுகள்

பகிஷ்காரத்திட்டத்தின் மூன்று கூறுகளில் முதலாவது சட்டசபை பகிஷ்காரம்;

இரண்டாவது பள்ளிக்கூட பகிஷ்காரம்; மூன்ருவது கோர்ட்டு பகிஷ்காரம்; பிந்திய இரண்டும் முந்திய தன் கதியையே அடைந்தன. பள்ளிக்கூட பகிஷ்காரம் இமயமலை போன்ற தவறு என்று மகாத்மா தன் வாயாலேயே ஒப்புக்கொண்டு விட்டார். கோர்ட்டு பகிஷ்காரத்தைப்பற்றி யாருக்கும் நினைவு கூட இல்லை. காங்கிரசில் உள்ள பெரிய பெரிய தலைவர்களும், காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் வெளிப்படையாகவே வக்கீல் தொழில் நடத்துகிருர்கள். தகுந்த ஊதியமும் கிடைத்து வருகிறது. அதனுல் தேசத்திற்கும், நன்மையென்றே நினைத்துக் கொள்வோம்.

சூரிய மண்டலம்

காந்தீயம் என்னும் நாணயத்தின் பகிஷ்காரம் என்ற பக்கத்தைப் பார்வையிட்டோம். நிர்மாணத் திட்டம் என்னும் அடுத்த பக்கத்தைப் புரட்டிப்பார்ப்போம். நாகரீக முறை போக்கிலிருந்து மனிதர்களைத் திருப்பிக் காட்டுக்கழைக்கிற திட்டம் இது என்று முன்பே குறிப்பிட்டேன். இந்தத் திட்டத்தை உற்று நோக்கினுல் மகாத்மாவின் கதம்ப உள்ளம் வெளிப்படும்.

ஆதியில் ராட்டை, இந்தி என்ற இரண்டு அம்சங்களோடு வெளிக்கிளம்பினுர். பிறகு வழி நெடுக ஒன்ருென்ருகச் சேர்த்துக் கொண்டு, இப்பொழுது 18 அம்சங்கள் குவித்துவிட்டார். இன்னுங் கொஞ்ச காலத்தில் இந்தக் குவியல் இதைவிட பெரிதாகி 80 ஆகவோ, 100 ஆகவோ மாறலாம். மகாத்மாவின் பரிபாஷையில் இந்தக் குவியலில் நடு

நாயகமாக வீற்றிருப்பது ராட்டை என்னும் சூரியன். சூரியனைச் சுற்றி பூமி, சந்திரன், செவ்வாய், சனிபோன்ற கிரஹங்கள் எப்படி வட்டமிடுகின்றனவோ அதேபோல ராட்டையை மற்ற நிர்மாணத்திட்ட அம்சங்கள் சுற்றிச் சுற்றி வருகின்றன.

சூரிய ஆராய்ச்சி

இந்தச் சூரிய மண்டலத்தின் ரகசியத்தை அறிய வேண்டுமானால், அந்தச் சூரியனையே பிடித்துப் பரிசோதித்துப் பார்த்தால் உண்மை புலப்பட்டு விடும். நல்லவேளையாக அம்மாதிரி பரிசோதனை செய்வதற்கு எனக்குத் தாராளமாக இடம் கிடைத்தது. அதைப் பற்றி நான் ஒரு பெரிய புத்தகம் எழுதிவிடலாம். சில முக்கிய அம்சங்களைப்பற்றி மாத்திரம் நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

1920-ல் மகாத்மா எனக்கு இட்ட கட்டளையை அப்படியே நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற ஆவல் மேலிட்டு, ராட்டையைத் தலையில் சுமந்துகொண்டு வெயிலிலும், மழையிலும் தென்னாற்காடு ஜில்லாக் கிராமங்களில் சுற்றினேன். எனக்கு இவ்விஷயத்திலிருந்த ஆவேசத்தை மாகாண காங்கிரஸ் கமிட்டியில் உள்ள பெரியோர் மதித்துத் தமிழ் நாட்டின் 14 ஜில்லாக்களிலும் ராட்டை அமைப்பு வேலைத் திட்டத்தை என்னிடம் ஒப்புவித்தார்கள். பிறகு ஏற்பட்ட தமிழ் நாடு கதர் போர்டுக்குக் காரியதரிசியாக இருந்தேன்.

அதன் பிறகு சட்டசபைப் பிரவேசத்தைப்பற்றி சி. ஆர். தாசுக்கும், மகாத்மாவுக்

கும் நடந்த போராட்டத்தில் மகாத்மா தோல்வி யடைந்தார். தோல்விக்குப்பின் அரசியலிலிருந்து விலகி ராட்டை வேலையில் மாத்திரம் தன் முழுகவனத்தையும் செலுத்துவதாகத் தீர்மானித்தார். அகில பாரத சர்க்கா சங்கத்தை ஆரம்பித்தார். அக்காலத்தில் தமிழ் நாட்டில் அச்சங்கத்திற்கு நான் முதல் காரியதரிசியாக இருந்தேன்.

என்னுடைய வாலிப பருவத்தில் நான் ஒரு அவசரக் குடுக்கையாக விளங்கினேன் மூன்று வருஷகாலம் என்னுடைய முழு சக்தியையும் உபயோகித்துக் கதர்த்திட்டத்தில் வெற்றிபெற முயற்சித்தேன். இந்தப் பழம் பாண்டத்திற்குப் புது மெருகு கொடுத்தேன். மேம் பூச்சாக எண்ணிக்கை யளவில் ஓரளவு முற்போக்கு அடைந்ததுபோல் காணப்பட்டது. ஆனால் அந்தரங்கத்தில் அதனுடைய உயிர் நாடி அடிக்க ஆரம்பிக்கவில்லை. இந்த வேலையில் மூழ்கி என்னைப்போல் இதே வேலையில் ஈடுபட்ட எனது தோழர்களோடு கலந்து ஆராய்ச்சி செய்ததில் கொஞ்சங் கொஞ்சமாக எனது நம்பிக்கை குறைந்து இந்தப் பழம் பாண்டத்திற்கு முலாம் பூசிப் பிரயோசனமில்லையென்று கண்டு கொண்டேன். ராட்டை வெகு காலத்திற்கு முன்பே உயிரற்று சவமாய்ப் போய்விட்டது. நான் ராட்டைக்குத் தொண்டு செய்வது பிணத்தைக் காதலிப்பது போன்றது என்று கண்டு அருவெறுப்படைந்தேன்.

எனது சங்கட்த்தை மகாத்மாவிடம் தெரிவித்தேன். அவர் அதைப் புரிந்துகொள்ள வில்லை. நான் கண்ட உண்மையை அவர் பரி

சோதிக்கவில்லை. அவருக்கு அதைப் பரி சோதிக்கும் சக்தி யில்லையோ, அல்லது பரி சோதிக்க இஷ்டமில்லையோ? இவ்விஷயத்தில் அவருடைய மனம் மரத்துப் போயிற்று. எப் படியும் ராட்டை அவரது வாழ்க்கைக்கு நீக்க முடியாத அவசியமாகிவிட்டது; அவருடைய கொள்கைக்கு இன்றியமையாத அடையாள மாகப்போய்விட்டது. அவருடைய பேச்சுக் களாகியமாலைகளைத் தொங்கவிடுவதற்கு அது ஒரு ஆணிபோல உதவியது. அம்மாதிரி அடையாளங்களும் வேஷங்களும் நிறைந்த வாழ்க்கைக்கு நான் தயாராக இல்லை. ஆகவே ராட்டைச் சங்கத்திலிருந்து நான் ராஜிநாமாச் செய்தேன். பத்திரிகைகளில் கதர் பொரு ளாதாரத் திட்டத்தைக் கண்டித்துப் பல வியாசங்களை வெளியிட்டு என்னுடைய ஆத் திரத்தைத் தீர்த்துக் கொண்டேன்.

காந்தீயத்திற்கு ராட்டையே அஸ்திவாரம் என்பது எனக்குத் தெரியும். ராட்டையைத் தாக்கினால் காந்தீயத்தின் ஒவ்வொரு அம்சத் திற்கும் நான் விரோதியாகி விடுவேன் என் பதை நான் உணர்ந்திருந்தேன். சாதாரண பொருளாதார அரசியல் சம்பவங்களையும் மத வேஷம் போட்டு மிகைப் படுத்தும் பூதஞ்சி யோடு நான் போராட நேரிடும் என்பதையும் உணர்ந்தேன். மாணவப் பிராயத்தில் தத் துவ சாஸ்திரம் கற்றிருந்தேன். ஆகவே மகாத்மாவின் அந்தராத்மா வாக்குப் போன்ற வைகள் எல்லாம் இயற்கை உணர்ச்சிகளையே பிரதானமாக்கி மனிதனை மிருகப் பிராயத்திற் குத் திருப்பும் என்பதை நான் உணர்ந்திருந் தேன்.

மகாத்மாவிடம் எனக்கு ஏற்பட்ட மோகத்தினால் நான் பலவந்தமாக உட்கொண்ட மத போதையானது என்னைத் தீவிர நாஸ்திகத்தில் கொண்டுபோய் விட்டது. அதன் காரணமாகத் தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பிப்பதில் பங்கெடுத்துக் கொண்டேன். ஆனால் நமது மக்கள் பக்குவமடையாத காரணத்தினால் அந்த இயக்கம் விபரீதமாக மாறி அதனுடைய நோக்கத்திற்கு நேர் எதிர்மாறான கறுப்புச்சட்டைகளை உற்பத்தி செய்து விட்டது.

பிறகு நான் வெளிநாட்டுப் பிரயாணம் கிளம்பி சோவியத் ரஷ்யாவுக்குப் போனேன். இந்தப் புஸ்தகத்தை என்னுடைய சுய சரிதமாக்க நான் விரும்பவில்லையாதலால் அந்தச் சம்பவங்களை யெல்லாம் விவரிக்க விரும்பவில்லை. ராட்டைக்கே திரும்பிச் செல்வோம்.

குட்டிக்கரணம்

பத்து வருஷங்களுக்குப் பின், ஒரு ஆச்சரியமான சம்பவம். சென்னைச் சட்டசபையில் மந்திரிகள் ஆசனத்தில் நின்று பேசுகிறேன். ராட்டைக்கு வருஷத்திற்கு இரண்டு லட்ச ரூபாய் மான்யம் ஒதுக்கி வைக்கவேண்டும் என்று வரவு செலவுத் திட்ட விவாதத்தில் வந்த பிரரேபணையை ஆதரித்தேன். எதிர்க்கட்சியினர் ராட்டைக்கு எதிராக நான் பேசியிருந்ததையும், எழுதியிருந்ததையும் மேற்கோள்ளாகக் காட்டி என்னைப் புரளி செய்தார்கள். வாஸ்தவத்தில் என்னுடைய கஷ்டத்தை சமயோசிதம்தானா? அவசரப்பட்ட வாசகர்கள் அப்படியே என்னைக் கண்டித்து விடலாம். ஆனால் மனித வாழ்க்கையின்

நுணுக்கத்தைக் கண்டு பிடிக்க ஆசைப்பட்ட வர்கள் எதிலும் ஆத்திரப்பட்டு முடிவுக்கு வரக்கூடாதென்று எச்சரிக்கை செய்கிறேன். பொறுமையோடு என்னுடைய நிலையை விளக்கிக் காட்டுகிறேன். முதலில் ஒரு திருஷ்டாந்தம்.

ருஷ்யக் கதை

ருஷியாவில் நான் அலைந்து கொண்டிருந்தபொழுது சிமென்ட் என்ற ஒரு கதைப் புத்தகத்தைப் படித்தேன். அந்தக் கதையில் ஒரு கதாபாத்திரம் என்னைப் போன்று ஒரு சங்கடத்தில் மாட்டிக்கொண்டார். அவர் சிமென்ட் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்யும் எஞ்சினியர். ருஷியப் புரட்சியில் நடந்த கலவரங்களுக்கிடையே அந்தத் தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களை வெகு கவனமாகவும், தைரியமாகவும் பாதுகாத்துவந்தார். பழைய முதலாளித் துவத்தின் கொள்கையில் அவர் வளர்க்கப்பட்டவர். தொழிற்சாலைகளைச் சுட்டுப் பொசுக்கி விஞ்ஞானிகளையும் எஞ்சினியர்களையும் கொலை செய்த ருஷியப் புரட்சியைக் கண்டு பயந்து அதை நிராகரித்தார். பழைய ஏற்பாட்டை ஆதரித்தவர் என்ற முறையில் அவர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருந்தது. ஆனால் கடைசியில் புரட்சி வெற்றியோடு முடிவடைந்ததும், புரட்சியாளர்கள் அனைவரும் நிர்மாணத் திட்டத்திற்குத் திரும்பினார்கள். புரட்சியின்போது எரிந்தும் கொள்ளை போனதும் போக மீதமான தொழிற்சாலைகளைத் திரும்ப ஆரம்பிப்பது அவசியமாகப் போய்விட்டது. அதற்கு எஞ்சினியர்கள் அத்யாவசியம்.

பழய முதலாளித் துவத்தை ஆதரித்த மேலே குறிப்பிட்ட எஞ்சினியரைப் புரட்சியாளரின் ஆட்சிக்குக்கீழ் தொழிற்சாலையை நடத்த அழைத்தார்கள். அப்பொழுது அந்த எஞ்சினியருக்கு ஒரு சோதனை காலமாகப் போய்விட்டது. அவரைப் பாலூட்டி வளர்த்த பழய ஏற்பாட்டையே அவர் மனதில் ஆதரித்து வந்தார். ஆனால் அது இருந்த விடம் தெரியாமல் மறைந்து போய்விட்டது. அது திரும்பி வராது என்ற நிச்சயமும் அவருக்கு ஏற்பட்டு விட்டது. தன்னைச் சுற்றியுள்ளவர்கள், தன்னோடு பிறந்து வளர்ந்த மக்கள், தன் தேசத்தவர், தன் தேசம் இவைகள் எல்லாம் தான் வெறுக்கும் புதிய ஏற்பாட்டினிடத்தில் மோகம் கொண்டு விட்டன. தன்னுடைய நாடு மோகித்தது, தன்னுடைய நாட்டுக்கு அவசியமானது எதுவாயிருந்தாலும் அதை ஆதரிப்பது தன்னுடைய கடமையல்லவா? தன்னுடைய மக்கள் தவறான வழியில் போன போதிலுங்கூட அவர்களுக்கு ஒரு தீங்கு வராமல் பாதுகாக்கவேண்டியது கடமையல்லவா? வாழ்விலும் தாழ்விலும் தன்னுடைய மக்களோடு ஒத்துழைக்காத வாழ்க்கையில் என்ன சத்திருக்கிறது. ஆகையால் அந்தக் கதையில் உள்ள எஞ்சினியர் புரட்சி சரியென்று ஒத்துக் கொள்ளாவிட்டாலும் புரட்சிக்காரர்களான தன் நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்ய ஒத்துக்கொண்டார். அதே மனோநிலையில்தான் 1937-ஆம் வருஷத் தேர்தலில் காங்கிரஸ் டிக்கட்டில் நின்று பிறகு மந்திரிப்பதவியையும் ஒப்புக்கொண்டேன்.

ஜவகரிடம் நம்பிக்கை

இரண்டாவது காரணம் ஒன்றுண்டு. வாலிப இந்தியாவுக்கு ஊக்க மூட்டிவரும் ஜவஹர்லால் நேரு புது உலகத்தைச் சேர்ந்தவர். காலையில் எழுந்து அவர் கீதை பாராயணம் செய்வதில்லை. அவருக்குச் சர்வதேச உணர்ச்சியும், சமதர்மப்பற்றும் உண்டு. நமது நாட்டின் எதிர் காலத்தலைவர் அவரேயாவர். அவர் தலைமை ஸ்தானத்தை அடைந்த பிறகு, தேசம் ராட்டை மனப்பான்மையைக் கைவிட்டு நவீனத்தைப் பின்பற்றும்.

என்னுடைய மனமாற்றத்திற்குக் காரணமாக மேலே கண்ட இரண்டு காரணங்களையும் வாசகர்கள் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக்கொள்ளாவிட்டாலும் சரி. நடந்தது நடந்துவிட்டது. நான் மனதாரக்கண்ட உண்மையை கலைக்கு உதவாதது என்று நீக்கிவைத்தேன். கதர்தரித்து ராட்டைப் பிரசாரம் செய்தேன்.

யுத்தகாலத் தேவை

இரண்டு வருஷங்கள் கழித்து மற்றுமொரு சோதனை எனக்கு ஏற்பட்டது. இரண்டாவது உலக யுத்தம் மூண்டது. ஒப்புக்குக் கூட நம்முடைய சம்மதத்தைக் கேட்காமல் இந்தியாவை யுத்தத்தில் சம்பந்தப்படுத்திவிட்டார்கள். இந்த அவமானத்தைத் தாங்காமல் மாகாண காங்கிரஸ் அரசாங்கங்கள் ராஜிநாமாச்செய்யவேண்டியிருந்தது. பொறுப்பில்லாத வேலையை விட்டு விடுவதில் எனக்கு மன வருத்தமேயில்லை. ஆனால்

திடீரென்று நான் வெகு காலத்திற்கு முன்பு விட்டு விட்ட தமிழ் நாட்டுராட்டைச் சங்க வேலையை மீண்டும் நானே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மேலாவிலிருந்து தாக்கீது பிறந்தது. பயந்துவிட்டேன். ஆயினும் கீழ்ப் படியாமல் இருக்க முடிய வில்லை. கொஞ்சம் காலதாமதம் செய்வதற்காக ஒத்தி வாங்கிக் கொண்டேன். அதற்குள் ஜப்பானுக்குப் பிரயாணமானேன். ஜப்பானிலிருந்து திரும்பு வதற்குள் வேறு யாரையாவது நியமனம் செய்து பழயதாக்கீது காலாவதியாகி விடும் என்று நான் நினைத்தேன். ஆனால் அம் மாதிரி ஒன்றும் நடைபெற வில்லை. ஆதலால் மறுபடியும் எந்த வேலையைப்பற்றி ஒரு காலத்தில் தீவிரமாகக் கண்டித்தேனோ அதை நானே மேற்கொண்டேன்.

வெறும் கட்சிக்கட்டுப்பாட்டுக்கு உட் பட்டு மாத்திரம் இவ்வாறு நடந்தேன் என்று நினைக்கவேண்டாம். ராட்டை காலாவதியாகி விட்டது என்ற உறுதிமாத்திரம் என் உள் ளத்தில் ஊன்றியிருந்தது. ஆனால் காலா வதியான பலசாமன்கள் பழக்கத்தில் இருந்து வருகின்றன. நான் கிழக்காசியாவில்யாத்திரை செய்தபோது வழி நெடுக லட்சக்கணக்கில், **சம்பான்** என்ற சிறு படகும் **ரிக்ஷாவும்** புரா தனமான வைகளாயினும் உபயோகத்திலி ருந்து வருவதை நான் கண்ணாரக்கண்டேன்.

நவீன நாகரிகப்போட்டியில் பின் தங்கி யிருக்கும் பல தேசங்களில் யந்திர வசதிகள் கிடைப்பதில்லை. மக்கள் ஏழ்மையில் வாழ் வதால் எந்தத் தொழிலையும் நடத்தப் பணம் பெற்ற யந்திரங்களை வைத்து போஷிப்பதை

விட மலிவாகக்கிடைக்கும் மனிதர்களை உபயோகித்துக்கொள்வது அந்தத் தொழில் நடத்தும் முதலாளிகளுக்கு ஸர்பகரமாயிருக்கிறது. வண்டியிழுப்பதற்கு பெட்ரோல் பவரை உபயோகிப்பதைவிட அரிசிப்பவரை உபயோகிப்பதில் லாபம் உண்டு என்று ஒரு பழமொழியிருக்கிறது.

மேலும் அப்பொழுது நடைபெற்ற உலக யுத்தத்தில் பெரும் பெரும் மாறுதல்களை நான் எதிர்பார்த்தேன். நான் ஜப்பானில் யுத்த முஸ்தீபுகளை நேரில் கண்டதால் ஜப்பானியப்படை கூடிய சீக்கிரம் இந்திய எல்லைக்கு வந்து விடும் என்று எதிர்பார்த்தேன். எப்படியிருந்தாலும் இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்கும் உள்ள போக்கு வரவு தடைப்படுவது நிச்சயம். தற்காலிகமாகவாவது மாட்டு வண்டியும், நாட்டு ஓடமும், ராட்டைச் சக்கரமும் உபயோகப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் நமது நாட்டுக்கு ஏற்பட்டுவிடும். உலகக் கொந்தளிப்பின் ஆதரவில் ராட்டை உண்மையாகவே உயிர் பெற்று மக்களுக்குச் சேவை செய்யும் சந்தர்ப்பம் அதற்குக் கிடைத்து விட்டது.

யுத்த காலத்திய அரசாங்கங்கள் எல்லாம் யுத்த முஸ்தீப்பில் ஈடுபட்டிருக்கும் ரயில் பாதைகளின் வேலைகளை அதிகரிக்காமல் பொதுஜனங்கள் நாட்டு வண்டிகளையும் ஓடங்களையும் உபயோகப்படுத்த வேண்டும் என்று தீவிர பிரசாரம் செய்து வந்தன. நானும் அதைப்போலவே, யுத்தத்திற்காகத் துணிகளை உற்பத்தி செய்யும் மில்களைக் பகிஷ்கரித்து ராட்டைக்கு ஏன் ஆதரவு தேடக்கூடாது?

விபின் சந்திரபாலர்

ராட்டைப் பணிக்கு நான் திரும்பிப் போனதற்கு வேறொரு காரணமும் உண்டு. நான் சிறு பிள்ளையாயிருந்தபொழுது விபின் சந்திரபால் சென்னைக் கடல்கரையில் செய்த பிரசங்கங்களை ருசியோடு படித்திருந்தேன். நம்முடைய தேசத்தை ஆளும் அந்நியரை வெல்வது எவ்வளவு சுலபம் என்பதைத் தெளிவாக்குவதற்காக அவர் ஒரு உவமை யைக் கையாண்டிருந்தார். அதாவது இந்திய மக்கள் எல்லோரும் இங்குள்ள அந்நியர்களை நோக்கி ஒரு முகமாக காறி உமிழ்வார்களே யானால் அந்த எச்சிலிலேயே வெள்ளையர்கள் மூழ்கி இறந்து விடுவார்கள் என்பதுதான்.

இந்த உவமை கொஞ்சம் மட்டரகமா யிருந்தாலும் கூட அதில் உள்ள வாதத்தில் உண்மை உண்டு. இந்தியாவினுடைய ஜனத் தொகை எண்ணத்தில் அடங்காத அளவு பிரமாண்டமானது. அவர்கள் அவ்வளவு பேரும் ஒரு மனப்பட்டு எந்தக் காரியத்தைத் தொட்டாலும் அது வெற்றியடைந்தே தீரும். ஆகவே விபின் சந்திரபால் எண்ணிய மாதிரியுள்ள ஒரு முயற்சியில் இறங்குவதற்கு, ராட்டை ஏன் சாதனமாக இருக்கக்கூடாது? காறி உமிழ்வதில் ஏற்படுகிற வெற்றி, நூல் நூற்பதில் ஏற்படாமலா போய்விடும்? ஆனால் காறி உமிழ்வதானாலும் வேறு எந்தத் திட்டத் தைக் கையாள்வதானாலும் அதற்குத் தகுந்த கட்டுப் பாட்டுடனும் உறுதியுடனும் வேலை யில் இறங்கினால்தான் வெற்றி கிடைக்கும் என்பதை நான் அறிந்திருந்தேன்.

உமிழ்வதற்குப் புதுத்திட்டம் தேவையே யில்லை. நமது நாட்டில் எங்கே பார்த்தாலும், வரை துறையின்றிக் கண்ட விடங்களில் எல்லாம் தூ தூ என்று ஜனங்கள் துப்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதனால், பால் நினைத்ததன்படி எதிரிகளுக்குக் கஷ்டம் ஒன்றும் வராமல் நமது மக்களிடையேதான் அசுத்தமும் நோய்களும் பெருகிக்கொண்டு வருகின்றன. பாலுடைய பிரசங்கத்தின் அந்தரங்கம் என்னவென்றால் இந்தியர்கள் உண்மையுடனும் உறுதியுடனும் தங்களுடைய அடிமைத்தனத்தை நீக்கிக் கொள்ளுவதற்குப் போராடவேண்டும் என்பதே.

மகாத்மாவின் சர்க்காடகப்போக்கைப்பற்றி எனக்கு அதிர்ப்தி ஏற்பட்டிருந்த போதிலும் அவருடைய அந்தரங்க உண்மையிலும் உறுதியிலும் எனக்கு நம்பிக்கையிருந்தது. ஆதலின் நான் வேறு யோசனை செய்யாமல் கதர்த்தொண்டில் மறுபடியும் குதித்தேன்.

பரதாநந்தா

ராட்டை வேலை எனக்குத் தண்ணீர்பட்டபாடு. அந்த வேலையில் உள்ள நுணுக்கங்கள், தடைகள், ஆபத்துக்கள், மோசடிகள் அவற்றை யெல்லாம் தீர்க்கும் மார்க்கங்கள், இவைகளை யெல்லாம் நான் நன்கு அறிவேன். பிறகு இரண்டு வருஷங்கள் மனதைச் சிதற விடாமல் மும்முரமாக அந்த வேலையை நடத்தினேன். அது சமயம் யுத்த காலமானதால், மற்ற காலங்களில் கிடைக்காத ஒரு ஆதரவும் எனக்குக் கிடைத்தது. கதரைவிட மில் துணியின் விலை அதிகமாக ஏறிவிட்டது.

ஆதலால் பிரச்சாரம் பண்ணி ஜனங்களின் தேசபக்தியை எழுப்பிவிட்டால்தான் கதர் விற்பனையாகுமென்ற கஷ்டமில்லை. உற்பத்தியாகும் சரக்குகள் முழுவதும் உடனுக்குடன் விற்பனையாகி விட்டது.

கஷ்டமுள்ள இடம் உற்பத்தியே தவிர விற்பனை அல்ல. இந்த நாட்டைப் பீடித்திருக்கும் நீங்காத வறுமையின் காரணமாக எப்பொழுதும் வேலையாள் பஞ்சம் ஏற்படுவதேயில்லை. தேவைக்கு அதிகமாகவே நூற்பவர்கள் கிடைத்து வந்தார்கள். செய்யவேண்டிய முக்கிய வேலை உற்பத்திக்கு அனுசரணையான ராட்டைகளையும், பஞ்சையும் சேமித்து நூற்பவர்களுக்கு விநியோகிப்பதுதான். ராட்டினங்கள் ஆயிரக்கணக்கில் அல்ல லட்சக்கணக்கில் தேவையாக இருந்தன. கிராமாந்தரத்தில் உள்ள தச்சர்களை மாத்திரம் நம்பி யிருந்தால் அவ்வளவு ராட்டைகளை உற்பத்தி செய்திருக்கமுடியாது. தச்சர்களின் எண்ணிக்கையே குறைவு, சண்டைக் காலத்தில் அவர்களுக்கிருந்த கிராக்கியில் ராட்டை செய்யும் வேலையில் அவர்களுக்கு மோகமும் உண்டாகவில்லை. ஆகவே அதற்கென ஒரு தொழிற்சாலை அமைத்து யந்திரங்களின் மூலம் இந்த வேலையைச் சுலபத்தில் செய்து முடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தேன்.

அதிர்ஷ்டவசமாக அச்சமயம் எனது நண்பர் மாரிஸ் பிரீட்மென் என்னும் போலண்டு தேசத்து என்சினியர் எனது உதவிக்கு வந்து ஒரு தொழிற்சாலைக்குத் திட்டம் அமைத்துக் கொடுத்தார். பிரீட்மென் இந்து மதத்தைத் தழுவி யிருக்கிறார்.

யரதாநந்தா என்று ஆசையோடு தனக்கு மறு பெயர் சூட்டிக் கொண்டிருக்கிறார். யந்திர சாதனங்களில் புதிய அமைப்புகளைக் கண்டு பிடிப்பதில் வல்லவராக இருந்தாலும் அவர் ஒரு தத்துவ ஞானியாகவே விளங்கு கிறார்.

திருப்பூருக்கு அருகில் உள்ள காந்தி நகரில் அவருடைய மேற்பார்வையின் கீழ் ராட்டை உற்பத்திச் சாலை ஒன்றை அமைத் தேன். ராட்டைக்குப் புதுமை வேஷம் போடு வதற்குச் செய்த கடைசி யத்தனத்தின் ஞாப கச் சின்னமாக இன்றைக்கும் அது விளங்கு கிறது. ராட்டைப் பணியில் தனது வாலிப பருவத்தைப் பறிகொடுத்த அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாஜிக் காரியதரிசியான சங்கர்லால் பாங்கர் பெயரை அதற்குச் சூட்டி னோம்.

சங்கர் லால் பட்டரை

திருப்பூருக்குத் தெற்கே அவிநாசி க்ஷேத்திரத்திற்குப் போகும் சாலையில் இரண் டாவது மைலில் ஒரு தோட்டமும் அதற்குள் சில குடிசை வரிசைகளும் தென்படுகின்றன. அதைக் காண்பவர்களின் மனதில் அது ஒரு தொழிற்சாலை என்ற எண்ணம் தோன்று வதில்லை. சாதாரண தொழிற் சாலைகளில் உள்ள விகாரமான பெரிய கட்டிடங்கள், புகை போக்கிகள் ஜனநெருக்க முள்ள ஆபாச விடுதிகள் இவை ஒன்றும் அங்கில்லை. நமது நாட்டுக் கிராமங்களில் உள்ள துர்நாற்றமும், குப்பை கூளங்களும் அங்கே இல்லை.

வழிப் போக்கர் உள்ளே சென்று பார்க்க ஆசைப் பட்டால் வெளிவாசலில் நின்று அனுமதி கேட்க வேண்டும். அவருக்கு அனுமதி கிடைத்து அவர் உள்ளே சென்றதும் மனதிற்கு ரம்மியமான ஒரு காட்சியைக் காண்பார். தற்கால விஞ்ஞான அறிவை சரியாக உபயோகப்படுத்தினால் ஒரு கிராம வாழ்க்கை எவ்வித முற்போக்கடையும் என்பதை அவர் நேரில் காணலாம். பட்டணங்களில் மாத்திரம் கிடைக்கும் எல்லாவிதமான வசதிகளும் அங்கே கிராமத்தாருக்கு வழங்கப் பட்டிருக்கின்றன என்பதைக் காண்பார்.

தண்ணீரால் தானே சுத்தம் செய்து கொள்ளும் பிளஷ் கக்கூஸ்கள், மின்சார வசதிகள், ரேடியோ, டெலிபோன், போக்குவரத்து வசதிகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. அங்கே தொண்டர் விடுதிகள் உண்டு. பள்ளிக்கூடம், விளையாடும் இடம், சாப்பாட்டுக்குப் பொது இடம், பசுக்கள், காளைகள், வண்டிகள் எல்லாம் உள்ளன. தோட்டத்தில் புஷ்பங்களும் காய்கறிகளும் ஏராளம். தேனீ வளர்த்தல், நூற்றல், பஞ்சு கொட்டுதல் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. இம்மாதிரி ஒரு பூலோக கைலாசத்தைச் சிருஷ்டி செய்த பெருமை என்னைச் சார்ந்ததல்ல. தமிழ் நாட்டில் கதர் சேவைக்கென்றே தங்கள் வாழ்நாளைத் தத்தம் செய்து பணியாற்றும் தொண்டர் கூட்டத்தையே அந்தப் பெருமை சேரும். அவர்கள் ஆசையோடு பல கனவுகள் கண்டு அக்கனவுகளை

னைவாக்கப் பல வருஷங்கள் உழைத்தார்கள். பரிதாபம்! அவர்கள் உழைப்பு பலன் தர வில்லை.

அந்தத் தோட்டத்திலிருக்கும் சாயச் சாலையைக் கட்டியவர் எனக்குமுன் வேலை பார்த்த அய்யாமுத்து. நான் சேர்த்தது சங்கர்லால் பட்டரையைத்தான். அந்தப்பட்டரையில் நடைபெறும் அனேக வேலைகள் கையால் தான் செய்யப்படுகின்றன. சில வேலைகள் மாத்திரம் மின்சாரத்தால் இயங்கும் யந்திரங்களால் நடைபெறுகின்றன. யந்திரங்கள் இருந்த போதிலும் சாதாரண தொழிற்சாலைகளில் காணப்படுவதுபோல நாடாக்களும் சக்கரங்களும் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டு கண்ணை மயக்கவில்லை. யந்திரங்கள் எல்லாம் தனித் தனிக் குடிசைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன. எல்லா யந்திரங்களேயும் பொதுவில் சக்கரங்களின் மூலமும் நாடாக்களின் மூலமும் ஓட்டாமல், தனித்தனியே சிறு சிறு மோட்டார்கள் மூலம் இயக்கப்படுகின்றன.

ஒரு மூலையில் இரும்பைக் காய்ச்சி, ராட்டைக்கான அச்சுகளும், இரிசுகளும் ஊற்று கிறார்கள். தனித் தனிக் குடிசைகளில் ராட்டையின் மற்ற பாகங்கள் மரத்திலும் இரும்பிலும் மிஷின்களால் செதுக்கப்பட்டு, இழைக்கப் பட்டு, துண்டிக்கப்பட்டு, அளவோடு உருவாக்கப்படுகின்றன. யந்திரங்களெல்லாம் குடிசைத் தொழிலுக்கு ஏற்றபடி எவ்வளவு சிறிதாக அமைக்க முடியுமோ அவ்வளவு சிறிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற தொழிற் சாலைகளில் உள்ள சப்தம் ஜனக்குழப்பம் அங்கேயில்லை. ஒவ்வொரு குடிசையிலும் நடக்கும்

வேலைக்குத் தகுந்த அளவுள்ள கருவிகள் மாத்திரம் பூரணமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

தொழிற்சாலை, சாயப்பட்டரை முதலிய காந்தி நகரில் உள்ள எல்லா இலாக்காக்களிலும் மொத்தமாக சுமார் 150 பேர் வேலை செய்கின்றனர். இவர்களுடைய வேலை 6 ஏக்கர் விஸ்தீரணமுள்ள அத்தோட்டம் முழுவதும் பரவி யிருப்பதால் ஜன நெருக்கடி யில்லை. அந்த ஜில்லாவில் உள்ள சிறு கிராமங்களில் கூட இதைவிட நெருக்கடி அதிகம்.

நாங்கள் போட்ட திட்டப்படி சங்கர்லால் பட்டரை வளர்ச்சி அடைந்திருக்குமானால் இன்றைய தினம் நமது நாட்டில் உள்ள சாதாரண ஒரு முழு கிராமத்தின் அளவு அது பெருகியிருக்கும். ஆனால் அதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் கருவிகள் இந்த மாகாணத்தில் உள்ள கிராமக் கைத்தொழில்கள் அனைத்தையும் நடத்தப் போதியனவாக இருக்கும்.

அரசாங்க உதவி

இந்த இடத்தில் சென்னையில் நடைபெற்ற ஆலோசகர் அரசாங்கம் எனக்குக் கொடுத்த உதவியைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அவர்கள் ஏற்கனவே வரவு செலவுத் திட்டத்தில் காங்கிரஸ் மந்திரி சபையால் ஏற்படுத்தப்பட்ட மான்யத்தை நிறுத்தாமல் என்னிடம் அளித்த தோடுகூட, சங்கர்லால் பட்டரைக்கு ஏற்பட்ட கட்டிடச் செலவு, யந்திர விலை முதலியவைகளுக்காகத் தனி மானியமும் புதிதாகக் கொடுத்தார்கள். மற்ற மாகாண அரசாங்கங்கள் காங்கிரஸ் நிர்மாண

வேலைகளுக்குத் தடைகள் ஏற்படுத்தி யிருக்கலாம். ஆனால் சென்னை அரசாங்கம் மட்டிலும் அந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் எங்களுக்கு எவ்வித தடையும் ஏற்படுத்தாததோடு அவர்களுடைய யுக்திக்கும் சக்திக்கும் தக்கவாறு உதவியேசெய்து வந்தார்கள்.

ரகசியப்புகார்

நான் கோரியிருந்தபடி ஏராளமான கதர் உற்பத்திக்கு வேண்டிய அளவு ராட்டைகள் சப்ளை செய்வதற்கு சங்கர்லால் பட்டரைமூலம் வழி ஏற்பட்டுவிட்டது. அடுத்தபடியாக பஞ்சு வாங்கிச் சேமித்துவைத்து அவற்றை நூற்பவர்களுக்கு விநியோகம் செய்வதுதான் முக்கிய வேலை. இதற்குப் பணந்தான் பிரதானம். தமிழ் நாட்டுக்கென என்னிட மிருந்த பணம், சாதாரண காலத்திற்குத்தான் போதுமேயொழிய, யுத்த காலத்தை யொட்டி நாங்கள் போட்டிருந்த பெருத்த திட்டத்திற்குக் கொஞ்சங்கூட் போதாது. ஆகவே பண உதவி வேண்டும் என்று தலைமை ஆபீசுக்கு எழுதினேன். முடியுமானால் மேலே யிருந்து பணம் அனுப்பவேண்டும் என்றும், இல்லாவிட்டால் 4 லட்ச ரூபாய் கடன் வாங்குதற்கு இங்கே நாங்கள் பத்துவரவு செய்துவரும் பாங்கியிற் செய்திருந்த ஏற்பாட்டை அங்கீகரிக்குமாறும் கேட்டிருந்தேன். தலைமை ஆபீசிலிருந்து சரியான பதில் கிடைக்காமல்போனதால், சர்க்கா சங்கத்தின் தலைவரான மகாத்மாவுக்கே எழுதினேன். மகாத்மாவிடமிருந்து வந்த பதில் என்னைத் திடுக்கிடச் செய்தது. அந்த பதிலில் பணத்தைப்பற்றி ஒன்றும்

இல்லாததோடு கூட தமிழ் நாட்டில் நடக்கும் கதர் வேலையைக் கண்டித்து எழுதிய ரகசிய மானபுகார் ஒன்றின் மூலம் மகாத்மாவுக்கு என்னிடம் வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதும் தெரிந்தது. கடைசியாக அந்தப் புகாரின் நகல் எனக்குக் கிடைத்தபோது அது முழுதும் வேண்டும் என்றே குரோதத்தோடு தயாரிக்கப் பட்ட பொய்யெனக் கண்டேன்.

கீழ்மகன்

இந்த நிகழ்ச்சியிலிருந்து இரண்டு விஷயங்கள் வெளிப்பட்டன. ஒன்று மகாத்மாவிடம் செல்வாக்குள்ளவர்களுக்கு, யுத்த காலத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு ராட்டையை முன்னுக்குக் கொண்டுவர நான் செய்த முயற்சி பிடிக்கவில்லை. அப்படி அவர்களுக்குப் பிடிக்காததற்குக் காரணம் நான் ராட்டை இயக்கத்தில் யந்திரங்களைச் சம்பந்தப் படுத்திவிட்டேன் என்று சொல்லப்பட்டது. ஆனால் அந்தக் காரணத்தை நான் ஆராய்ச்சி செய்தபோது அதில் உண்மையில்லை என்று கண்டு கொண்டேன். நான் உபயோகப்படுத்திய யந்திரங்களையே மற்ற மாகாணங்களிலும், தலைமைக் காரியாலயத்திலுங்கூட உபயோகப்படுத்திவந்தனர். ராட்டைக்கு அவசியமான இரும்பு சாமான்களை உற்பத்தி செய்வதற்கு இரும்பை உலைக்கூடத்தில் உருக்கியாகவேண்டும். அந்த உலைக்கூடத்திற்கு யந்திரங்கள் அவசியம். இதன் ரகசியத்தைக் கண்டு பிடிப்பதற்காக, அதுவரையில் எங்களுக்கு ராட்டை சாமான்கள் அனுப்பிவந்த ஆமதா

பாத்தில் உள்ள தொழிற்சாலையைச் சென்று பார்வையிட்டேன். அங்கே இரும்பு காய்ச்சும் உருக்குப்பட்டரை மாத்திரம் அல்லாமல் கைச்சல் பட்டரைகூட மின்சாரத்தால்தான் ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால் மின்சாரம் ஓடும் யந்திரங்களை சர்க்கார சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சொந்தமாக வைத்து ஓட்டுவதில்லை. அந்த வேலைகளுக்கென நடுவில் கண்ட்ராக்டர்களை அமைத்துக்கொண்டு, மின்சாரத்தை வைத்து ஓட்டும் பாவத்தை அந்தக் கண்ட்ராக்டர்களின் தலையில் போட்டுவிட்டார்கள். நான் செய்த பாபமெல்லாம், இந்த விஷயத்தை ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகவும் நேரடியாகவும் செய்தேன் என்பது தான்.

இரகசியப் புகார் சம்பவத்திலிருந்து வெளிக்கிளம்பிய இரண்டாவது உண்மையென்னவென்றால், தமிழ் நாடு மற்ற மாகாணங்களைவிட முன்னணியில் செல்வது எனக்கு மேல் உள்ள அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை என்பதே. என்னுடைய திட்டங்களுக்கு அவர்களிடம் பண உதவி நாடியது உண்மை. அவர்கள் கையிலிருந்து பணம் அனுப்பவேண்டுமென்று நான் கேட்கவில்லை. இங்குள்ள பாங்கியிலேயே கடன் வாங்குவதற்கு ஏற்பாடு செய்து முடித்திருந்தேன். அம்மாதிரி கடன் வாங்குவது சர்க்கார சங்கத்தில் நடைபெறும் சாதாரண சம்பவம். நானே மேலாவின் சம்மதத்தோடு பல தடவை கடன் வாங்கியிருக்கிறேன். ஆயினும் என்னுடைய புதிய திட்டத்திற்குக் கடன் வாங்க நினைந்தபோது மாத்திரம் அவர்கள் ஆட்சே

பிப்பதற்காகக் கொள்கைகளைத் தேடிக் கண்டுபிடித்தார்கள். அவையெல்லாம் மேம் பூச்சு. சமயத்தில் கடன் வாங்குவதற்கு எவ் வித ஆட்சேபணையும் இருக்கமுடியாது. அவர் களுடைய ஆட்சேபணைக்கு உண்மைக் கார ணம் வேறு.

> கதர் வேலையில் ஏற்கனவே மற்ற மாகாணங்களைவிடத் தமிழ்நாடு முன் னேறிவிட்டது. என் திட்டப்படி தமிழ் நாட்டில் இன்னும் கதர் வளர்ச்சியடைந் தால், தமிழ் நாட்டின் முக்கியத்துவம் மிகைப்பட்டு, மற்ற மாகாணங்கள் பெயர் சொல்லமுடியாமல் போய்விடும். தென் னாட்டாருக்கு இவ்வளவு பெருமை கொடுத்து விடுவதா? தென்னாட்டார் எல்லாம் கீழ்மக்கள்தானே! அவர்களை முன்னணியிலா வைப்பது?

இவ்வாறு அவர்கள் மூளைவேலைசெய்தது. அவர்களுடைய பொறாமையால் பொய்களை உற்பத்தி செய்து மகாத்மாவுக்கு ரகசியமாகக் கோள்சொன்னார்கள். மகாத்மாவின் அந்தரங் கக் கூட்டத்தில் நான் இல்லையானதால் என் சொல்லுக்கு மதிப்பு ஏற்படவில்லை.

குடும்ப ஒற்றுமை

அந்த ரகசிய புகாருக்கு விளக்கமான பதில் எழுதி, அதில் உள்ள பொய்களையெல் லாம் வெளிப்படுத்தி மகாத்மாவுக்கு அனுப்பி னேன். என்னுடைய விளக்கத்தைப் படித் துப் பார்த்து, விஷயங்களை ஆராய்ச்சிசெய்து, பிறகு தன்னுடைய முடிவை வெளியிட்டிருந் தால், அந்த முடிவு எதுவாயிருந்தாலும் நான்

தாழ்மையோடு ஒப்புக்கொண்டிருந்திருப்பேன் மகாத்மா அவ்வாறு செய்யவில்லை. "நாமெல்லாம் ஒரு குடும்பம் அல்லவா? இம்மாதிரி நமக்குள் மன வருத்தம் உண்டாவது சரியல்ல. இவைகளைப் பரஸ்பரம் மன்னித்து மறந்துவிட வேண்டும்" என்று அவர் கட்டளையிட்டார். சொந்த புண்ணை மறக்கும் சக்தி எனக்கில்லை. எதையும் மன்னித்துவிட முடியும். ஆனால் கேட்டால்தானே மன்னிப்புக் கொடுக்க முடியும். அப்பொழுதாவது தவறை ஒப்புக்கொண்டு என்னிடம் எவரும் மன்னிப்புக் கேட்கவில்லை. மகாத்மாவைச் சுற்றிக்கொண்டிருக்கும் அந்தக் குடும்பத்தில் எனக்கு இடமில்லையென்பதை நான் கண்டு கொண்டேன், மேலும் இந்த விஷயம் என்னை மாத்திரம் பொறுத்ததல்ல. என்னோடு சேர்ந்து வேலை செய்யும் தமிழ்நாட்டுத் தொண்டர்களையும் பொறுத்தது; என்னுடைய மாகாணமாகிய தமிழ்நாட்டையும் பொறுத்தது. ஒருவிதத்தில் பார்க்கப்போனால் இந்த தேசத்தில் நடைபெறும் பொதுத் தொண்டின் அடிப்படையையே அது சார்ந்திருந்தது.

பொது வாழ்க்கையில் ஈடுபட்ட ஒருவன் மீது உண்டாக்கப்பட்ட அபாண்டமான குற்றச் சாட்டுகளை, அவனை விசாரிக்காமலும், அவனுடைய தற்காப்புக்கு இடம் கொடுக்காமலும் உயர்ந்த நிலைமையில் உள்ளவர்கள் அப்படியே ஒப்புக்கொண்டு நடப்பதென்றால், அது ஜெர்மனியைப் பாழாக்கிய நாஜிக் கூட்டத்தின் முறைகளை ஒத்திருக்குமே அல்லாமல் இந்தியாவின் சுதந்தரத்தை நிலைநிறுத்தப் போராடும் ஜனநாயகத்திற்கு அது அழகல்ல.

மேலும் நான் உத்தேசித்ததுபோல் யுத்த காலத்தில் கதர் உற்பத்தியைப் பெருக்கு வதற்கு வழியில்லை என்றால் கதர் ஸ்தாபனத் தில் எனக்கு வேலைதான் என்ன? நானும் மேம்பூச்சாக ஏதோ வேலை செய்வதாகப் பாசாங்கு செய்துகொண்டு நாட்களைக் கடத்த லாம்; எப்படியாவது, தமிழ் நாட்டில் தானா கவே உற்பத்தியாகும் சொற்ப கதரை நானே சாதித்து விட்டதாகச் சொல்லித் தேசபக்தர்கள் அதை வாங்க வேண்டும் என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு போக லாம். மகாத்மாவின் அந்தரங்கக் கூட்டத் தாருக்கு நல்ல பிள்ளையாக நடந்து கொண்டு, என்னுடைய சொந்த நலனைத் தேடிக்கொள்ள லாம். என்னவோ இது எனக்குப் பிடிக்காத படியால், நான் என்னுடைய வேலையை ராஜிநா மாச் செய்வதாகக் கூறினேன்.

ஆகஸ்டு இயக்கம்

ஆனால் அச்சமயம் நான் கதர் ஸ்தா பனத்தை விடமுடியவில்லை. என்னுடைய ராஜிநாமாவைப்பற்றி மேலாவில் ஆலோசனை நடக்கும் சமயத்தில் தேசத்தில் ஒரு நெருக் கடி ஏற்பட்டது. பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் ஆகஸ்ட் தீர் மானத்தை நிறைவேற்றினர். தேசம் ஒரு புரட்சியை நாடிச் சென்றது. அவர்களாகவே என்னை நீக்கினால் ஒழிய, அந்த ஆபத்தான சந்தர்ப்பத்தில் என்னுடைய பதவியை வகிப் பது என்னுடைய கடமை ஆயிற்று.

சர்க்கா சங்கத்துக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லையானாலும், நெருக்கடியான

சமயங்களில் முக்கியமான வேலைகள் எங்களுக்கு ஏற்பட்டே தீரும். சுற்றியுள்ள மக்கள் ஆபத்திற் சிக்கித் தவிக்கும்போது அவர்களுக்குச் சேவை செய்யவேண்டும். ஆகவே எனது ராஜிநாமாவை வற்புறுத்தாமல் தமிழ் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்க ஏற்பாடு செய்தேன்.

மாகாண அரசாங்கங்களில் சில, சர்க்கா சங்கங்கள் காங்கிரஸ் வேலை செய்வதாகச் சந்தேகித்து, அவைகளின் எல்லைகளுக்குட்பட்ட சர்க்கா சங்கங்களை நசுக்கி வருவதாக எனக்குத் தகவல் எட்டியது. இம்மாதிரி சந்தர்ப்பத்தில் எங்களுக்குச் சர்க்கா சங்க அமைப்பு வழிகாட்டியது. எங்களுடைய வேலைக்குத் தடை ஏற்படாத வரையில், எங்களுடைய வேலையை அரசியல் சம்பந்தமில்லாமலே நடத்திவர வேண்டியது எங்கள் கடமை. ஆனால் அரசாங்கம் குறுக்கிட்டு எங்கள் வேலையைத் தடை செய்தால், சர்க்கா சங்கத் தொண்டிலிருந்து நீங்கி எங்கள் சொந்த ஹோதாவில் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டே தீரவேண்டும். சென்னை அரசாங்கம் எங்கள் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மற்ற மாகாணங்களில் என்ன நடைபெற்றதென்பதை அக்காலத்தில் நிச்சயமாக அறிவதற்கில்லை. மற்ற விடங்களில் என்ன நடந்தாலும் இந்த மாகாணத்தைப் பொறுத்தவரையில் எங்களுடைய கடமை என்னவென்பதைப்பற்றிச் சந்தேகமேயில்லை.

ஆகஸ்டுக்குமேல் ஒரு படி

அப்பொழுது ஒரு ஆச்சரியமான செய்தி எனக்கு எட்டிற்று. தலைமை ஆபீசுக்கு என் பேரில் ரகசிய ரிப்போர்ட் எழுதிய பேர்வழி மேலாவிலிருந்து ஒரு தூதராக வந்தார். அவர் கொண்டுவந்த செய்தி என்னவென்றால் :

> அரசியலில் ஈடுபடுவதில்லை யென்ற கொள்கையை சர்க்கா சங்கம் கைவிட்டு விட்டது. இனி கதர்த் தொண்டர்கள் 'தீவிரமாக அரசியலில் ஈடுபடவேண்டும்

என்பதாகும். இந்தச் செய்திக்கு சாட்சியாக 'ரகசியம்', என்று விலாசத்தில் குறிப்பிடப் பட்டு சங்கத்தின் மத்திய காரியாலயத்திலிருந் து எழுதப்பட்டிருந்த ஒரு கடிதத்தை, என் னிடம் கொண்டுவந்து கொடுத்தார். அந்தக் கடிதத்தில் நான் வரிகொடா இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும், மத்திய அரசாங்கத்தார் வெளியிட்டிருந்த யுத்த நஷ்ட இன்ஷியூரன்ஸ் சட்டத்தின்கீழ் சர்க்கா சங்கம் செலுத்த வேண்டிய வரியைக் கொடுக்கா மலிருக்கவேண்டும் என்றும் கண்டிருந்தது.

இது ஒரு அரும்பெரும் செய்தி. இச் செய்தி நிர்மாணத் திட்டத்தின் அடிப்படை யில் மாறுதல் உண்டாக்குவதாகும். அகில பாரதசர்க்கா சங்க அமைப்பில் உள்ள வார்த் தைகளைப் பாருங்கள் :

> அரசியலாலோ, அரசியல் மாறுதல் களாலோ, அரசியல் ஸ்தாபனங்களாலோ பாதிக்கப்படாததும், கட்டுப்படுத்தப் படாததுமானது, சர்க்கா சங்கம்.

என்று இருக்கிறது.

நம்பிக்கைத் துரோகம்

சங்க அமைப்பை மீறமுடியுமா? முடிந்தாலும் மீறுவது சரியா? என்ற கேள்விகள் பிறந்தன. எந்தக் காரணத்தாலும் சர்க்கா சங்கம் அரசியலில் தலையிடக்கூடாது என்று மகாத்மா பல தட்வைகளில் வற்புறுத்தியிருக்கிறார். கதர் வேலையானது கட்சி சம்பந்தமில்லாத தர்ம கைங்கர்யம் என்று அவர் உறுதி மொழிகூறி காங்கிரசை எதிர்த்த பலரிடமிருந்து பண வசூல் செய்திருக்கிறார். காங்கிரஸ் கட்சி மந்திரி சபைகள், அரசாங்கப் பொதுப் பணத்திலிருந்து கதர் அபிவிருத்திக்கு மான்யங்கள் வழங்கியிருந்தன. அந்த மான்யங்களில் எல்லாம் மிகப்பெரிது சென்னை அரசாங்கம் கொடுத்தது. அது வருஷத்திற்கு இரண்டு லட்ச ரூபாய். ஒவ்வொரு வருஷத்திற்கும் அந்தமான்யம் கொடுக்கப்பட்டு வந்தது.

அந்த மான்யம் சட்ட சபையில் விவாதத்திற்கு வந்தபோது எதிர்க் கட்சியார் அந்தப் பெருந்தொகை கட்சி வேலைக்காக உபயோகப் படுத்தப்படுமோ என்று சந்தேகப்பட்டார்கள். அப்படிப்பட்ட சந்தேகத்திற்கு இடமில்லை யென்று மந்திரி சபையார் உறுதிகூறினார்கள். காங்கிரஸ் மந்திரி சபைக்குப் பிறகு சென்னையில் ஏற்பட்ட அட்வைசர் அரசாங்கமும் கதர்த் தொண்டர்களிடம் பூரண நம்பிக்கை வைத்து பழய மான்யத்தோடுகூட ராட்டை உற்பத்திக்கென ஒர்க்ஷாப்புகள் ஏற்படுத்துவதற்காகக் கட்டிடங்கள் கட்டவும், கருவிகள் வாங்கவும் புதிய மான்யம் கொடுத்தார்கள். ஆகவே தலைமைக் காரியாலயத்தின்

போக்குப்படி நடந்தால் அது நம்பிக்கைத் துரோகமாகும் என்பதைப்பற்றி எனக்குக் கொஞ்சங்கூட சந்தேகமேயில்லை.

நிலைமை தர்மசங்கடமாயிற்று. தலைமைக் காரியாலயத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதா? அல்லது அதை மீறுவதா? கட்டுப்பாட்டின் அவசியத்தை நான் உணர்ந்திருந்தேன். ஆகையால் கீழ்ப்படிவதையே நான் விரும்பினேன். அது அரசாங்கத்தாருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ததாக முடியலாம். ராட்டை மான்யத்திற்குச் சம்மதம் கொடுத்த எதிர்க் கட்சியினருக்கும், கதர்த் தொண்டர்களின் வார்த்தையில் மதிப்பு வைத்த மற்ற மக்களுக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்ததாகவும் முடியலாம். ஆனால் தேச விடுதலை என்னும் பெரிய காரியத்தை அதன் மூலம் சாதிக்கமுடியுமானால் ஏன் நம்பிக்கைத் துரோகம் செய்யக்கூடாது? தனித்த ஒருவருடைய வாழ்க்கைத் துறைக்கு உகந்த ஒழுக்கக் கோட்பாடுகள், கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் அரசியல் துறைக்குப் பொருத்த மற்றவை.

அரசியல் சரித்திரத்தில் எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் தேசத்தலைவர்கள் நாணயமற்ற ஒழுக்கக் குறைவான நடத்தைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த நடத்தைகள் தங்கள் நாட்டு மக்களின் நன்மையையே குறிக்கோளாகக் கொண்டமையால் அவை கண்டிக்கப்படாமல் ராஜ தந்திரம் என்ற பெயரால் போற்றப்பட்டு வந்திருக்கின்றன. இந்தியாவில் நடைபெறும் பிரிட்டிஷ் அக்கிரம ஆட்சியை முடிவு கட்டுவதற்

காக அவ்வித தந்திர முறைகளைக் கையாளுவதில் என்ன தவறு?

பணக்கார ஒழுக்கம்

நான் முன்பே குறிப்பிட்டிருக்கும் சிமெண்ட் என்ற ருஷியக் கதையில், கதாநாயகி தன்னுடைய கணவனை அதிக அன்போடு நேசிக்கிறாள். ஆனால் அவன் புரட்சியில் ஈடுபடுவதற்காக அவளை விட்டுப் பிரிகிறான். பிரிவை அவளால் சகிக்க முடியவில்லை. பிரிவாற்றாமையால் ஏற்பட்ட சோகத்தைத் தீர்த்துக் கொள்ளுவதற்காகத் தன்னுடைய கிராமத்தில் உள்ள புரட்சிக்காரர்களுக்கு உதவி செய்து தனக்கு அபாயத்தை தேடிக் கொள்ளுகிறாள். கொஞ்சங் கொஞ்சமாக, தன்னுடைய நாயகன் மனதைக் கவர்ந்த புரட்சி இயக்கத்தில் தானும் ஈடுபட்டு விடுகிறாள். புரட்சிக்காரர்களுக்கு ஏற்பட்ட ஆபத்துகளில் அவளும் சிக்கிக்கொள்ளுகிறாள். அவ்வித நெருக்கடிகளில் பல தியாகங்கள் செய்கிறாள். ஒரு சமயம் தன்னுடைய கற்பையே தியாகம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அந்தத் தியாகத்தையும் செய்கிறாள். அதனால் அவளுடைய கணவனுக்கு ஒரு சங்கடமான நிலைமை ஏற்படுகிறது.

அந்தக் கதையின் ஆசிரியர் பொது உடைமைப் பிரசாரம் செய்கிறவர். ஆகையால் அவள் செய்தது சரியென்றே கூறுகிறார். புரட்சியின் வெற்றிக்காக உண்மை, ஒழுக்கம், இன்னும் அதற்கு மேலான நோக்கம் எதுவாயினும் சரி, அவைகளையெல்லாம் தத்தம் செய்வது சரியென்பதே அவருடைய சித்தாந்

தம். அவ்விதம் தத்தம் செய்யத் தயங்குகிற வர்களைப் பணக்கார ஒழுக்கம் உள்ளவர்கள் என்று பொதுவுடைமைக்காரர்கள் ஏளனம் செய்வார்கள். பணக்கார ஒழுக்கம் என்பதற்கு அவர்களுடைய அகராதியில் பித்தலாட்டம் என்று பொருள்.

மற்ற நாடுகளில் ஆங்காங்குள்ள தேசிய ஒழுக்கம் அந்த நிலையில்தான் இருக்கிறது. தேசபக்தி மேலிட்டால் அவ்வித தியாகங்கள் செய்வதை எந்த தேசத்தாரும் கொண்டாடி வருகிறார்கள். நானும் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன், மகாத்மாவைச் சந்திக்கு முன் உள்ள நிலையில் மறுபடியும் இருந்திருந்தேனால் அவ்வித ஒழுக்கத்தையே கடைப்பிடித்திருப்பேன். எங்களுடைய வாலிபர் சங்கத்தின் வீரம் செறிந்த உள்ளம் அவ்வித நடத்தையைக் கைக்கொண்டிருக்கும். ஆனால் நமது நாட்டில் மகாத்மாவுக்கு ஏற்பட்ட ஆதிக்கத்தின் மூலம் அந்த நிலைமை மாறிவிட்டது. உண்மைக்கு ஒரு நூதன முதன்மை ஏற்பட்டுவிட்டது. தேசபக்திக்காகவோ அல்லது அதற்கு மேலான நோக்கத்திற்காகவோ உண்மையைப் பின்னடையச் செய்வதற்கில்லை.

மகாத்மாவின் கொள்கைகளை இருபத்தைந்து வருஷங்களாகத் துருவித் துருவிக் கற்றதன் பயனாகத் தலைமைக் காரியாலயத்திலிருந்து எனக்குக் கிடைத்த ருசிகரமான கட்டளையை நிறைவேற்ற முடியாமல் என்னைச் செய்து விட்டது. மேலாவிலிருந்து எனக்கு உத்தரவு போடுகிறவர்களுக்கு மகாத்மாவின் கொள்கைகளைப் பற்றிய ஆராய்ச்சியும் அனு

பவமும் எனக்குத்தெரிந்த அளவுகூட இல்லை யென்பதை நான் அறிவேன். தற்காலிகமான சவுகரியத்திற்காக வேண்டி, நிரந்தரமான நோக்கத்தை விட்டுக்கொடுக்க என் மனம் ஒப்பவில்லை. ஆகவே, மேலாவிலிருந்து வந்த உத்தரவை மீறுவதென்று தீர்மானித்து யுத்தநஷ்ட இன்ஷியூரன்ஸ் சட்டத்தின்படி கொடுக்கவேண்டிய வரியைச் செலுத்திவிட் டேன்.

தலைமைக் காரியாலயத்தாரை எதிர்ப் பதில் எனக்கு உற்சாகம் ஒன்றுமில்லை. எதிர்க்கவேண்டியது கடமையாக முடிந்து விட்டதை எண்ணி வருந்தினேன். ஆனால் அத்தகைய எதிர்ப்பு சர்க்கார சங்கத்தில் வெகு சாதாரணம். தலைமைக் காரியாலயத் தின் போக்கு ஒரு மாதிரியாகவும், மாகாண காரியாலயங்களின் போக்கு எதிர் மாருகவும் இருப்பது சர்வசாதாரணம். என்னுடைய நிலைமைக்கு ஆதரவு தேடுவதற்காக C. R. அவர்களை நாடினேன். தற்சமயம் அவருக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடமான நிலைமையில் அவருக்குப் புதியதொரு சங்கடத்தை உண் டாக்க நான் விரும்பவில்லை. ஆனால் இந்த சம்பவத்தைப் பற்றி நான் குறிப்பிடும்போது இவ் விஷயத்தில் நான் செய்தவை அனைத் தையும் C. R. மனப்பூர்வமாக ஆதரித்தார் என்பதைச் சொல்லாவிட்டால் இந்தக் குறிப் புப் பூரணமாகாது. ஆனால் C. R. ஆதரவு கிடைத்தாலும்கூட, மகாத்மா சிறையிலிருந்து வெளிவந்த பிறகு நான் செய்தது தவறு என்று சொல்லக்கூடும். அப்பொழுது வரு வதை அனுபவிப்பது என்றே துணிந்தேன்.

வேறு வழியென்ன? தலைமைக் காரியாலய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து வரியைக் கொடுக்காமல் மறுத்திருக்கலாம். என்னுடைய சொந்த நன்மையை மாத்திரம் கருதியிருந்தால் அதுவே எனக்குச் சவுகரியமாயிருந்திருக்கும். அவ்வாறு வரிசெலுத்த மறுத்தால் என்ன நடந்திருக்கும் என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால் பின்வரும் அவசரச் சட்டத்தைப் பாருங்கள்:

அவசரச்சட்டம் நெ. 9, 1940
செக்ஷன் 7. பிரிவு 2.

(1) வதுபிரிவை மீறிநடக்கிறவர்களுக்கு அபராதம் ரூபாய் 1000-மும் அதனோடு அப்படி மீறுகிற ஒவ்வொரு தினத்திற்கும் 500 ரூபாய் அபராதமும் சேர்த்து விதிக்கப்படும்.

ஆகவே, இந்த வரி கொடா இயக்கத்தில் நான் ஈடுபட்டால் என்னைச் சிறைக்குக்கூட அனுப்பாமல் ஒருபெருந்தொகையைநாளுக்கு நாள் அபராதமாக என்னிடமிருந்து வசூலித்துக் கொண்டிருப்பார்கள். அந்த அபராதம் என்னிடமிருந்தல்ல, சர்க்கா சங்கநிதியிலிருந்து வசூலிக்கப்படும். சர்க்கா சங்க நிதியில் உள்ள பணம் ஏழை நூற்பவர்களிடமிருந்து முன்பணமாக வசூலிக்கப்பட்டது. ஒருவேளை அவ்வித வரி கொடாமை நடைபெற்றால் கதர்வேலையைத் தடுத்து கிராமங்களில் உள்ள சங்கஸ்தாபனங்களைப் போலீசார் கைப்பற்றியிருப்பார்கள். யுத்த காலத்தில் ஏழைக் கிராமவாசிகளுக்கு வழங்கிய சிறு உதவிகளும் நின்றுபோயிருக்கும். ஆகவே அந்த வரி கொடாமையின் பலன் ஏழை மக்

களின் தலையில் விடிந்திருக்கும். தங்களுக்கு ஏன் அந்தக் கஷ்டம் வந்தது என்பதற்குக் காரணம்கூட அந்த ஏழைகளுக்குத் தெரிந்திருக்காதது. எப்படி நியாயம்?

கடைத் தேங்காய்

இந்த வரிகொடா இயக்கத்தைத் தொடங்கியவர்களின் அந்தரங்க நோக்கத்தை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. வரி மறுப்பு என்பது இந்த ஒரு வரியை மாத்திரம் பொறுத்ததா? படிப்படியாக இன்னும் மற்ற வரிகளையும் மறுக்கவேண்டுமா? அதன் பிறகு வரிகளை மறுப்பதோடு மாத்திரம் அல்லாது சட்டங்களையும் மீற வேண்டுமா? சங்கத் தலைவராக மகாத்மாவின் ஸ்தானத்தில் வீற்றிருந்தவரையும் இந்தச் சந்தேகங்களை நீக்குமாறு கேட்டேன். ஒருவராலும் பதில் சொல்ல முடியவில்லை.

சட்டமறுப்பு இயக்கத்திற்கு இந்த ஒரு வரியைமாத்திரம் ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பதற்கு அவர்களால் காரணம் சொல்ல முடியவில்லை. இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால், இந்தச் சட்ட மறுப்பு இயக்கமானது சர்க்கா சங்கத்தில் ஆரம்பித்து சர்க்கா சங்கத்திலேயே முடிவடைந்து விட்டது. நாட்டில் வேறு எந்த ஸ்தாபனமோ, வேறு எந்த தனி நபரோ இந்த இயக்கத்தில் ஈடுபடவுமில்லை; ஈடுபடும்படி தூண்டப்படவுமில்லை. சொல்லப்போனால் இது ஒரு இயக்கமே அல்ல. வேறு எந்த இடத்திலும், எந்த நிகழ்ச்சியிலும் சம்பந்தப்படாமல் தனித்து நடத்திய ஒரு தற்கொலையே இது.

சர்க்கா சங்கத்தை இம்மாதிரியான ஒரு சங்கடத்தில் மாட்டி விடாததற்காக என்மீது கோபித்துக்கொண்ட சில நண்பர்கள் பம்பாயில் உள்ள வியாபாரிகள். அவர்கள் தங்கள் சொந்த வியாபார முறையில் ஏற்பட்டிருந்த இதே வரியைத் தவருமல் செலுத்தி வந்தார்கள். இந்த மகத்தான இயக்கத்தில் பம்பாயில் உள்ள ஒரு வியாபார்ரியாவது ஏன் சேரவில்லையென்று நான் கேட்டபோது அவர்கள் அளித்த பதிலாவது :—

> தேசம் தியாகத்திற்கு அறைகூவும் பொழுது தனிப்பட்ட மக்கள் வந்தாலும் வராவிட்டாலும், தேச நன்மைக்கென்றே பாடு படும் ஸ்தாபனங்கள் நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் சேர்ந்தே ஆக வேண்டும்

என்று சொன்ஞர்கள். இது நூதனமான தேச பக்தி. ஏழைகள் கால் காலணவாகச் சேர்த்து சர்க்கா சங்கத்தில் கொடுத்து வைத்திருந்த பணத்தைத் தியாகம் செய்துவிட்டு, கொழுத்த வியாபாரிகள் யுத்த கால சந்தர்ப்பத்தில் கொள்ளை லாபம் அடிப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்தது இந்த தேச பக்தி.

தமிழில் ஒரு பழமொழி உண்டு. புத்திசாலியாக இருப்பவன் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்க வேண்டும் என்பது அப்பழமொழி. எனக்கு மேலதிகாரிகளாக உள்ளவர்களெல்லாம் இந்தப் பழமொழியைப் புத்திசாலித்தனமாகக் கையாண்டு வந்தார்கள்,

மானசீகத் தபால்

அக்காலத்தில் மேலாவில் உள்ளவர்கள் என்னோடு முகங் கொடுத்துப் பேசுவதில்லை. தாங்கள் ஏதோ உயர்ந்த நிலையில் இருப்பதாக நினைத்துக்கொண்டு, சிறையிலிருந்த மகாத்மா வோடு நேரே சமாசாரப் போக்குவரத்து நடத்திக்கொண்டிருப்பதாகக் குசு குசு வென்று பேசுவார்கள். தாங்கள் செய்வனவெல்லாம் மகாத்மாவின் சம்மதத்தின்பேரில்தான் என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டார்கள்.

வரிகொடா இயக்கத்தின் தலைமைக் காரியாலயத்தின் கட்டளைக்கு விரோதமாக நான் நடந்தது மகாத்மாவுக்கு அறிவிக்கப்பட்டு விட்டது என்று வெகு ஆடம்பரமாகக்கூறினார்கள். அவர்களுடைய வார்த்தைகளின் தொனி மகாத்மாவே நான் செய்ததைத் தவறு என்று சொல்லிவிட்டது மாதிரி இருந்தது. இந்த பயமுறுத்தல் என்னுடைய மனப்பான்மையைச் சிறிதும் அசைக்கவில்லை. ஆனால் இவ்வளவு மன ஒற்றுமையோடு ஒரே குடும்பமாக விளங்கிய அக்கூட்டத்தில் எனக்கு இடமில்லை யென்பதை மீண்டும் கண்டு கொண்டேன். என்னுடைய தீர்மான முடிவை அவர்களுக்கு அறிவித்து விட்டேன்:

சட்டமறுப்பு என்னும் பெயரால் அவர்கள் நடத்தும் கேலிக் கூத்தில் நான் ஈடுபட முடியாது. ஆனால் என்னுடைய ஸ்தானத்திற்கு வேறு ஆள் அனுப்பினால் உடனே விலகிக் கொள்ளுவதற்கு நான் தயார்.

வேறு ஆள் அனுப்பினார்கள். நான் விலகிக்கொண்டேன். வாலிபர்களுக்கு இடம் கொடுத்தேன்.

வாலிபர்களுக்கு இடம்

கிராம சேவையில் என்னோடு உழைத்த இளந்தோழர்களை விட்டுப் பிரிவது எனக்குத் தாங்க முடியாத துயரத்தைக் கொடுத்தது. காந்தி நகரில் நான் சிருஷ்டித்த சிறு ஒர்க் ஷாப்பை விட்டுப் பிரியும்பொழுது கண்ணீர் சிந்தினேன். அதை அவ்வளவு அன்போடு நேசித்திருந்தேன். தமிழ் நாட்டின் கிராமத் தொழில் அமைப்பில் அதன் மூலம் ஒரு புரட்சியை உண்டுபண்ணலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தேன். இனி, நான் விலகிய பிறகும் அது உயிர்த்திருக்குமானால் என்னுடைய மனக்கோட்டைக்கு அது ஒரு சாவு மணியாகவே விளங்கும்.

கதர் வேலையை விட்டு விலகுவதில் எனக்கு எவ்வித நஷ்டமும் இல்லை. ஆனால் லஜ்ஜையாக இருந்தது. ஏனெனின், கதர்த் தொண்டை விட்டு விலகுவது இது முதல் தடவை அல்ல. ஏன் நான் கதர்த்தொண்டுக்குத் திரும்பி வந்தேன் என்று என்னையே கேட்டுக் கொண்டேன். நான் முன்பு குறிப்பிட்ட சிமெண்ட் என்ற ருஷியக்கதை மீண்டும் ஞாபகத்திற்கு வந்தது. அந்தக் கதையிலிருந்த எஞ்சினியரின் நிலைமையை எனக்கு ஒப்பாகக் கருதினேன். அந்த எஞ்சினியருடைய மக்கள் அவருடைய சேவையை நாடி அவரை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் என்னுடைய மக்கள் ஏன் என்னை வெளியே அனுப்புகிறார்கள்?

அவர்களுக்கு எஞ்சினியர் தேவை யில்லையா? ஒரு கையாள், வெறும் ஆயுதம் ஒன்றுதான் அவர்களுக்குத் தேவையோ?

இம்மாதிரி நான் எண்ணுவது தவறு என்று இவ்வெண்ணத்தை விலக்கினேன். ஒரு வேளை என்னை வெளியில் அனுப்புவதற்குக் காரணம் நான் சரியான எஞ்சினியராக இல்லை என்றிருக்கலாம். எனக்குப் பின் இந்த வேலைக்கு வருகிறவர், மற்றும் சங்கத் தொண்டர்களான நம்பிக்கையும் ஊக்கமும் உள்ள எனது இளந் தோழர்கள், இவர்களுக்கெல்லாம் என்னைவிட அதிக சக்தியிருக்கலாம். என்னால் செய்ய முடியாத காரியத்தை அவர்கள் சாதித்து வெற்றி பெறலாம்.

எங்களது வாலிப சங்கத்தின் நினைவு வந்தது. எனக்கு வயதாகிவிட்டபடியால் வாலிப சங்கத்தின் உணர்ச்சி என்னை விட்டுப் போயிருக்கலாம். ஆனால் எனது இளந்தோழர்களிடையே அந்த உணர்ச்சி நிரம்பியிருக்கிறது. இளமையே மனித வாழ்க்கையின் ரசம், இளமைக்கு எப்பொழுதும் வெற்றி கிடைத்தே தீரும் என்று நான் என்னையே தேற்றிக் கொண்டேன்.

வாலிபர் விரட்டப்படுதல்

என்னுடைய நம்பிக்கை நிறைவேறுவது போல் கொஞ்சகாலம் தோன்றியது. நான் வெளியேறிய காரணத்தால் மேலாவில் உள்ள தேவதைகள் கொஞ்சம் அடங்கியிருந்தன. ஓர்க்ஷாப்புக்கு முடிவுகட்டி விடுவார்கள் என்று நான் பயந்தபடி அவர்கள் ஒன்றும்

செய்யவில்லை. அதை அனுமதித்ததோடு கூட நான் காந்தி நகரின் முன்னேற்றத்திற்காகத் தயாரித்திருந்த திட்டங்கள் அமுலுக்கு வருவதையும் அவர்கள் ஆட்சேபிக்க வில்லை.

அந்தத் திட்டத்தின்படி கதர்த்துணியைச் சலவை செய்வதற்கு உப்பிலிருந்து "பிளீச் லிக்கர்" உற்பத்தி செய்ய யந்திரங்கள் அமைக்கப்பட்டன. பிளஷ் கக்கூஸ்கள் கட்டப்பட்டன. கையால் செய்யும் காகிதத்திற்கு வேண்டிய யந்திரங்கள் அமைக்கப்பட்டன. இந்த நற்செய்திகளைக் கேட்டு காந்தி நகர் முன்னேற்றம் அடையும் என்று சந்தோஷப் பட்டேன்.

ஆனால் என்னுடைய சந்தோஷம் நிலைத்திருக்க வில்லை. திடீரென்று மேலதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட முயற்சி செய்தார்கள் என்று கேள்விப்பட்டேன்.

ஒர்க்ஷாப்பில் கஷ்டப்பட்டுச் சேமித்து வைத்திருந்த மோட்டார் யந்திர சாமான்களையும் மூலப்பொருள்களையும் விற்க முயற்சித்தார்கள். யுத்தத்தின் காரணத்தால் இந்தச் சாமான்களின் விலைகள் ஏறியிருந்தன. விற்றால் நல்ல லாபம் கிடைக்கும் என்பதே இதற்குக் காரணம்.

சாமான்கள் விற்கப்பட்டால் நாங்கள் ராஜினாமாச் செய்வோம் என்று கதர்த் தொண்டர்கள் முனைந்து நின்றதால் இந்த விற்பனை தடைப்பட்டுப் போயிற்று. ஆனால் மேலதிகாரிகள் தமது முயற்சியில் பின்வாங்க வில்லை. தங்களுடைய செல்வாக்கைப் பலவகைகளில் உபயோகித்து முக்கிய பதவிகளில் உள்ள தொண்டர்களை ஒவ்வொரு

வ்ராக ராஜினுமாச் செய்யும்படி சூழ்ச்சி செய்தார்கள். ஓர்க்ஷாப்பைக் கலைத்துவிடுவதற்கு அவர்களால் முடியவில்லை. ஆனால் உயிரற்றுக் கிடைப் பிணமாக அது வேலை செய்துகொண்டிருந்தது. தமிழ் நாட்டில் அன்னியர் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டு விட்டது. தமிழ் வாலிபர்கள் வெளியேறி விட்டார்கள்.

வாலிபர் வாதம்

மேற்கண்ட சம்பவங்களால் ஏற்பட்ட நிலைமையை விவரித்து ஒரு கதர்த்தொண்டர் எனக்குக் கடிதம் எழுதினார். நம் நாட்டுத் தற்கால வாலிபர்களில் ஒரு மணியாக விளங்கும் அவரது வார்த்தைகளில் சிலவற்றைக் கீழே தருகிறேன்:

"சர்க்கா சங்கத்தின் மத்திய நிர்வாக சபையாரின் விபரீதப் போக்கில் எனக்கு அதிக மனக் கலக்கத்தைக் கொடுத்தது என்னவென்றால் சர்க்கார் அதிகாரிகள் வரி கேட்கும்போது அவர்களுக்கு என்ன பதில் சொல்வதென்பதைப்பற்றி கிளை நிர்வாகஸ்தர்களுக்கு அவர்கள் அனுப்பிய உத்தரவேயாகும்.

கிளை நிர்வாகஸ்தர்கள் தங்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாதென்றும், வேண்டுமானால் சர்க்கா சங்க மேலதிகாரிகளைக் கேட்கவேண்டும் என்றும் சொல்லவேண்டும் என்பதே அந்த உத்தரவு.

இன்னும் சொல்லவேண்டுமானால் எல்லாவற்றுக்கும் மேலதிகாரியாயிருந்த அகில இந்திய சர்க்கா சங்க காரியதரிசி

யாகிய ஜாஜூஜி என்பவர் அச்சமயம் சிறையிலிருந்தார். அவர்பேரில்தான் கிலங்கள், சர்க்கா சங்க இதர சொத்துக்கள் எல்லாவற்றுக்கும் மூலசாசனம் எற்பட்டிருக்கிறது. ஆகையால் அவரைக் கேட்டு வரி வசூலித்துக் கொள்ளுங்கள் என்று சொல்ல வேண்டுமாம். இந்த உத்தரவில் உள்ள கபட நாடகத்தைக் கண்டு நான் அருவெறுப்புக் கொண்டேன். இந்த நாடகத்திற்கு என்ன சமாதானம் சொல்லப் பட்டது என்ருல், கிளை நிர்வாகஸ்தர் இந்த இயக்கத்தில் மாட்டிக்கொண்டு அரசாங்கத்தாரின் கோபத்திற்கு ஆளாகக் கூடாது என்றும், அரசாங்கத்தாரின் முழு ஆத்திரத்தையும் தாங்கும்பொறுப்பு தலைமைக் காரியாலயத்தைச் சார்ந்தது என்றும் சொல்லப்பட்டது.

இந்தக் கூற்று சர்க்கா சங்கத்தின் உண்மை நோக்கத்திற்கு நேர் விரோதமானது என்பதை நான் உணர்ந்து அதை வெளிப்படையாகவும் கூறினேன். சர்க்கா சங்கத்தில் அதிகாரத்தில் உள்ளவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்கிருர்கள் என்பதையும் நான் தெரிந்துகொண்டேன். சென்ற ஆறு மாத காலமாகவே இந்த உணர்ச்சி என்னை பாதித்து வந்தது. காந்தி நகரில் உள்ள தொண்டர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமையையும் குதூகலத்தையும் கண்டு மேலாவில் உள்ளவர்கள் பொருமைப் பட்டார்கள். அந்தப் பொருமையின் காரணமாகவே எங்களுடைய வேலைகளுக்கெல்லாம் முட்டுக் கட்டை போட்டு வந்தார்கள். காந்தி

நகரில் உள்ள சாமான்களை விற்பனை செய்யத் தொடங்கியதுதான் முதல் முட்டுக்கட்டை. விற்பனைக்குக் காரணம் பண முடை என்று சொல்லப்பட்டது. அவசியமான சாமான்களையெல்லாம் கள்ளமார்க்கெட்டில் விற்பனை செய்ய முயற்சித்தார்கள். அதற்குக் காரணம் அநாவசியமாகக் காந்தி நகரில் முதல் முடங்கிக் கிடக்கிறது என்று சொன்னார்கள். அனுவசியம் என்று கூறி சுலபத்தில் கிடைக்காத சாயச் சாமான், தார்மிரம், முதலிய பண்டங்களைக்கூட விற்றுவிட்டாகள். அப்படி விற்ற பணத்தைக் கொண்டு என்றுமில்லாத அளவு கதர் உற்பத்தியைப் பெருக்கப்போவதாகச் சொல்லிக்கொண்டார்கள்.

இந்த அமளியில் என்னுடைய ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு சாவதானமாகவே அவர்களுக்குச் சமாதானம் சொல்லி மோட்டார் யந்திரம் போன்ற சில வெகு முக்கியமான சாமான்களை மாத்திரம் விற்பனையாகாமல் காப்பாற்றினேன். பிறகு எல்லாவற்றையும் விற்க வேண்டும் என்னும் வெறி கொஞ்சம் அடங்கிற்று.

ஆனால் அந்த வெறி தந்திரமாக மாறி காந்தி நகரில் உள்ள தொண்டர்களுக்குள் மித்திர பேதத்தை உண்டாக்கிற்று. எங்களுக்குள் ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டால் என்னைப் போன்ற அடங்காப் பிடாரிகளைக் கட்டி ஆளலாம் என்று நினைத்தார்கள். இம்மாதிரி ஒரு பக்கம்

பொருமையும், மற்றொரு பக்கம் வெறுப்பு மாக உள்ள நிலைமையைச் சமாளிக்க என்னால் முடியவில்லை. காரிய சாதனைக் காகக் கொள்கையை விட்டுக் கொடுத்துக் கொடுத்து அலுத்துப் போய்விட்டேன்.

இம் மாதிரி பல இன்னல்களும், சிறு சிறு சங்கடங்களும் நேரிட்டதால் நான் இதை விட்டு விலகத் தீர்மானித்து விட் டேன். இதை நீங்கள் முழு மனதோடு ஆதரிப்பீர்கள் என்று நான் எதிர்பார்க் கிறேன். இவ்விடத்தை விட்டுப் பிரிவதில் எனக்கு எவ்வித உற்சாகமும் இல்லை. காந்தி நகரில் நானே தெரிந்தெடுத்துக் கொண்ட இந்தச் சிறு உலகத்தில் கடைசி வரையில் வாழ்ந்திருக்கவேண்டு மென்று நான் முழு மனதுடன் ஆசைப் பட்டிருந்தேன். என் ஆசை உடைந்து விட்டது. இதுவே எனது விதிபோலும். ஆகவே அதை வரவேற்கிறேன்.

காந்தி நகரில் என்னை நீங்கள்தான் கொண்டுவந்து அடைத்தீர்கள். பல தட்வைகளில் நேரிலும் கடிதங்கள் மூல மும் காந்தி நகரின் முன்னேற்றத்தைப் பற்றிய உங்கள் ஆசைகளை யெல்லாம் எனக்கு விளக்கிக் காட்டினீர்கள். உங்க ளுக்குப் பின் அந்த ஆசைகளை நான் நிறைவேற்றி வைத்துக் காந்தி நகரை ஒரு நவீன சிற்றுலகமாகச் சிருஷ்டிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். எனது சிறு வயதில் அதிக மகிழ்ச்சி யூட் டிய காலம் நான் காந்தி நகரில் வசித்த சிறு பொழுதுதான். இவ்விடத்தில் நான்

அடைந்த ஆனந்தத்தை நான் வேறெங்கும் பெற்றதில்லை. அவ்வித அளவுக்கு மீறிய ஆனந்தம் நீடிக்கக் கூடியது அல்ல போலும்!''

கூலிகள் அல்ல

இந்த இளைஞர் ராட்டைச் சங்கத்தை மனமில்லாமல் மிகுந்த வேதனையோடு விட்டுப் பிரிந்தார். இப்பொழுது வேறு வேலையில் அமர்ந்திருக்கிறார். அவருடைய சம்பளம் இப்பொழுது சர்க்கா சங்கத்தில் கிடைத்ததை விட ஆறு பங்கு அதிகம். அவருடன் சர்க்கா சங்கத்தை விட்டு விலகிய மற்ற இளைஞர்களுக்கும் அதிக சம்பாத்தியம் கிடைக்கிறது.

அவர்கள் கதர்த் தொண்டிலேயே இருந்திருப்பார்களேயானால் அவ்வித பெரும் பணம் சம்பாதிக்க வழி ஏற்பட்டிருக்காது. பணம் கிடைத்து என்ன பயன்? அதை அவர்கள் விரும்பினார்கள் அல்லர். அவர்கள் நாடியது தேச சேவை ஒன்றே. கதர்த் தொண்டில் அவர்களுக்குக் குதூகல மிருந்தது. தங்கள் நாட்டில் ஒரு புது சகாப்தம் தொடங்குவதற்குத் தாங்கள் உதவுவதாக எண்ணியிருந்தார்கள். ஆனால் அவர்கள் அந்தத் தொண்டை விட்டு வெளியேறிய பிறகு நல்ல நிலைமையில் இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி யடைகிறேன். கதர்த் தொண்டர்களெல்லோரும் ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக வேலை செய்யும் கூலிகள் என்று அவதூறு கூறுகிறவர்களைப் பொய்யர்கள் என்று நிரூபித்துவிட்டார்கள்.

கதர்த் தொண்டர்கள் கவைக்குதவாத துருப்பிடித்த பழங்காலத்து ஏற்பாட்டை வீணுகக் கட்டி அழுகிருர்கள் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் இந்த வாலிபர்கள் தங்களுடைய சேவையில் கஷ்டங்களை அனுபவித்து உண்மைத் தியாகிகளாக விளங்குகிருர்கள் என்பது நிதர்சனம்.

கதர் வேலையை விட்டு அவர்களை நீக்கிவிட்டதால் சொந்த முறையில் அவர்களுக்கு ஒருவித நஷ்டமும் உண்டாகவில்லை. அவர்களுடைய, ஊக்கத்தையும், சேவையையும் இழந்ததால் கதர் ஸ்தாபனத்துக்குத்தான் நஷ்டம்.

மூடு மந்திரம்

ராட்டைச் சங்கத்தார் ஆரம்பித்த வரி கொடா இயக்கம் என்ன வாயிற்று என்று தெரியவில்லை. அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. சர்க்கார் அதிகாரிகள் வரிப்பணம் கேட்ட போதெல்லாம் தலைமை ஆபீஸைக் கேளுங்கள் என்று பதில் சொல்லி விட்டார்கள். தங்கள் எல்லைக்கு வெளியில் உள்ள எவரிடமும் போய் வரி கேட்கவேண்டிய அவசியம் அதிகாரிகளுக்கில்லை. அதிகாரிகளில் பலருக்குக் கதரில் அபிமானமிருந்ததால் அவர்கள் நிலைமை சங்கடமாயிற்று. அவர்களுடைய கட்மைப்படி உடனேநடவடிக்கை எடுத்தாக வேண்டும். சிலவிடங்களில் சர்க்கா சங்கத்தைச் சேர்ந்த ராட்டைகள் முதலிய சாமான்களை ஜப்தி செய்துஏலம் போடுவதாக

நாவனை செய்து பணத்தை அவர்களே கட்டி விட்டார்கள். ஆனால் யுத்தநஷ்ட இன்ஷியூரன்சுக்குச் சேரவேண்டிய தொகை அதிகமானதால், அவ்வளவு தொகையை அவர்களால் கட்டமுடியவில்லை. கடைசியில் தலைமைக் காரியாலயத்தார் இந்தவரியைச் செலுத்துவதற்கு அனுமதி கொடுத்து விட்டார்கள் என்று கேள்விப் படுகிறேன்.

இம் மாதிரி ஒருவரிகொடா இயக்கம் நடந்துவருகிறது என்பது அரசாங்கத்தாருக்குத் தெரியாது. பொதுமக்களுக்கும் இதுவரையில் அதைப்பற்றி ஒரு தகவலும் தெரியாது. அந்த இயக்கம் ரகசியமாகவே ஆரம்பிக்கப்பட்டு ரகசியமாகவே முடிவு கட்டப் பட்டது.

இப்படிப்பட்ட ரகசியமும் ஒளிவுமறைவும் பொருந்திய முறைகள் மகாத்மாவின் கொள்கைகளுக்கு முரண்பட்டவை என்று எனக்குத் தெரியும். காந்தியமல்லாத சாதாரண யுத்த தர்மத்திற்கும் இம்முறை முரண்பட்டது. அஹிம்சையின்பேரால் யுத்த தர்மத்தில் புதிய முறை உற்பத்தி செய்தோம். நாமே ஏற்படுத்திக் கொண்ட முறையை நாம் பின்பற்றுவோம் என்று எதிரியை நம்பச் செய்தோம். அந்த நம்பிக்கைக்கு விரோதமாக இப்பொழுது நடந்து கொண்டு விட்டோம். பழைய தர்மத்தையும் கடைப்பிடிக்காமல், நாம் உண்டாக்கிய புதிய தர்மத்தையும் கடைப்பிடிக்காமல் இரண்டிலும் உள்ள லாபத்தை மாத்திரம் சேர்ந்தாற் போல் அனுபவிக்க முயற்சிக்கிறோம்.

அரசாங்கத்தார் இந்த மாகாணத்தைப் பொறுத்த வரையில் கதர்த் தொண்டர்களிடம் பூரண நம்பிக்கை வைத்திருந்தார்கள். ரகசிய அரசியல் இயக்கத்திற்கு யத்தனங்கள் செய்கிறார்கள் என்று அவர்களைப் பற்றிச் சந்தேகிக்கவில்லை. இந்த வரலாற்றை நான் இதுவரையில் வெளியிடவில்லை. இப்போது வெளியிடுவதால் எவருக்கும் எவ்வித தீங்கும் நேராதென்று நிச்சயமாகத் தெரிவதால் இப்பொழுது அதைப்பற்றிச் சொல்லுகிறேன். இப்பொழுதிருக்கும் அரசியல் கொந்தளிப்பில் இந்த வரலாற்றால் நான் யாரைப்பற்றிக் குறை கூறுகிறேனோ அவர்களுக்குக் கீர்த்தி ஒரு வேளை பெருகலாம். அது எப்படி யானாலும் காந்தீயத்தின் அந்தரங்கத்தை மதிப்பதற்கு இந்த வரலாறு அவசியமாகிறது.

காற்றுவாக்கில்

சிறையிலிருந்து வெளிவந்த சர்க்கா சங்கத் தலைவரான மகாத்மா இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றி எவ்வித விசாரணையும் நடத்தாததைப்பற்றி நான் ஏமாற்றம் அடைந்தேன். சர்க்கா சங்கத்தாரின் ரகசிய அரசியல் தலையீட்டைக் கண்டிப்பார் என்று நான் எதிர் பார்த்தேன். நடந்த விவரத்தைக் கடிதம் மூலம் அவருடைய கவனத்திற்குக் கொண்டுபோனேன். கதர்த் தொண்டர் எவருக்கும் அரசியலில் ஈடுபடுவதற்குத் தான் அனுமதி கொடுத்ததில்லையென்று மேலெழுந்த வாரியாக எனக்குப் பதில் எழுதினார்.

இவ்விஷயத்தில் நான் நடந்துகொண்டது அவருடைய கொள்கைப்படி சரியாக

இருந்தாலும், கொள்கையை மீறினவர்களைப் பற்றி அவர் கவலை எடுத்துக்கொள்ளவில்லை. அவருடைய கவலையற்ற தன்மை எனக்குப் பேராச்சரியத்தை விளைத்தது. மகாத்மா தன்னுடைய கொள்கைகளைப் பற்றியிருந்த பிடி நழுவி விட்டது என்றும், இப்பொழுது அவர் சந்தர்ப்பம் என்னும் காற்றுவாக்கில் அடித்துக்கொண்டு போகப்படுகிறார் என்றும் கண்டேன். அந்த மகத்தான தோற்றத்தைக் கண்டு நான் திகைத்துப்போனேன்.

இது வரையில் அவரை நான் பின்பற்றும் பொழுதும், எதிர்க்கும்பொழுதும் அவரிடம் எனக்கு ஒரு அலாதிபற்று இருந்துவந்தது. சரியோ தவறோ அவர் செய்கையில் அர்த்தம் இருந்துவந்தது. அதைக் கைப்பற்றி சோதிக்க முடிந்தது. அவருடைய தோற்றத்தில் ஒருசத்து இருந்தது. இப்பொழுது அந்தச் சத்து மறைந்து வெறுந்தோற்றமாக மாறிவிட்டது. பிடிப்பில்லாமல் அசைவதெல்லாம் வெறுந்தோற்றந்தானே.

இம்மாதிரி எனக்குண்டான திகைப்பின் மூலம் என்னுடைய பழைய சந்தேகங்களெல்லாம் மறுபடியும் வெளிக்கிளம்பின. அவை காந்தீயத்தின் அடிப்படையைப் பற்றிய ஆராய்ச்சியில் மறுபடியும் என்னை இழுத்துவிட்டன. காந்தியத்தைப்பற்றி நான் ஏற்கனவே கூறிய ஆட்சேபணைகள் உண்மைதானே என்னுடைய பகுத்தறிவு காட்டிய வழியைவிட்டு விலகியது தவறுதானே! ருஷியக் கதையில் எஞ்சினியராக வந்த தனு பார்த்திரத்தில் அடைக்கலம் புகுந்த "ஆக்வேனுடைய சோம்பேறித்தனம் அல்லிர்ருளாதார

ஜவர்ஹர்லால் நேரு காங்கிரசின் போக்கைத் திருத்தி அமைப்பார் என்று நான் நம்பியது வீண் அல்லவா?

விபின் சந்திரபால் காறித்துப்பினால் போதும் என்று சொன்னதை நான் அப்படியே எடுத்துக்கொண்டது பரிகசிக்கத் தக்க ஒரு படுகுழியல்லவா?

எனது வாழ்நாளை காந்தீயத்தை அனுஷ்டிப்பதில் ஈடுபடுத்திவிட்டு, அந்தியத்தில் சந்தேகத்தையே கைக்கொண்டேன்.

மகாத்மா இம்மாதிரி காற்றுவாக்கில் போவதற்குக் காரணம் என்ன? அவருடைய பிடி ஏன் தளர்ந்து விட்டது? வெகு நாளைக்கு முன் நான் சொல்லியிருந்தது மறுபடியும் ஞாபகத்திற்கு வந்தது. பிடித்துக் கொள்ள ஒன்று மில்லாததால் பிடி தளர்ந்து விட்டது.

தற்கால ரீதியில் ராட்டைக்கும் உண்மைக்கும் சம்பந்தம் இல்லை. தற்காலத்தில் உள்ள பொருளாதார அரசியல் விஷயங்களுக்கும் ராட்டைக்கும் பொருத்தமேயில்லை. இங்கிலீஷ்காரர்களின் மேல் இந்தியருக்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பை ஆதாரமாகக்கொண்டு இந்த ராட்டையென்ற உயிரற்ற வேஷம் நடனமாடுகிறது. அங்கிய ஆட்சியை ஒழிப்பதற்காக நமது மக்கள் எதையும் செய்யத் தயாராயிருக்
ழுந்தனர். அந்த அன்னிய ஆட்சியை ஒழிப்ப
சப்புக் காட்டி மகாத்மா நம்மை நூற்
இவ்வி... கிறார். அங்கிய ஆட்சியின் முடிவு
டது அவருடை...

நெருங்கிவிட்டது. ஆனால் அது முடிவடைவ தற்குக் காரணம் நாம் ராட்டையில் நூற்ற தல்ல. உலகப் போக்கில் ஏற்பட்ட மகத்தான சக்திகளாலும், ஹிட்லர் வீழ்ச்சியடைந்ததாலும், ஏகாதிபத்தியங்களுக்குச் சாவுமணி யடித்து விட்டதாலும் மாத்திரமே இந்தியா வில் ஏற்பட்ட அந்நிய ஆட்சி ஒழிகிறதே தவிர, நாம் மகாத்மாவின் கொள்கைகளைப் பின்பற்றியதால் அல்ல.

சீனா, இந்தோனேஷியா, பர்சியர், ஈஜிப்ட் முதலிய தேசங்களுக்கெல்லாம் விடு தலை நாள் நெருங்கிவிட்டது. ஏனெனில், அவைகள் இன்றைய உலக நிலையில் விடுதலை அடைந்தே தீர வேண்டும். இந்தியாவுக்கும் இந்த விடுதலைப் பரிசில் பங்குண்டு. இந்தியர் அதற்குப் பக்குவம் அடைந்து விட்டது. அப்படிப் பக்குவம் அடைந்ததற்கு ராட்டையில் நூற்றது காரணம் என்று சொல்லுவது அபத்தம். சொல்லப்போனால் இந்தியாவுக்கு இனிவரும் சுதந்தர வாழ்க்கையில் ராட்டை ஒரு தடைக்கல்லாகவே விளங்கும்.

நமது கண்முன் இன்றைய தினம், ராட் டைக்கு என்னகதி நேரிட்டிருக்கிறதென்ப தைப் பாருங்கள். கதர் உடுத்தும் ஒவ்வொரு வரும் நூற்கவேண்டும் என்று சொல்லப்படு கிறது. கதர்க் கடையில் கையினால் நூற்ற நூலை விலையில் ஓரளவு கொடுப்பவர்களுக்குத் தான் கதர் விற்கிறார்கள். இதன் நோக்கம் என்னவென்றால் கதர் உடுத்தும் ஒவ்வொரு வரும் நூல் உற்பத்தியில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான். ஆகவே ராட்டை நூற்பது என்பது பொருளாதார

நோக்கத்தோடு அதில் கிடைக்கும் ஊதியத்திற்காக நடத்தப்படும் ஒரு தொழில் அல்ல. காந்தியம் என்னும் மதத்தின் ஒரு சின்னம் அது. பழைய காலத்திய மக்கள், தங்கள் நெற்றியில் மண்ணைக் குழைத்து நாமமாகவும், சாம்பலைக் குழைத்து விபூதியாகவும் இன்னும் பல வகையிலும் குறிகள் அணிந்து வந்தது மாதிரியே இன்று ராட்டை என்னும் சின்னத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

நித்திய கர்மானுஷ்டானங்களில் உள்ள அர்க்கிய ஜெபம் முதலியவைகளோடு ராட்டை நூற்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். காலை, மாலை செய்யும் கடவுள் தொழுகையோடு தொழுகையாக நூற்பதையும் வைத்துக் கொள்ளவேண்டியது. அப்படி, கடவுளைத் தொழாதவர்களுக்கு நூற்பது ஒரு தொந்தரவாகத்தான் முடியும். ஆனால் அவர்களுக்கு அரசியலில் ஆசையிருந்தால் நூற்றுத்தான் ஆகவேண்டும். அரசியலில் கிடைக்கும் பரிசுக்கு அப்படி நூற்பது அதிக விலையல்ல. எதற்கும் விலைகொடுத்துத்தானே ஆக வேண்டும்.

இந்த நூதன ஏற்பாட்டின் பலனாக ராட்டையில் நூற்பது விருத்தியாகவில்லை. கதருக்குக் கள்ள மார்க்கெட் ஏற்பட்டது. இப்போது நடந்த யுத்தத்தின் மூலம் ஏராளமான கள்ள மார்க்கெட்டுகள் பலவகையில் உற்பத்தியாகி விட்டதால் கதருக்கு ஏற்பட்ட கள்ள மார்க்கெட்டைப்பற்றி ஒருவரும் கவலைப்படவில்லை.

என்னுடைய வாதத்திற்குச் சிலர் ஒரு ஆட்சேபனை சொல்லக் கூடும். சிறு விஷ

யத்தை மிகைப்படுத்தினேன் என்று சொல்ல லாம். யுத்த சமயத்தில் ராட்டை வேலை யில் ஊழல் ஏற்பட்டது உண்மை என்றாலும் யுத்தம் நின்ற பிறகு சமாதான காலத்தில் அந்த வேலை ஏன் சரியாக நடக்கக் கூடாது என்று கேட்கலாம். இந்த ஆட்சேபனைக்கு என்னுடைய பதில் என்னவென்றால், யுத்த காலத்தில் ஏற்பட்ட தடங்கல் எதிர்பாராதது அல்ல. ராட்டையில் உள்ளூர இருந்த பல வீனத்தை வெளிபடுத்த யுத்தம் ஒருசந்தர்ப்ப மாகவே விளங்கியது. கதர் அணியும் பொது மக்களும், கதர் உற்பத்திசெய்யும் தொண்டர் களும் மகாத்மாவின் வார்த்தைக்குக் கீழ்ப் படிய வேண்டும் என்ற கட்டாயத்தினால் அப் படிச் செய்கிறார்களே ஒழிய உள்ளூர அவர் களுக்கு நம்பிக்கையில்லை. ஆகவே கதர் வேலை தன் சொந்த பலத்தினால் இயங்கவில்லை. வெளியிலிருந்து அதைக் கட்டி யிழுக்க வேண்டி யிருக்கிறது. இப்படி நம்பிக்கை யில்லாமல் செய்யும் தொண்டின் பலனாக நம் முடைய வாழ்க்கையே ஒருவேஷமாக மாறி அந்த வேஷப்போக்கு கதரில் மாத்திர மன்றி அரசியல் வாழ்க்கையிலும் பரிணமித்து நிற் கிறது.

நிர்மாணத் திட்டம் என்ற சூரிய மண் டலத்தின் நடுநாயகமாகிய சூரியனையே தரி சித்து வந்து விட்டோம். அந்தச் சூரிய லோகத்தில் நான் கண்ட நிகழ்ச்சிகள் உண்மையானால் அந்த உண்மை அந்தச் சூரி யனை மாத்திரம் அல்லாமல் அந்தச்சூரியனைச் சுற்றிவரும் மற்ற கிரகங்களையும் பாதிக்கும்.

ராட்டை இயக்கத்தின் அடிப்படையில் பழுது ஏற்பட்டுக் கொள்கையைக் கைவிடாமல் அந்த இயக்கத்தை நடத்த முடியாது என்ற நிலை ஏற்பட்டிருப்பது வாஸ்தவமானால், அவ்விதபழுது ஹிந்திபிரசாரம், தீண்டாமை விலக்கு, இந்து முஸ்லீம் ஒற்றுமை முதலிய மற்ற நிர்மாணத் திட்டங்களிலும் ஏற்பட்டுத் தான் இருக்க வேண்டும்.

III

சில கிரகங்கள்

கிராமக் கைத் தொழிற் சங்கம்

நமது சூரிய உலக யாத்திரை முடிந்து விட்டது. இந்த ராட்டை என்னும் சூரியனைச் சுற்றிவரும் பதினெட்டு உலகங்களையும் நேரில் காணவேண்டுமா என்று யோசிக்க வேண்டும். அவைகள் எல்லாவற்றையும் பார்த்து எழுதுவதென்றால் இதைப் போல் பல புத்தகங்கள் வெளியிட நேரிடும்.

அன்றியும் தற் சமயம், நமது மக்களுடைய மனம் படித்து ஆராய்ச்சி செய்யக்கூடிய பக்குவத்தில் இல்லை. அவசர அவசரமாகப் பல வகையான ஸ்லோகங்களைக் கத்திக்கொண்டு தலைதெரிக்க ஓடுவதிலேயே இருக்கிறார்கள். ஆகவே, நிர்மாணத் திட்டத்தில் நான் நேரே ஈடுபட்டிருந்த சில அம்சங்களைப்பற்றி மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறேன்.

ராட்டையோடு சேர்த்துப் பல விதத்திலும் பொருத்தமாக அமைக்கப்பட்டிருப்பது கிராமக் கைத்தொழில் இயக்கம். இதை நடத்திவரும் ஸ்தாபனத்திற்கு அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கம் என்று பெயர். தலைமை ஸ்தானம் வார்தாவில். மகாத்மாவின் சிஷ்யர்கள் சர்க்கா சங்கத்தில் செலுத்திய அளவு கவனத்தைக் கிராமக் கைத்தொழிற் சங்கத்தில் செலுத்தவில்லை. இதில் நடை பெறும் வேலைகளென்ன வென்றால் கைக்குத்

தல் அரிசி தயாரித்தல், நாட்டுச் செக்கில் எண்ணெயாட்டுதல், உழவு மண்ணிலிருந்து சோப்பு செய்தல் முதலியன.

கையால் செய்த காகிதம்

கையினால் காகிதம் செய்வதற்கு புனாவில் ஒரு ஆராய்ச்சி சாலை ஏற்படுத்தி அதில் ஓரளவு வெற்றி பெற்றார்கள். பம்பாயில் ஏற்பட்டிருந்த காங்கிரஸ் மந்திரி சபையார் இந்த ஆராய்ச்சி சாலைக்குப் பண உதவி அளித்தார்கள். வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கையால் செய்த காகிதங்களோடு ஒப்பிடும்படியான உயர்ந்த ரகமான காகிதங்களை உற்பத்தி செய்ய முடிந்தது.

கையால் செய்யப்படும் காகிதத் தொழிலில் உள்ள விசேஷம் என்னவென்றால், இந்தக் கைத்தொழில் யந்திரத்தொழிலோடு போட்டியிடும் சக்தி வாய்ந்தது. வேறு எந்தக் கைத்தொழிலுக்கும் யந்திரத்தொழிலோடு போட்டி போடும் சக்தியில்லை. கையினால் காகிதம் செய்யும்பொழுது, காகிதக் கூழைச் சல்லடையில் எடுத்து நாலு திசையிலும் அசைக்கப்படுகிறது. இவ்வித அசைவு கையினால் கொடுக்கமுடியுமே ஒழிய எந்த யந்திரத்தினாலும் கொடுக்கமுடியாது. ஆகையால் வெளி நாடுகளில்கூட சில குறிப்பிட்ட உபயோகத்திற்கு வேண்டிய பலமுள்ள காகிதங்கள் கையினாலேயே செய்யப்படுகின்றன.

ஒரே கூழிலிருந்து கொஞ்சங் கையினாலும், கொஞ்சம் யந்திரத்தினாலும் காகிதம் செய்யப்படுமானால் கையினால் செய்யப்பட்ட காகிதம்

மற்றதை விட கெட்டியானதாகவும் உயர்தர மானதாகவும் இருக்கும். ஆனால் கையினால் செய்யும் காகிதத்தொழில் வளர்ச்சியடை வதற்குக் காகிதக்கூழ் மிகவும் மேன்மையான தாக இருக்கவேண்டும். அந்தக் கூழைத் தயா ரிப்பதற்குக் கந்தைத் துணிபோன்ற சாமான் களை யந்திரங்களின் மூலம் கூழாக்கவேண்டும். ஆகவே இந்த உற்பத்தியின் ஒரு பாகம் யந்தி ரத்தாலும் மற்றொரு பாகம் கையினாலும் செய் யப்படுகிறது.

கிராமத்தில் கைக்காகிதம் செய்வதாகச் சொல்லிக்கொண்டு உலக்கை மாதிரி யுள்ள டெங்க்கி என்னும் சாதனத்தின் மூலம் உற் பத்தி செய்யப்படும் கூழிலிருந்து செய்யும் காகிதம் மிகவும் பலவீனமானது. ஆகையால் அந்தத் தொழிலுக்குப் பொருளாதார பலம் இல்லை.

வெளிநாடுகளில் உள்ள கையினால் காகி தம் செய்யும் தொழிலில் யந்திர வேலையையும் கைவேலையையும், ஒன்றுக்கொன்று முரணில் லாமல் ஒன்றுக்கொன்று பக்கபலமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையை நம் நாட்டாரும் கைக்கொள்வதால் லாபமும் முன்னேற்றமும் உண்டு.

இந்த நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டு பூனா பேப்பர் ஆராய்ச்சி சாலையில் உள்ள தொண்டர் மின்சாரத்தால் இயக்கப் படும் யந்திரத்தின் மூலம் காகிதக்கூழ் உற் பத்தி செய்ய மகாத்மாவை வற்புறுத்தி அனு மதியும் பெற்றுவிட்டார். ஆனால் பெயரளவில் மகாத்மாவிடமிருந்து அனுமதி கிடைத்ததே ஒழிய அகில இந்திய கிராமக் கைத்தொழிற்

சங்கத்தின் சர்வாதிகாரிகள் தங்கள் வைதீகக் கொள்கையில் ஏற்பட்ட மாறுதலேக்கண்டு அருவருப்பட்டார்கள். பூனு தொண்டருக்குப் பல இன்னல்களே உண்டாக்கி, அவரைக் கடைசியில் ஸ்தாபனத்திலிருந்து விரட்டிவிட்டார்கள்.

பூனு கர்கித ஆராய்ச்சி சாலையைப் பற்றி நான் நினைத்துப்பார்க்கும் பொழுது காந்தி நகரில் உள்ள ஒர்க்ஷாப்பின் கதி எனக்கு ஞாபகம் வருகிறது. இந்த இரண்டு முயற்சிகளும் ஒரேவித நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு ஒரேவித முடிவுக்கு ஆளாயின. கிராமக் கைத்தொழில்களே நவீன முறைப்படிப் புதுப்பிக்கவேண்டும்; விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட புதுப்புது சாதனங்களின் பலனை கிராமவாசி அனுபவிக்க வேண்டும்; பிற்போக்கான ஒரு திட்டத்தை முற்போக்குக்குக் கொண்டுவரவேண்டும்; என்று செய்யப்பட்ட முயற்சியை மகாத்மாவின் செல்வாக்கை ஏகபோகமாக ஆட்சி செய்யும் உள்துறைக் கூட்டத்தார் தங்களுடைய முழு பலத்தையும் கொண்டு எதிர்த்துக் கடைசியில் அதை அழித்தும் விட்டார்கள். இந்தக் கூட்டத்தின் தோற்றம் பரம வைதீகம். வெளிவேஷத்தைக் காப்பாற்றுவதற்குப் பெரு முயற்சி செய்வார்கள். ஆனல் நமது நாட்டின் பொது மக்களேப் பிடித்திருக்கும் வறுமையைப் போக்கடிப்பதற்கான தொழிலபிவிருத்தி வழி அவர்களுக்குத் தெரியாது. அதைப்பற்றி அவர்கள் கவலேப்பட்டவர்களும் அல்ல.

குழப்பம்

கிராமக் கைத்தொழில்கள் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஒவ்வொரு தேசத்திலும் அதனதன் முன்னேற்றத்திற்குத் தக்கவாறுள்ள தொழில்கள் இயற்கையாகவே அமைந்துள்ளன. நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி சம்ப்பான் என்ற படகுகளும் ரிக்ஷாக்களும் சீனு முதலிய கிழக்கு நாடுகளில் லட்சக்கணக்கில் இன்றும் கையாளப்பட்டு வருகின்றன. ஜப்பான் தேசத்தில் நாகரிகம் தலையெடுத்ததும், ரிக்ஷாவையும் சம்ப்பானையும் ஒழித்துவிட்டார்கள்.

இந்தியாவில் தற்போது அமைந்திருக்கும் நாகரிகம் கிழக்கும் மேற்கும் சேர்ந்த ஒரு கலப்படம். முற்போக்கும் பிற்போக்கும் ஒன்றியிருக்கிறது. இந்த நிலைமைக்கு அறிகுறியாக கட்டுமரமும், ராட்டையும் விளங்குகின்றன. எவ்வளவு படு பாதாளத்திலிருந்து வெளிக்கிளம்ப நம்முடைய மக்கள் அல்லல் படுகிறார்கள் என்பதற்கு இவைகள் அடையாளமாகும். ஒரு விதத்தில் நாம் சீனுவை விட்ப் பின்னணியில் நிற்கிறோம். ஏனெனில், சீனர்கள் வெகு காலத்திற்கு முன்பே கட்டுமரத்தையும், ராட்டையையும் கைவிட்டு விட்டார்கள். வேறு விதத்தில் பார்க்கும்போது சீனரைவிட நாம் முன்னேறிவிட்டோம். எவ்வாறெனில், மேனுட்டுச் சம்பந்தம் சீனரை விட நமக்கு அதிகமாக இருக்கிறது. நமது நாட்டை பிரிட்டிஷார் ஆள்வதினுல் நம்முடைய மனதில் இங்கிலாந்தைப்பற்றியும் மேல் நாடுகளைப்பற்றியும் உள்ள எல்லா விஷயங்களிலும் ஒரு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனுல் அந்த இங்கிலீஷ்

ஆட்சியின் காரணமாக நவீன விஞ்ஞான வளர்ச்சியின் பலன், சீனரையும் மற்ற கிழக்கு நாட்டினரையும் விட நமக்கு அதிகமாகக் கிடைத்திருக்கிறது. உண்மையிலேயே சீனுவைவிட நாம் நாகரிகத்தில் முன்னேறி யிருக்கிறோம். நம்முடைய தொழிலும் சீனத் தொழிலைவிட முன்னேறி யிருக்கிறது.

ஆனால் நம்மை ஆளும் பிரிட்டிஷார் இம்மாதிரி நாம் நாகரிகத்துறையிலும், தொழில் துறையிலும் விருத்தியடைய வேண்டும் என்று விரும்பவில்லை. அவர்கள் அறியாமலே, விரும்பாமலே, விஞ்ஞான அறிவு, விஞ்ஞானத்தின் பலன் நம்மை அடைந்திருக்கிறது. நம்மை ஆளும் அன்னியர்களின் மேல் இயற்கையாகவே நம்மிடம் வளரும் வெறுப்பு எவ்வளவானாலும், தேசபக்தியுள்ள எவனும் நமக்குக் கிடைத்துள்ள இந்தச் செல்வத்தை உதறித் தள்ளிவிடக் கூடாது. அப்படித் தள்ளுவது ஒரு பெரும் பிழையாகும். மகாத்மாவால் நிர்ணயிக்கப்பட்ட கிராமக் கைத்தொழில் இயக்கமானது இந்தப் பெரும் பிழைக்குஇலக்காகி நிற்கிறது. பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்திற்கும், மேனாட்டு ஜனநாயகத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் அறிந்து கொள்ளவேண்டும். முன்னது படுமோசமாயிருக்கலாம். பின்னது விஞ்ஞான மெனும் குழந்தை பிறந்து வளர்ந்த தொட்டில். அந்தக் குழந்தை பிரிட்டிஷாரின் சொத்தல்ல. மனித வர்க்கத்தின் சந்ததி. அதில் இந்தியருக்கும் சம்பந்தம் உண்டு. அணுக்குண்டின் ரகசியத்தை அறிய மற்ற நாட்டினருக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை நமக்கும்

உண்டு பிரிட்டிஷாரின் மேல் உள்ள ஆத்திரத்தால், குழந்தை மாதிரி கோபித்துக்கொண்டு இந்த உரிமையை வீசி எறிந்து விடாதீர்கள்.

ராட்டை இயக்கமும், கிராமக் கைத்தொழில் இயக்கமும் நமது கோபத்தின் அறிகுறியேயாகும். தனித்த முறையில் மகாத்மாவுக்கு யந்திரங்களின்மேலும் விஞ்ஞானத்தின் மேலும் வெறுப்பு ஏற்பட்டிருக்கலாம். அந்த வெறுப்பைப் பரப்புவதையே அவர் கொள்கையாகவும் கொண்டிருக்கலாம். ஆனால் வறுமையில் வதியும் நமது மக்கள் மற்ற தேசத்து மக்களைப்போல சந்தோஷ வாழ்க்கையைப் பெற்று, மற்ற தேசத்தாரோடு சரி நிகர்சமானமான நிலையில் வாழவே ஆவல் உள்ளவர்களா யிருக்கிறார்கள். மகாத்மாவின் கொள்கையில் அவர்களுக்குப் பிடித்தம் இல்லை. நம்முடைய கண்மூடித்தனத்தால் அன்னிய ஆட்சியின்மேல் ஏற்பட வேண்டிய வெறுப்பு நாகரிகத்தையும், யந்திர சாதனங்களையும் போய்ச் சூழ்ந்து கொண்டது. இந்தக் குழப்பத்தை அடிப்படையாக வைத்தே, அகில இந்திய சர்க்கா சங்கமும் அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்கமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து கிடைத்த பலன் வீண் வைதீகமும் அர்த்தமற்ற சடங்குகளுமேயாகும்.

பொது பாஷை

ராட்டை யென்னும் சூரியனைச் சுற்றிவரும் கிரகங்களில் மிகப் பெரிது இந்தி இயக்கமாகும். அந்த இயக்கத்தின் தத்துவத்தை வெகு சுருக்கமாகக் கூறிவிடலாம். இந்தியாவில்

உள்ள பல பாஷைகளில் இந்தி மொழியையே அதிகமான பேர் பேசி வருகிறார்கள். இந்தியாவில் அரசியல் ஒற்றுமை ஏற்படவேண்டுமானால் இந்தி தெரியாதவர்களெல்லாம் அதைப் பொது மொழியாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இம்மாதிரியான வாதத்தை ஒப்புக் கொள்ளுவதானால் சென்னை மாகாணத்தில் தமிழையே பொது பாஷையாக அரசாங்கம் அமைக்க வேண்டும். இப்பொழுது ஐக்கிய நாடுகளின் சங்கத்தின் மூலம் அகில உலகத்துக்கும் ஒரு பொது அரசாங்கம் ஏற்பட்டுவிட்டபடியால், இங்கிலீஷ்காரர்கள் இதே வாதத்தை கையாண்டு, "உலகில் பெரும் பாலோரால் பேசப் படுவது இங்கிலீஷே ஆகையால் உலகில் உள்ள மனிதவர்க்கம் முழுவதும் இங்கிலீஷையே கற்றுக்கொள்ள வேண்டும்" என்று வாதம் புரியலாம்.

வெறும் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட வாதத்தில் சத்தில்லை. இங்கிலீஷ் பாஷையைக் கற்பதற்கு ஆட்சேபனையாக, அந்தபாஷையில் எழுத்துச் சேர்க்கை ஒழுங்குமுறையாக அமைக்கப் படவில்லை என்று சொல்லப்படுகிறது.

எழுத்துப்பிரச்சினையை எடுத்துக்கொண்டால் இந்திபாஷையில் உள்ள ஊழல் அந்த பாஷையைக் கற்பதற்குப் பெருந்தடையாக இருக்கிறது. இந்தியாவில் உள்ள பாஷைகளில் இந்தியல்லாத மற்ற மொழிகளில் பல, இந்தியை விட அதிக வளர்ச்சி பெற்று உன்னத நிலையை அடைந்திருக்கின்றன. ஆகவே அந்த உயர்ந்த மொழிகளைத் தாய்

மொழிகளாகக் கொண்ட மக்கள், தங்கள் பாஷையைவிட ஹிந்திக்கு உயர்ந்த ஸ்தானம் கொடுக்க வேண்டும் என்பதைக் கண்டு மனம் குமுறுகிறார்கள். அவர்களுடைய தாய்பாஷை களின் இலக்கியத்தின் மேன்மையும், இலக் கணத்தின் நுட்பமும், நடையின் அழகும், ஹிந்தியைவிட மேம்பட்டவை.

உதாரணமாக:—ஹிந்தி பாஷையில் உயி ரில்லாத வஸ்துக்களைப்பற்றிப்பேசும்போதும் ஆண்பால், பெண் பால் என்ற பிரிவை உணர்த்தியே பேச வேண்டும். கல்லைப் பற்றியோ, மண்ணைப்பற்றியோ, மேஜையைப் பற்றியோ, நாற்காலியைப் பற்றியோ பேசத் தொடங்குவதற்குமுன், அது ஆணா, பெண்ணா என்று கண்டுபிடிக்க வேண்டிய சங்கடம் ஏற் படுகிறது.

இதற்குக் காரணம் ஆதிகாலத்தில் மனி தர்களுக்கு அறிவு வளர்ச்சி இல்லாதபோது, உலகில் உள்ள எல்லா நிகழ்ச்சிகளையும் ஆண் பெண் சேர்க்கை மயமாகவே கண்டார்கள். எதை எடுத்தாலும், ஒன்று அது ஆணாயிருக்க வேண்டும் அல்லது பெண்ணாயிருக்க வேண் டும் என்று நினைத்தார்கள். இயற்கையின் ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட இந்த மனோநிலை யிலேயே ஹிந்தியைப் போன்ற பாஷைகள் இன்றும் இருக்கின்றன.

தமிழைப் போன்ற மற்ற பாஷைகள் இந்த நிலையைக்கடந்து வெகுகாலம் ஆயிற்று. ஹிந்தியில் இலக்கணத்தை விட அதன் எழுத்தமைப்பு வெகு சிக்கலானது. பழய நாகரி எழுத்தை அடிப்படையாகக் கொண்டு 300க்கு மேற்பட்ட பல்வேறு எழுத்துக்களைக்

கற்றுலொழிய அந்தபாஷையைப் படிப்பதும் எழுதுவதும் முடியாது. ஆகையால் அந்த பாஷையில் எழுத்து வாசனை ஏற்படுவது மிக வும் துர்லபம்.

துருக்கி தேசத்தில் **ஆட்டா துர்க்** என்று பெயர்பெற்ற **கமால்பாஷா** எழுத்துவாசனை யேயில்லாத தனது மக்களுக்கு ஒருநொடியில் எழுத்தறிவு ஏற்படுவதற்குக் கையாண்ட உபாயம் துருக்கி பாஷையின் எழுத்துக்களில் அவர் செய்த சீர்திருத்தந்தான்.

நேத்தாஜி வழிகாட்டுகிறுர்

நமது நாட்டிலுள்ள தற்குறித்தனத்தை ஒழிக்க வேண்டுமாஞல் கமால்பாஷா காட்டிய வழியையே பின்பற்றவேண்டும். நம் நாட்டு வாலிபர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு நேத்தாஜியாக விளங்கும் சுபாஷ் சந்திரபோஸ் காட்டும் வழியும் அதுதான். அவருடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான சம்பவம் அவர் தைரியமாக மகாத்மாவை நேரிடையாக எதிர்த்து இந்திய பாஷைகளை யெல்லாம் ரோமன் எழுத்துக்களில் எழுத வேண்டும் என்று வற்புறுத்தியதாகும். ஹரிபுரா காங்கிரசில் தலைமை வகித்து தனது தலைமைப் பிரசங்கத்தை அவர் நடத்தியபோது நான் உணர்ச்சி மிகுதியால் ஸ்தம்பித்துவிட்டேன்.

இந்தியப் பொது மக்களுக்கு அச்சமயம் அவர் விடுத்த செய்தி யாவது :—

> நமது நாட்டு பாஷைகளுக்குள் ஒற்றுமை உண்டாகி, அவைகள் நவீன கால அமைப்புக்குத் தக்கவாறு சீர்திருத்தம்

அடைய வேண்டுமானால் அவற்றை ரோமன் எழுத்துக்களில் எழுதியாக வேண்டும், என்பதாகும்.

பாஷைச் சண்டை இந்தியாவை மாத்திரமன்றி, உலகில் உள்ள எல்லா நாடுகளையும் பற்றிய ஒரு பீடையாகும். இந்தப் பீடையை ஒழிப்பதென்றால் முரட்டுத்தனமாக மெஜாரிட்டி மைனாரிட்டி பார்த்து பெரிய பாஷை சின்ன பாஷையை நசுக்குவது கூடாது. அது விபரீதத்தில் முடியும். மக்களுடைய அந்தரங்க உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் அவைகளை முரட்டுத் தனமாக நசுக்குவதென்பது முடியாத காரியம். அணுச்சக்தி ஆதிக்கம் செலுத்தப்போகும் எதிர்காலத்தில் தேசிய எல்லைகளெல்லாம் உடைந்து அழிந்து போகுமாகையால் தேசீயத்தைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற குருட்டு எண்ணத்துடன், பாஷையை வற்புறுத்திப் புகுத்துவதில் பலனில்லை. அப்படி வலியுறுத்துவதால் ஏற்படும் பெரும் நஷ்டத்திற்குப்பலனாகக் கிடைக்கும் தேசீயம் என்னும் பகட்டுப் போர்வைக்குத் தற்காலம் மதிப்பின்றிப் போய்விட்டது. காலப்போக்கின் வேகத்தால், உலகத்தின் உருவம் குறுகிவிட்டது. ஆகவே தேசியமென்பது மக்கள் முன்னேற்றத்திற்கு ஒருதடை கல்லாகி விட்டதோடுகூட ஒரு இழிசொல்லாகவும் ஆகிவிட்டது.

இன்றைய தினம் உலகம் நாடுவது, மனித ஒற்றுமை, மனித சுதந்தரம், மனித எழுச்சி இவைகளே.

பிற நாடுகளில் இங்கிலீஷ்

தாய் பாஷைகள் கைவிடப்படுகின்றன என்று நான் சொல்லவில்லை. ஆனால் உலக முழுவதிலும், தாய் பாஷைகளுக்கு இரண்டாவது ஸ்தானமே கிடைத்து வருகிறது. ருஷியா ஜப்பான், சீனா முதலிய தேசங்களை நான் சுற்றிப் பார்த்தபோது, அந்த தேசங்களின் மக்கள் எல்லோரும் இங்கிலீஷ் கற்பதற்குப் பெரு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அகில உலகத்திலும் அறிவுடைய மக்கள் அனைவரும் இங்கிலீஷ் பாஷை கற்கிறார்கள். நமது நாட்டில் மகாத்மாவின் பிரசாரத்தின் மூலம் இங்கிலீஷ் பாஷையின் மேல் ஏற்பட்டிருக்கும் வெறுப்பு அறிவுக்கு ஒத்துவாராததோடுகூட தேச நன்மையையும் பாதிக்கிறது.

நமது நாட்டில் வாழும் பெருமிதமான மக்களுக்கு நவீன நாகரிக வளர்ச்சியும் விஞ்ஞானமேம்பாட்டின் பலனும் ஏற்படவேண்டுமானால் அது இங்கிலீஷ் பாஷையின் மூலமாகத்தான் உண்டாகவேண்டும்.

நம்மை ஆளும் துரைத்தனத்தார் சுய நலம் காரணமாகவே ஆங்கிலப் படிப்பை நமது நாட்டில் புகுத்தினார்கள். அவர்கள் எண்ணிய கெடுதல் அவர்கள் அறியாத உலக சரித்திர மாறுபாட்டினால் நமக்கு நன்மையாகவே முடிந்துவிட்டது. ருஷியாவில் உள்ள கம்மியூனிஸ்டு அரசாங்கமும், ஜப்பானில் உள்ள மிக்காடோ சர்வாதிகாரமும் தங்கள் மக்களை அதிவேகமாக இங்கிலீஷ் பாஷை கற்றுக் கொள்ளவேண்டும் என்று சாட்டையால் அடிப்பதுபோல் விரட்டிவந்தன. இந்த இரு அரசாங்கத்தார்களும், தீவிர

தேசபக்தியை வளர்த்து வந்த தோடுகூட இங்கிலீஷ்காரர்களின்மேல் மிதமிஞ்சிய வெறுப்புக் கொண்டிருந்தார்கள். தாங்கள் வெறுக்கும் பிரிட்டிஷாரின் பாஷையாகிய இங்கிலீஷைக் கற்பதற்கு இவர்கள் பெரு முயற்சி செய்தது ஏன்? அவர்களுடைய முன்னேற்ற வளர்ச்சிக்கு உயிர் நிலையாகிய தொழில் அபிவிருத்தி நுட்பங்களை அந்த பாஷையின் மூலமாகத்தான் கைப்பற்ற முடியும் என்பதனால் அல்லவா?

இந்தியாவில், தற்காலம் ஏராளமாக உள்ள இங்கிலீஷ் கற்ற மக்களை நம்தேசத்தின் பெரும் செல்வம் என்று கூறலாம். இங்கிலீஷ் பாஷையின் மேல் குருட்டுத்தனமாக வளர்க்கப்படும் வெறுப்பை விருத்தி செய்து கொண்டே போவோமானால் இப்பெரும் செல்வம் அழிந்துவிடும். இங்கிலீஷ் பாஷையை விரட்டிவிட்டு அந்த இடத்தில் ஹிந்தி பாஷையை வைப்போமானால் 300 வருஷங்களாக நமது நாட்டின் சரித்திரத்தின் பலனாக ஏற்பட்ட விஞ்ஞான அறிவும், தொழில் நுட்பங்களும் அழிந்து போய்விடும். நம்முடைய தலைமுறையில் உள்ள மக்கள் மாத்திரம் அன்றி, நமது மூதாதைகள் செய்த முயற்சிகளும், பட்ட அவதிகளும் பயனற்றுப்போகும்.

தேசபக்தியைப் போர்வையாக மாத்திரம் உபயோகிப்பவர்கள் என்னை ஒரு கேள்விகேட்கலாம். அறிவென்பது இங்கிலீஷ் பாஷையில் தான் இருக்கவேண்டுமா? இங்கிலீஷ் பாஷை மூலம் கற்ற அறிவாளிகளை நீக்கிவிட்டுப் புதிதாக இந்தி பாஷைமூலம் கற்ற அறிவாளிகளை ஏன் சிருஷ்டி செய்யக்கூடாது? தேசத்தாரின்

விருப்பம் அதுவானால் அப்படிச் செய்வதில் பிழை யென்ன?

இந்தக் கேள்விக்கு நான் விரிவான பதில் கூறவேண்டிய அவசியம் இல்லை. சோவியத் ருஷ்யாவில் நடந்த சம்பவங்களே தக்க பதிலாகும். ருஷ்யப் புரட்சியின் போது ஜார் சக்ரவர்தியைச் சேர்ந்தவர்களைக் கொன்று விடுவது அவசியம் ஆயிற்று. ஏனெனில் அவர்கள் தான் நிலச்சுவான் தாரர்களாகவும், லேவாதேவிக்காரர்களாகவும் இருந்து பொது மக்களைவதைத்து வந்தார்கள். ஆனால் புரட்சிகாரர்கள் பழய ஏற்பாட்டில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொண்டவர்களைக் கொன்றதோடு நிற்கவில்லை. பழய ஏற்பாட்டில் கலந்து உதவி செய்து வந்த குற்றத்திற்காக அந்ததேசத்தில் உள்ள உபாத்தியாயர்கள், விஞ்ஞானிகள், எஞ்சினியர்கள் முதலிய அறிவாளிகளையும் கொலைசெய்தார்கள். அறிவாளிகள் பூண்டே இல்லாமல் நாசம் பண்ணிவிட்ட பிறகு, புரட்சியின் முடிவில் அவர்களுக்கு ஒரு சங்கடம் உண்டாகிவிட்டது. தொழில்களை நடத்தி தேசத்தின் உயிரைத் தழைக்கச் செய்ய அறிவாளிகளின் கூட்டம் ஒன்று அவசியமாயிருந்தது. ஆதலின் புதிதாக அத்தகைய ஒரு கூட்டத்தை அவர்கள் உற்பத்தி செய்தார்கள். நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாகப் பெரும் செலவு செய்து அந்த உற்பத்தியைச் செய்துமுடித்தார்கள். கடைசியில் புதிதாகச் சிருஷ்டிக்கப் பட்ட அறிவாளிகளின் கூட்டத்திற்கும், ஏற்கனவே அழிக்கப்பட்ட அறிவாளிகளின் கூட்டத்திற்கும் ஒரு வித வித்தியாசமும் கண்டு பிடிக்க

முடியவில்லை. ஆனால் இந்தப் புதிய சிருஷ்டிக்கர்க ருஷ்ய தேசம் அனுபவித்த வறுமையும் துன்பமும் சொல்லுந்தரமன்று.

அங்கு நடைபெற்ற ஐந்து வருஷத் திட்டங்களின் செலவையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது அந்தச் செலவு அனைத்தும் பெரும் லஞ்சம் கொடுத்து வெளிநாடுகளிலிருந்து அறிவாளிகளை இறக்குமதிசெய்வதற்கும், பல இன்னல்களுக்கிடையே சொந்த நாட்டில் அறிவாளிகளை உற்பத்தி செய்வதற்கும் ஆன செலவுகளே. இவையெல்லாம் புரட்சியின்போது, குருட்டுதனமாக அக்காலத்தில் உள்ள அறிவாளிகளைக் கொன்ற தன்பலன் தான் நமது நாட்டிலும் ருஷ்யாவைப்போன்று குருட்டுத் தனமான நடவடிக்கை ஹிந்திபிரசாரத்தின் மூலம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இங்கிலீஷ்காரர்களின் மேல் நமக்கு இயற்கையாக உள்ளவெறுப்பு அறிவாளிகளை அழிப்பதில் கொண்டுபோய் விட்டிருக்கிறது. இந்தக் குருட்டு வழியில் செல்வோமானால் நமது நாட்டிற்கு எதிர் காலத்தில் பெரிய பெரிய துன்பங்கள் வருவதோடு நமது நாட்டில் இரத்தக் களரியும் ஏற்படலாம்.

இந்தி எதிர்ப்பு இயக்கம்

எப்படியும் இந்திபாஷையைப் பரப்பித்தான் ஆகவேண்டும் என்ற குருட்டுயோசனையின் பலனாக உள்நாட்டுக் கலகங்கள் ஏற்பட்டு இரத்தம் சிந்தும் நிலமை ஏற்படலாம் என்று எண்ணுகிறேன்.

சென்னையில் காங்கிரஸ் ஆட்சியின்போது நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்தின் பாடத்தை மகாத்மா கற்றுக்கொள்ளவில்லை. அதை வீண் கலாட்டா என்று உதாசீனம் செய்வதில் பலன் இல்லை. மகாத்மாவின் எண்ணப்படியுள்ள உண்மை சத்தியாக்கிரகம் அல்லவென்று அதைச் சொல்லலாம். சத்தியாக்கிரகத்தையே கேலிசெய்வதற்கென்று ஏற்பட்ட வெறும் நாடகம் என்றும் அதைச் சொல்லலாம். நாடகமோ அல்லவோ அது ஒரு எதிர்ப்பு என்பதை ஒத்துக்கொண்டு தான் ஆகவேண்டும். அந்த எதிர்ப்புக்குத் தென்னாட்டு மக்கள் ஓரளவு ஆதரவு கொடுத்தார்கள் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். அத்தகைய பொதுஜன ஆதரவு அந்த இயக்கத்திற்குக் கிடைத்ததற்குக் காரணம் என்ன? ஹிந்திப்பிரசாரத்தின் மேலெழுந்தவாரியாக உள்ள முரட்டுத்தனத்தால், இங்கிலீஷ் பாஷை மூலம் தென்னாட்டு மக்களுக்கு கிடைத்து வரும் விஞ்ஞான வளர்ச்சியின் பலன் தடைப்பட்டுப்போகும் என்ற பயம் அல்லவா?

பாக்கிஸ்தான் இயக்கத்தில் இந்தி எதிர்ப்பு ஒரு முக்கிய அம்சமாக அமைந்துவிட்டது. ஆகவே ராஜ தந்திரிகள் கையாள வேண்டிய முறைப்படி இந்தி எதிர்ப்பு என்ற சிறு சம்பவத்திலிருந்து கூட இந்திப் பிரசாரத்தைப் பொது மக்கள் அந்தரங்கத்தில் வெறுக்கிறார்கள் என்ற ஒரு பெரிய உண்மையைக் கண்டுகொள்ளவேண்டும்.

தஷ்ட ஈடு

இந்தியைக் கற்கவேண்டும் என்று வாலி பர்களைக் கட்டாயப்படுத்துவதால் ஏற்பட்ட அவர்களுடைய தியாகத்திற்கு ஈடாகத் தாய் பாஷை முன்னேற்றம் என்ற பெயரால் அவர்களுக்கு ஒரு வெகுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. தாய்மொழிகளுக்குப் பெருமிதமான மதிப்புக் கொடுத்து, இந்தியாவையே பாஷை வாரியாகத் துண்டிக்கவேண்டும் என்றும், தாய் மொழியின் மூலமாகவே உயர்தரக்கல்வி போதிக்கப்படவேண்டும் என்றும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

தங்களுடைய அறிவை ஆத்திரத்திற்குப் பறிகொடுக்காத நண்பர்களுக்குத் தாழ்மையுடன் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். காலேஜ்களிலும், எஞ்சினியரிங் போன்ற தொழிற் கல்வி ஸ்தாபனங்களிலும் தாய் பாஷையின் மூலமாகத்தான் கல்வி கற்க வேண்டும் என்ருல் அது தேசத்திற்கு ஒரு பெரிய ஆபத்தையே விளைவிக்கும் என்று நான் எண்ணுகிறேன். நமது நாட்டின் வறுமையைப் போக்குவதே நமது முதன்மையான வேலையாகும். அதற்குள்ள ஒரே சாதனம் தொழில் முன்னேற்றம். அதிவிரைவில் ஏற்படவேண்டிய தொழில் முன்னேற்றத்திற்குத் தக்க மேற்படிப்பு எந்தத் தாய்மொழியின் மூலமும் கிடைக்காது. உயர்தரக் கல்விக்குத் தக்க வார்த்தைகளை உண்டாக்கிப் பாட்டுத்தகங்களை வெளியிடுவதென்ருல் அதற்கு நீண்ட நாளாகும். அதுவரையில் நமது நாடு விஞ்ஞான அறிவு பெருமல், நாகரிக முற்போக்

கடையாமல் இப்போதிருக்கும் பரிதாபமான நிலையில் தாளம்போட்டுக்கொண்டு நிற்க வேண்டியதுதான்.

கடவுள்

இம்மாதிரி தாய்மொழிக்கு அளவுக்கு மிஞ்சிய பெருமை கொடுப்பது நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அன்னிய ஆட்சியின்மீது நமக்கு ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பின் சின்னமாகும். நம்முடைய எழுத்து, சொல், இலக்கணம் இவைகளையெல்லாம் புகழ்ந்து கொண்டு அன்னிய ஆட்சியினுல் உள்ள அவமானத்தை மறைத்து நமது சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளுகிறோம். ஆனால் எதிர்காலத்தில் ஏற்படும் சுதந்தர வாழ்வில் இவ்வித உபாயங்களுக்கு அவசியம் இருக்கப் போவதில்லை.

தீர்க்கமாக ஆராய்ந்து பார்க்குங்கால் ஒரு பாஷையென்பது மனித வாழ்க்கையில் ஒரு நோக்கத்தை அடையும் சாதனமே ஒழிய, வெறும் பாஷையே ஒரு நோக்கமாக இருக்க முடியாது. ஆகவே பாஷையை வணங்குவது என்பது கேலிக் கூத்தாகும். பாஷையைக் கடவுளாக்கி அந்தக் கடவுளுக்குப் பலியாக இரத்தம் சிந்தவேண்டும் என்று குதிப்பவர்களின் அறியாமையை என்னென்று சொல்லுவது?

பாஷையில் கடவுள் தன்மை ஏது? ஆராய்ந்து பார்த்தால் பாஷையென்பது நாவின் பழக்கத்தால் ஏற்படுவது. ஆதியில் மனித சமூகம் பலவிடங்களில் சிதறி வாழ்ந்து வந்ததால் ஒவ்வோரிடத்திலும் உள்ள மனித

சமூகமும், ஒவ்வொரு நாப்பழக்கத்தைப் பின் பற்றியது, ஆகவே பாஷைகள் பலவாயின. சிதறிக்கிடந்த சமூகங்களுக்குச் சில சமயங் களில் போக்குவரவு சாதனங்கள் ஏற்பட்ட் தால் பாஷைக்குப் பாஷை, பழக்கத்துக்குப் பழக்கம் சம்பந்தங்கள் உண்டாயின.

பாஷைகளின் சரித்திரத்தைப் பரிசோ தித்துப் பார்ப்போமானல் ஒவ்வொரு பாஷை யிலும் பல சமயங்களில் பல புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. எழுத் திலும், சொல்லிலும்; இலக்கணத்திலும் ஏற் பட்ட் புரட்சிகள் அளவற்றவை. அப்படிப் புரட்சிகள் ஏற்படாமல் முரடுதட்டிய பாஷை கள் நாளடைவில் இறந்துவிட்டன. ஆகவே பாஷைகளை நம்முடைய வீண் குதூகலங் களுக்கு இரையாக்காமல் அவைகளின் இயற்கை வளர்ச்சிக்கு விட்டுவிட்டோமானல், பாஷைகள் ஒன்ருெடொன்று கலந்து, ஒன் றுக்கொன்று கொடுத்து வாங்கி, வளர்ந்து கொடுத்து, மாறுதல் அடைந்து, உயிரோடு ஒன்றிக்கலந்து, அந்தத்தில் ஒன்றேயாகிப் போய்விடவும் கூடும்.

எல்லா பாஷைகளையும் திரட்டி ஓர் உரு வாக்கி, அந்த ஒரு பாஷையையே மனித வர்க் கம் பேசவேண்டும் என்று உலகத்து அறி வாளிகள் ஆரம்பித்திருக்கும் எஸ்பிராண்டோ என்னும் இயக்கத்தைப்பற்றி மகாத்மா கேலி செய்து எழுதியிருக்கிருர். உயர்ந்த முற்போக் குக் கொள்கைகள் பிற்போக்காளருக்குப் பரி கசிப்பாகத்தான் இருக்கும். ஆனல் மனித சமூகம் உண்மையில் சுதந்தர வாழ்க்கை எய்த வேண்டுமானல், உலகத்தார் ஒருவ

ரோடு ஒருவர் அடித்துக்கொண்டு இரத்தம் சிந்தும் காலம் முடிவடைய வேண்டுமானால், மனித சமூகத்தின் பண்பாடு ஒன்றுபட்டு ஒரே பாஷையின் மூலம் பிரதிபலிக்கவேண்டும்.

இந்த நோக்கம் இன்றையதினம் வெகு தூரத்தில் இருப்பதாகக் காணப்படலாம். ஆனால் அந்தத் திசையை நோக்கியே நாம் நடக்கவேண்டும். இந்திப் பிரசாரம் என்பது அதற்கு எதிர்த்திசையில் இருக்கிறது.

ஹரிஜன்

இப்பொழுது நமது சுற்றுப் பிரயாணத்தில் சூரியமண்டலத்தின் வேறொரு கிரகத்தை அடைந்துவிட்டோம். வானவெளியில் நாம் செய்யும் பிரயாணத்தில் வாசகர்களுக்கு ருசியில்லாமல் இருக்கலாம். ஏனெனில் நாம் தரிசிக்கும் கிரகங்கள் எல்லாம் ஒன்று போலவே மற்றொன்றும் ஒளி மழுங்கியிருக்கின்றன. ஆகவே நமது சுற்றுப் பிரயாணத்தை நீட்டாமல் விரைவாக முடித்துக்கொள்ளுவோம்.

இப்பொழுது நாம் அடைந்திருக்கும் கிரகத்தின் பெயர் ஹரிஜன். இந்துமத புராணங்களில் காணப்படும் மும்மூர்த்திகளில் ஒன்றாகிய ஹரியின் பக்தர் என்பது இந்தப் பெயரின் பொருள். இந்த மும்மூர்த்திகளில் ஒன்றை வணங்குவோர் மற்ற இரண்டை வணங்குவோரை அன்னியர்கள் என்றும், வேறுமதஸ்தர்கள் என்றும் கருதுகிறார்கள். ஆகவே ஹரிஜன் என்ற பெயரை எல்லா இந்துக்களும் ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆனால் நம

நாட்டில் தீண்டப்படாதார் எனக் கருதப்படும் மக்கள் அனைவருக்கும் இந்தப் பெயரையே மகாத்மா சூட்டியிருக்கிறார்.

உலகத்து மக்கள் அனைவரையும்விட அதிகமான அவதிகளுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்டவர்கள் இந்தியாவில் உள்ள தீண்டப்படாத ஜாதியினர். இவர்கள் அனுபவித்த கொடுமைகளுக்கு ஆத்மீக பரிசாக இந்த அருமையான பெயர் அவர்களுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது. இவ்வாறு கடவுளுக்கு நெருங்கியவர்கள் என்ற அர்த்தமுள்ள பெயரை அவர்களுக்குச் சூட்டியதன் காரணம், அவர்கள் இன்னும் அதிகமாக இந்துமத பக்தியில் ஈடுபட்டு ஆத்மீகத் துறையில் மேம்படவேண்டும் என்பதும், அவர்களுடைய லௌகீக தேவைகளைப்பற்றி அவர்கள் கவலைகொள்ளக் கூடாது என்பதும் ஆகும்.

பரிசுத்தமான இந்து மதத்தில் ஏற்பட்ட ஒரு அழுக்கு இந்தத் தீண்டாமை என்று சொல்லப்படுகிறது. ஆத்மீகத் துறையில் தீண்டாதவர்களையும் மற்ற சமூகத்தாரோடு சரிசமானமாக வைத்து விட்டால் இந்தப் பிரச்சினையே தீர்ந்துவிடும் என்றும் சொல்லப்படுகிறது.

கீதை

இந்தப் பிரசாரத்தில் உள்ள குதர்க்கம் என்னவென்றால் தீண்டாமையென்பது இந்து மதத்துக்குள் எங்கிருந்தோ வெளியிலிருந்து வந்து புகுந்துகொண்டதென்றும், அது மேலெழுந்த வாரியாக உள்ள ஒரு மாசுதான்

என்றும், பலபட்டரையான கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் கலந்துள்ள இந்து மதத்தில் அடிப்படையான மாறுதல் உண்டாக்காமலே இதை ஒழித்து விடலாம் என்றும் செய்யப்படும் பாசாங்குதான் இது.

இந்து மதம் என்றால் என்ன என்பதைப்பற்றி மகாத்மாவே எல்லைகட்டி வரையறுத் திருக்கிறார். அவருடைய எண்ணத்தில் கிறிஸ்துவ மதத்திற்கும், பைபிளுக்கும் என்ன சம்பந்தமோ, இஸ்லாமிய மதத்துக்கும் குரானுக்கும் என்ன சம்பந்தமோ, அவ்வித சம்பந்தம் இந்து மதத்துக்கும் கீதைக்கும் இருக்க வேண்டும் என்றும், கீதையைப் போற்றுகிறவர்கள்தான் இந்துக்களாகக் கருதப்பட வேண்டும் என்றும் எண்ணியிருக்கிறார்.

ஹிந்து என்ற சொல்லுக்கு இந்தக் குறுகிய அர்த்தத்தைக் கொண்டு பார்ப்போமானால், கீதையை ஒப்புக்கொள்ளாதவர்கள் ஹிந்து மதத்திலிருந்து விலக்கப்படவேண்டும். தெளிந்த அறிவோடு கீதையைப் படிப்பவர்களுக்குப் புலப்படுவது என்னவென்றால், அர்ச்சுனன் தன்னுடைய உறவினர்களோடு யுத்தம் செய்து அவர்களைக் கொல்ல மறுக்கிறான். கிருஷ்ணன் அவனுடைய மனதைக் கலைக்கிறான். கிருஷ்ணனுடைய வாதமெல்லாம், அர்ச்சுனன் க்ஷத்திரிய குலத்தில் பிறந்ததால் யுத்தம் செய்வது அவனுடைய தர்மம் என்பதாகும். கிருஷ்ணன் தானே கடவுள் என்பதாகவும், அப்படி கடவுளாக இருக்கும் தான் ஜாதிகளைச் சிருஷ்டித்து, மானிடராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய பிறப்பிலேயே ஜாதிப்பட்டத்தைச்

சூட்டி, அந்தந்த ஜாதிக்குத் தக்கவாறு அவரவர்கள் கடமைகளைச் செய்து வருமாறு ஆக்ஞாபித்திருக்கிறதாகச் சொல்லுகிறான். இவ்வாறு கடவுளாலேயே ஏற்படுத்தப்பட்ட கடமைகளை மீறுவது சாதாரண மனிதனுடைய சக்திக்கு அப்பாற்பட்டது என்று கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு அறிவுறுத்துகிறான்.

அர்ச்சுனனைக் கடவுள் க்ஷத்திரியனாகப் பிறப்பித்து விட்டார். இனி அவனுக்கு யுத்தம் செய்யமாட்டேன் என்று சொல்லவோ உறவினர்களைக் கொல்லமாட்டேன் என்று சொல்லவோ சுதந்தரம் இல்லை. இந்த மட்டரகமான வாதத்தை மேன்மைப் படுத்துவதற்கு, உரையாசிரியர்கள் பல விதமாக மெருகு கொடுத்திருக்கிறார்கள். ஒரு வித மெருகு என்னவென்றால், கீதையில் சொல்லப்பட்ட யுத்தம் பூதாகாரமாக மனிதனுக்கு மனிதன் செய்யும் யுத்தமல்ல. ஆத்மீகத்தில் நடக்கும் யுத்தம் என்றும், கீதையில் குறிப்பிட்ட உறவினர்கள் மனிதர்கள் அல்ல மனிதர்களுடைய கெட்டகுணங்கள் தாம் என்றும், அந்தத் தீயகுணங்களைக் கொல்வது அவசியம் தான் என்றும் சொல்லுவதாகும்.

உரையாசிரியர்கள் கொடுக்கும் வேறொரு விதமான மெருகு, ஜாதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்திவிடும் நோக்கத்துடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஜாதி என்பது பிறவியால் மாத்திரம் ஏற்பட்டதல்ல. அது குணத்தைப் பொறுத்தது, அவனவனுடைய ஒழுக்கமேன்மையைப் பொறுத்து ஜாதி அமைகிறது என்பதாகும்.

இவ்விதமாக எந்த விதமான மெருகு கொடுத்தாலும் அழியாத கலையாத ஒரு நோக்கம் கீதையில் அடங்கி யிருக்கிறது. ஜாதித் திட்டத்தை நியாயமானது என்று நிரூபித்து, அதை நிலை நிறுத்துவதே கீதை ஆசிரியரின் நோக்கமாகும்.

ஜாதி அமைப்பு ஒரு ஏணிபோல் அமைந்திருக்கிறது. உச்சியில் பரிசுத்தமான பிராமணனும், அடுத்தபடியாக யுத்த வீரனை க்ஷத்திரியனும், அதன்கீழ் படிப்படியாக மற்றவர்களும், எல்லாப் படிகளுக்கும் கீழ்ப் படியில் தீண்டப்படாதவனும் அமைந்திருக்கிறார்கள். இந்த படிப்படியான அமைப்புக்கு ஆதாரமான கொள்கை தீண்டாமையாகும். தீண்டாமைதான் கீதையின் போதனை. தீண்டாமை வேண்டாம் என்று சொல்லுகிறவர்கள் கீதையின் போதனையை எதிர்த்து, கீதையால் கட்டப்பட்டிருக்கும் வர்ணாச்ரமம் என்னும் ஜாதிக் கோட்டையின் அடிப்படையைத் தகர்க்கிறவர்கள் ஆவார்கள்.

ஜாதிக்கு மகாத்மாவின் பாதுகாப்பு

மகாத்மா தனது இளமையில் ஜாதியைக் காப்பாற்ற வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார். அக்காலத்தில் அவர் எழுதிய வார்த்தைகளே இதை நிரூபிக்கும். 1920-ஆம் வருஷம் தனது யங்இந்தியா பத்திரிகையில் அவர் எழுதியிருப்பதாவது :—

தக்ஷிண யாத்திரையின்போது நான் ஜாதிப் பாகுபாட்டைப் பற்றிப் பேசியதைக்கண்டு சிலர் கோபங்கொண்டு எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

இந்தக் கடிதங்களை நான் பிரசுரிக்காமைக்குக் காரணம் அவைகளில் வசைச் சொற்கள் மலிந்திருப்பதுதான்...................

இந்தக் கடிதங்களில் கண்டுள்ள வாதம் என்னவென்றால், ஜாதிப் பாகுபாடே இந்திய நாட்டை நாசம்செய்து விட்டதென்பதும் ஜாதிப் பாகுபாடே இந்தியாவை அடிமைப்படுத்தி விட்டதென்பதும் ஆகும். ஆனால் எனது கருத்து நம்முடைய இந்த நிலைமைக்குக் காரணம் ஜாதி அல்ல என்பதே.

இந்துமதத்தை அழிந்துபோக விடாமல் காப்பாற்றியது ஜாதித்திட்டந்தான் என்று நான் நம்புகிறேன். மக்களை நான்குவகையாகப் பிரிக்கும் பாகுபாடுதான் இயற்கைக்குப் பொருத்தமானதும் அவசியமானதும் ஆகும். இந்த அடிப்படையான பாகுபாட்டை மாற்றுவதற்குச் செய்யப்படும் எந்த முயற்சியையும் நான் உறுதியாக எதிர்த்து நிற்பேன்...................

ஜாதி அமைப்பில் உயர்வு தாழ்வில்லை...மனித குணங்கள் பரம்பரையை ஒட்டிவருவது இயற்கையில் ஏற்பட்ட மாற்ற முடியாத சட்டம். அந்தச் சட்டத்தை மாற்றுவதற்குச் செய்யப்படும் முயற்சிகளெல்லாம் வீண்குழப்பத்திலேயே கொண்டு போய்விடும்............

இந்துக்கள் மறுபிறப்பில் நம்பிக்கை வைத்தாக வேண்டும். ஆத்மா ஒரு கூட்டிலிருந்து மற்றொருகூட்டுக்குப் பாய்கிறது என்னும் கொள்கையையும் நம்பியாக

வேண்டும். அப்படி அவர்கள் நம்புவார்களானல் இயற்கை செலுத்தும் நியாய அமுலில் ஒரு பிராமணன் இப்பிறப்பில் குற்றம் செய்வானேயானல் அடுத்த ஜென்மத்தில் அவனைக் கீழ் ஜாதியில் பிறக்கும்படியும், இந்த ஜென்மத்தில் உத்தம பிராமண தர்மத்தைக் கைப்பிடிக்கும் ஒரு கீழ் ஜாதியான் அடுத்த ஜென்மத்தில் பிராமணனுகப் பிறக்கும்படியும் ஏற்படுகிறது.........

இந்துக்களை நான்கு வகையாகப் பிரித்து வைக்கும் ஜாதிப் பாகுபாட்டை நான் எப்பொழுதும் பாதுகாத்து வருகிறேன். இனியும் பாதுகாக்கத் தயாராகவே இருக்கிறேன். ஜாதிப் பாகுபாட்டில் அமைந்துள்ள கொள்கை எவனையும் தான் உயர்ந்த பிறப்புடையவன் என்று கர்வம் அடையச் செய்யவில்லை. ஒவ்வொருவரும் அவனவனுடைய சக்திக்குத் தகுந்தபடி மேன்மையடைய வழி காட்டுகிறது. சமூகத்தை நிலைநிறுத்தவும் மேன்மையடையச் செய்யவும் ஜாதித் திட்டமே தகுந்த சாதனம். குணங்கள் பரம்பரையை ஒட்டிவருகின்றன என்ற கொள்கையை அது பின்பற்றுகிறது. ஒவ்வொருவரும் மேன்மையடைய அது ஒரு வழிகாட்டியே, ஆதலால் முன்னேற்றத்தைக் கருதி ஜாதியாசாரத்தைக் கைவிட்டவர்கள்கூட ஜாதிக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்பதில் அநியாயம் ஒன்றும் இல்லை........

ஜாதி அமைப்பில் தானுகவே ஒரு ஏற்றத்தாழ்வு ஏற்பட்டுவிட்டதை ஒப்புக் கொள்ளாமலிருக்க முடியாது. ஆனால் அவ்வித ஏற்றத் தாழ்வைப் பிராமணர் கள் உண்டாக்கினர்கள் என்று சொல்லு வது தவறு. வாழ்க்கையின் உன்னத நோக்கம் ஒன்றே என்று எல்லா ஜாதி யாரும் ஒப்புக்கொள்ளுவதால் இந்தவித ஏற்றத் தாழ்வு ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை. ஏனெனில் அந்த நோக் கத்தை எல்லா ஜாதியாரும் ஒரே அள வில் அடையமுடியாது.

மேற்கண்ட வாக்கியங்களிலிருந்து, மகாத்மா ஒரு காலத்தில் இந்து மதத்தின் ஜீவநாடி ஜாதிப்பாகுபாடுதான் என்று நம்பி யிருந்தார் என்பது வெளிப்படை. அவரு டைய இந்த மனப்போக்கின் காரணமாக ஜாதியை அழிப்பதற்குத் தங்களுடைய உயி ரைத் தத்தம் செய்த பல வாலிபர்களுடைய வாழ்க்கை நாசமாயிற்று. காலப்போக்கில் மகாத்மாவுக்கு ஏற்பட்ட கஷ்ட அனுபவங்க ளால் புதிய படிப்பினைகள் அவருக்கு ஏற்பட் டிருக்கலாம். அதன் காரணமாக ஏற்கனவே கூறியுள்ள வார்த்தைகளை வாபஸ் வாங்க அவர் விரும்பலாம். தன்னைப் பின்பற்றுகிற வர்கள் தன்னுடைய வார்த்தைகளை அப்ப டியே உட்கொள்ளக்கூடாது என்று இப்பொ ழுது கூறிவருகிருர். ஆனால் இத்தகைய முக் கியமான விஷயங்களை மழுப்பிவிடுவது அழ கல்ல. நேரடியாக, மாறுதல் உண்டா? இல் லையா? உண்டு ஆனல், எந்த அளவு உண்டு? என்பதை வரையறுத்து அறிவிக்கவேண்டும்.

தான் செய்த குற்றத்தினால் ஏற்கனவே பலர் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகி யிருந்தும், இப்பொழுதும் ஆகிக்கொண்டிருந்தும், இன்னும் ஆகப்போகும் நிலையில் இருந்து கொண்டிருந்தும்கூட, நேரடியாக அந்தக் குற்றத்திற்குப் பரிகாரம் தேடாமலிருப்பது வீண் தற் பெருமையாகும்.

கீதையை ஒப்புக்கொள்ளவேண்டும் என்றால் ஜாதி அமைப்பை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ஜாதி அமைப்பை ஒப்புக் கொண்டால்-தீண்டாமையை ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும்.

தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்று வாயளவில் கூறிவிட்டு, ஜாதி யாச்சாரத்தைக் கடைபிடித்து, காலையிலும் மாலையிலும் கீதா பாராயணம் செய்து வருவது நேர்மையல்ல. இவ்வித முரண்பாட்டில் அழகில்லை. ஏதோ சில நாட்களுக்கு இதை நடத்திக்காட்டலாம். ஆனால் காலப்போக்கு என்னும் எமன் ஒரு நீதிபதி. ஆர்ப்பாட்டமாக இன்று இவ்வித முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டிருக்கும் ஹரிஜன இயக்கமென்னும் பெரிய மாளிகையை ஒரு நொடியில் தகர்த்துத் தரைமட்டமாக்கி விடுவான்.

அம்பெத்கரை அடக்கி ஆளலாம். தீண்டாமையின் ஆதிக்கத்தை ஹரிஜன இயக்கம் என்னும் ஆர்ப்பாட்டமான பெயரால் நீடித்து வைக்கலாம். ஆனால் இவற்றின் பலனாக மக்களின் அரசியல் பொருளாதார சுதந்தரம் கானல் நீர்போல் கிட்டாமல் போய்விடும்.

இந்து-முஸ்லிம்

மானசீக ஆகாயக் கப்பலில் வாசகர்களைப் பல உலகங்களுக்கு அழைத்துப் போனேன். இந்த யாத்திரையை நீடிக்கவேண்டிய அவசியம் இல்லை. மகாத்மா சிருஷ்டி செய்திருக்கும் சூரிய மண்டலத்தில் 18 கிரகங்களும் அவற்றைச் சுற்றிவரும் எண்ணற்ற சிறுசிறு உலகங்களும் உண்டு. அவைகள் எல்லாவற்றையும் தரிசிப்ப தென்றால் வாசகர்களுக்குச் சோர்வு உண்டாகும். ஆனால் இன்னும் ஒரு யாத்திரை மாத்திரம் அவசியம் செய்தே ஆகவேண்டும். இந்த பிர்மாண்டமான சூரிய மண்டலத்தை இயக்கும் சிலரகசியங்களை அந்த யாத்திரையில்தான் காண முடியும். ஆதலால் மீண்டும் விமானமேறி ஆகாயத்தைப் பிளந்து செல்வோம். வேறொரு புது உலகத்தை அடைந்துவிட்டோம். இவ்வுலகத்திற்குப் பெயர் இந்து முஸ்லிம் ஒற்றுமை. இந்திய அரசியலில் மகாத்மாவின் ஆதிக்கம் ஆரம்பமானது முதல் இந்து முஸ்லிம் என்ற சொற்றொடரை வேளை தவறாமல் ஜெபம்செய்து வந்திருக்கிறோம். அந்த ஜெபத்தின் காரணமாக, மகாத்மா விருப்பத்திற்கு நேர் விரோதமான விபரீத பலன்தான் உண்டாயிற்று. இதன் காரணத்தை ஆராய்ச்சி செய்து பார்ப்போம்.

இந்து முஸ்லிம் ஒற்றுமைவேண்டும் என்று சொல்லுவதனாலேயே, அவ்வித ஒற்றுமை இப்பொழுது இல்லை, வேற்றுமைதான் இருக்கிறது என்று விளங்குகிறது. இந்தியாவில் உள்ள ஜன சமூகத்தை, மதத்தை அடிப்படையாக வைத்துப் பல பிரிவுகளாகப் பிரித்

துத்தான் பேச வேண்டுமா என்ற கேள்வியை எழுப்புவதால் பயனில்லை. மகாத்மா காலத்திற்கு முன்னிருந்தே அப்படிப் பேசுவது வழக்கத்தில் வந்துவிட்டது. பிரித்தாளுவது என்ற கொள்கையைக் கைக்கொண்ட அந்நியர் ஆட்சி அப்படிப் பேசுவதை ஒரு ராஜ தந்திரமாகக் கொண்டிருக்கலாம். அவ்வித ராஜ தந்திரத்தை மொகலாயச் சக்கரவர்த்திகளே கையாண்டிருக்கலாம்.

என்னுடைய ருஷிய யாத்திரையின்போது காஸ்பியன்கடல் துறைமுகமாகவும் காக்கேஷியன் குடியரசுகள் ஒன்றின் தலை நகரமாகவும் விளங்கும் பகூ என்ற ஊரில் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். அந்த ஊரில் கிறிஸ்துவ முஸ்லிம் இரண்டு மதங்களையும் பின்பற்றும் மக்கள் இருந்தனர். ஜார் சக்கரவர்த்தி காலத்தில் இந்த இரண்டு சமூகங்களுக்குமிடையே அடிக்கடி சண்டைகள் ஏற்பட்டு பகூ நகரத் தெருக்களில் இரத்தவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவது சர்வ சாதாரணமாக இருந்ததாம். அந்தக் கலகங்களை ஜாருடைய உத்தியோகஸ்தர்களே தூண்டிவிட்டுக் கொண்டிருந்தனராம். அதற்குக் காரணம், அரசாங்கத்தார்செய்யும் அநீதிகளிலிருந்தும் அக்கிரமங்களிலிருந்தும் மக்களுடைய கவனத்தை வேறுவழியில் திருப்புவதுதானும். சோவியத் அரசாங்கத்தினால் பல தீங்குகள் ஏற்பட்டன என்று சொல்லுகிறவர்கள் கூட அந்த அரசாங்கத்தினால் ஒருநன்மை நிச்சயம் ஜனங்களுக்குக் கிடைத்தது என்பதை மறுக்க முடியவில்லை. அந்த நன்மையாவது மதம் காரணமாக ஏற்படும் கலகங்களை சோவியத் அரசாங்கம் அறவே ஒழித்து

விட்டதுதான். நான் ருஷியாவில் இருந்த காலத்தில் அரசாங்கத்தாரின் விளம்பர இலாகா நாஸ்திகப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு எல்லா மதங்களையும் ஒழிக்கும் முயற்சியில் முனைந்துநின்றது. நான் கண்டுபேசிய அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அனைவரும் மதக்கலகங்கள் ருஷியாவில் அடங்கிப்போனதற்குக் காரணம் ருஷிய அரசாங்கத்தின் மத ஒழிப்புப் பிரசாரமே என்று பெருமையுடன் பேசிக்கொண்டனர். என்னுடைய நாட்டிலும் அதுபோலவே இனி நடக்கப் போகிறது என்று கனவு கண்டேன். அந்தக் கனவில் நமது மக்களிடையே இந்து முஸ்லீம் சண்டைகள் ஒழிந்து விட்டதோடு வடகலை தென்கலைச் சண்டைகளும் ஒழிந்துவிட்டன. ஆனால் அது வெறும் கனவுதான் என்பதைப் பிறகு கண்டு கொண்டேன்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமையில் மத ஒழிப்புப் பிரசாரத்திற்கு இடமேயில்லை. இவ்விஷயத்தில் நமது நோக்கம் ருஷியாவுக்கு நேர் விரோதமாக இருந்தது. ருஷ்யத் தலைவர்கள் மதச் சண்டையை அடக்குவதற்குக் கையாண்ட உபாயம் அந்தச் சண்டையின் உற்பத்தி ஸ்தானமாகிய மத உணர்ச்சியையே அடக்குவதுதான் என்று எண்ணினார்கள். ஆனால் நமது தலைவர்களோ மதச் சண்டையை அடக்குவதற்கு வழி, மதஉணர்ச்சியைக் கிளறிப் பெருக்குவது தான் என்று நினைத்தார்கள். அவ்வாறு பெருக்கெடுத்தோடும் பிரவாகமான உணர்ச்சி பல பிரிவுகளாக நாலா பக்கங்களிலும் பிரிந்தோடி மக்களைச் சிதற அடிக்காமல் ஒரே ஜீவநதியாகப் பிரகாசிக்கும் என்று நினைத்தார்கள். நம் தலை

வர்களின் எண்ணம் விபரீதத்தில் கொண்டு போய் விட்டிருக்கிறது. ருஷிய வழி சரியல்ல வென்று நினைத்தாலும்கூட நமது தலைவர்கள் பின்பற்றியது தவறான வழியென்பதில் சந்தேகமேயில்லை.

முதல் முதலில் ஏற்பட்ட தவறு 1919-ம் வருஷத்தில் மகாத்மா ஆரம்பித்த கிலாபத் இயக்கம். அக்காலத்தில் அதை ஜின்னா எதிர்த்தார். அவரது எதிர்ப்புக்குக் காரணம் அரசியலில் மதத்தைப் புகுத்தக்கூடாது என்பதுதான். அவரது எதிர்ப்பின் பலனாய், காங்கிரசில் அவருக்கு ஏற்பட்டிருந்த உன்னத ஸ்தானத்தை அவர் இழந்தார்.

முஸ்லிம்லீக் தலைவரைப்பற்றி இழிவாகப் பேசுவது இப்பொழுது சகஜமாகப் போய் விட்டது. ஆனால் வெகுகாலமாக அவர் காங்கிரசில் இருந்தார், காங்கிரசின் தூணாக விளங்கினார் என்பதை நியாய புத்தி உள்ளவர்கள் மறுக்க முடியுமா? அவர் பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார். காங்கிரஸ் ஸ்தாபனத்தில் அவர் செய்த மகத்தான சேவைக்கு அறிகுறியாக, பம்பாய் நகரத்தில் கட்டப்பட்ட காங்கிரஸ் மாளிகைக்கு ஜின்னா ஹால் என்று பெயர் வைத்தார்கள். பிறகு அவரை வெறுக்கத்தொடங்கியவர்கள் அவருடைய பெயரை மறைப்பதற்காக, அதற்குமுன் ஒரு அடைமொழியைச் சேர்த்து பீப்பிள்ஸ்—ஜின்னா—ஹால் என்று அந்த மாளிகைக்கு மறுபெயரிட்டார்கள். ஜின்னா காங்கிரசிலிருந்து விரட்டப்பட்டதற்குக் காரணம், மகாத்மாவால் அரசியலில் புகுத்தப்பட்ட மத வெறியும், அதிலிருந்து கிளம்பிய கண்மூடித் தனமான கொள்கைகளுந்தான்.

ஒரு அரசியல் நோக்கத்தை அடைவதற்கு மக்களின் மதவெறியைக் கிளறிவிடுவதே தகுந்த வழியென்று கிலாபத் இயக்கத்தின் கர்த்தாக்கள் எண்ணினர். ஆனால் எக்காலத்திலும் வெறி வெற்றியளித்ததில்லை. வெறி பலவீனத்தையே அளிக்கும் என்ற உண்மையைக் கிலாபத் இயக்கமே நிரூபித்துவிட்டது. அந்த இயக்கத்தின் பலனாக கிலாபத் காப்பாற்றப்படவில்லை. பாக்கிஸ்தான் தான் உற்பத்தியாயிற்று. கிலாபத்துக்கு உண்மை விரோதி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அல்ல. புத்துயிரோடு எழும்பிய துருக்கியின் தேசியமே கிலாபத்தை மாய்த்தது.

முதலாவது உலக யுத்தத்தின்போது, ஜெர்மன் தேசத்துக் கெய்சரோடு சேர்ந்த காரணத்தால் துருக்கி கலிபாவுக்கு, கெய்சர் தோல்வியுற்றபிறகு ஒரு சங்கடமான நிலைமை உண்டாயிற்று. வெற்றிபெற்ற நேச தேசத்தினர் துருக்கி சுல்தானாகிய கலிபாவுக்குக் கீழிருந்த நாடுகளைப் பங்கு போட்டுக்கொள்ள முயன்றனர்.

இந்தியாவில் கிலாபத் இயக்கம் நடக்கும் சமயத்தில் துருக்கியில் உயிர்த்தெழுந்த தேசியம், கிலாபத்தின் மூலஸ்தானத்தையே அழித்து, கலிபாவைத் துருக்கியை விட்டே விரட்டிவிட்டது. துருக்கியில் தோன்றிய புரட்சிக்காரர் பழமைகளை எல்லாம் அழிக்கும் போது, பழமையின் ஒரு பாகமாகிய கிலாபத்தும் அழிந்துவிட்டது. ஜின்னா வாக்குப் பலிதமாயிற்று. மகாத்மாவின் எண்ணம் நிறைவேறவில்லை.

கிலாபத் இயக்கத்தினால் உண்டான ஒரே பலன், நமது நாட்டில் நாளடைவில் தானாகவே அணைந்துகொண்டிருந்த மதவுணர்ச்சி என்னும் நீறுபூத்த நெருப்பு கிளறப்பட்டு, விசிறியால் வீசப்பட்டு, கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்ததுதான். மதவெறி முஸ்லிம்களை மாத்திரம் அல்லாமல் இந்துக்களையும் தீவிரமாகப் பற்றிக்கொண்டது. நமது அரசியலில் அறிவு ஆதிக்கம் செலுத்தமுடியவில்லை. அறிவாளிகள் அரசியலைவிட்டு விலகிநின்று, நமது நாடு வெறும் வெறியென்னும் அந்தகாரத்தால் சூழப்படுவதைக்கண்டு மனம் நோவ வேண்டியிருந்தது. ஆனால் மக்கள் எவ்வித இடருக்கு ஆளானபோதிலும் அந்த இடருக்கு மத்தியில் அவர்களுக்குச் சேவைசெய்வதே அறிவாளிகளின் கடமை. நோயுற்ற மக்களை விட்டு விலகுவது நேர்மையாகாது. அந்த நோய் என்னவென்று கண்டுபிடித்துத் தக்க சிகிச்சை செய்வதே கடமையாகும்.

தனது மக்களுக்கு, தனது நாட்டுக்கு, என்ன நோய் கண்டிருக்கிறதென்பதை ஜின்னா உணர்ந்தார். அந்த நோய் அவர்களின் அரசியலில் மகாத்மாவால் புகுத்தப்பட்ட மதக் கலப்புதான். மகாத்மாவின் ஆதிக்கம் நமது நாட்டில் நிலைபெறும் வரையில் இந்த மதக் கலப்பு என்னும் நோய் நம்மைவிட்டு நீங்காது என்பதை ஜின்னா கண்டுகொண்டார். ஆகவே தன்னுடைய மக்களுக்குச் சேவைசெய்யும் பொருட்டு அவரும் அந்தக் கலப்பில் ஈடுபட்டு, தனக்கும் அந்த நோயை உண்டாக்கிக் கொண்டு, மகாத்மாவின் பாஷையில் தானும் பேச ஆரம்பித்தார். சேற்றில் அகப்பட்டுக் கரைசேர முடியாமல் தவிக்கும் இந்திய சமூகம்

என்னும் வண்டியைக் கரைசேர்ப்பதற்காக அவரும் அந்தச் சேற்றில் இறங்கினார். ஆனால் அந்தச் சேறு அவரால் உண்டாக்கப்பட்ட தல்ல. அவருடைய சக்திக்குமீறி ஏற்பட்ட ஒரு இயற்கைச் சம்பவத்தைச் சமாளிப்பது அவர் கடமையாகிவிட்டது. காங்கிரஸ் இந்துக்களின் மதஸ்தாபனமாகிவிட்டவே, அதில் தனக்கு இடமில்லையென்று கண்டு, அப்பொழுது மங்கியிருந்த முஸ்லீம் லீகை உயிர்ப்பித்தார். எந்த மதவுணர்ச்சி ஜின்னாவைக் காங்கிரசிலிருந்து விரட்டியதோ, அதே மதவுணர்ச்சிதான் இன்றையதினம், முஸ்லிம் லீகின் தலைவராக அவரை நிலைநிறுத்தி அழியாத பலத்தை அவருக்கு அளித்து வருகிறது.

தாங்கள் இந்துக்களுடன் ஒன்றுபட்டு வாழ முடியாது, தேசத்தைத் தங்களுக்குத் தனியாகப் பிரித்துக்கொடுக்கவேண்டும் என்னும் முஸ்லிம்களின் கோரிக்கையைக் கேலி செய்கிறவர்கள், முஸ்லிம்களின் அந்தரங்கத்தை உணரவில்லை. குழந்தைப் பருவத்திலிருந்து ஒவ்வொரு முஸ்லிமுக்கும் விக்கிரக ஆராதனையின்பேரில் ஒரு வெறுப்பு ஊட்டப்பட்டு வருகிறது. படித்து நாகரிகமடைந்த முஸ்லிம்கள், விக்கிரக ஆராதனை செய்யும் இந்துக்களுடன் பழகுவதற்கு மனம் ஒப்புகிறார்கள். அவர்களோடு வியாபாரம் தொழில் முறையில் பழகவும், நன்மை தீமைகளில் ஒத்துழைக்கவும் சம்மதிக்கிறார்கள். ஆனால் விக்கிரக ஆராதனையின் வாசனை அடிக்கும் சம்பவங்களில் கலந்துகொள்ள அறவே மறுக்கிறார்கள்.

மகாத்மாவின் தலைமையில் நடைபெறும் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் ஹிந்து மதத்திற்கு பிரா்தான்யம் ஏற்பட்டு ஒவ்வொரு நிமிஷமும் விக்ரக ஆராதனை ஏதாவது ஒரு ரூபத்தில் நடந்துகொண்டே வருகிறது. காங்கிரஸ் மகாநாட்டிலேயே பலவிதமான கடவுள்களுக்குப் பிரார்த்தனைகள் நடைபெற்ற வண்ணமாயிருக்கின்றன. மகாத்மாவைப் பொதுமேடையில் தரிசிக்கப்போகிறவர்கள் அனைவரும், ஹிந்துக் கடவுள்களுக்குச் செய்யப்படும் பிரார்த்தனை கோஷங்களுக்கிடையே தான் அவரைத் தரிசிக்கவேண்டும்.

மகாத்மாவின் கூட்டத்திற்கு விஜயம் செய்யும் ஒரு முஸ்லிம் மனதில் ஏற்படும் உணர்ச்சியைச் சாவதானமாக நினைத்துப் பார்க்கவேண்டும். அங்கு நடைபெறும் கீர்த்தனங்களும், பஜனைகளும் அவனுடைய உள்ளத்தைப் புண்படுத்துகின்றன. அவனுடைய ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு ஒன்று அங்கு உள்ளவர்களைப் பலவந்தமாகத் தாக்கவேண்டும்; அல்லது அக்கூட்டத்தை விட்டுச் சடுதியில் வெளியேற வேண்டும். மகாத்மா விஜயஞ்செய்யும் பெருத்த ஜனத்திரள்களில் முஸ்லிம்கள் கலந்து கொள்ளாமைக்கு இதுவே காரணம். மத உணர்ச்சி பெற்ற முஸ்லிம் மகாத்மாவின் கூட்டங்களில் கலந்துகொள்ளும்போது அவனுடைய மனச்சாட்சி அவனைத் தொந்தரவு செய்கிறது. அவனைச் சமாதானப்படுத்துவதற்காக குரானிலிருந்தும் சில சொற்கள் சிறிது நேரம் ஓதப்படுகின்றன. அதைப்போல் கிறிஸ்துவ பார்ஸி மதஸ்தர்களின் வேதங்களிலிருந்தும் சில சுலோகங்கள் படிக்கப்படுகின்றன. ஆயி

னும் என்ன? முஸ்லிம்களின் மத உணர்ச்சி இதனுல் சமர்தானம் அடையாது. முஸ்லீம் தன்னுடைய மதத்தில் எதுமிகுந்த பரிசுத்த மான பாகம் என்று கருதியிருக்கின்ருனே அதை உல்லங்கனம் செய்வதாக நினைத்துக் கோபம் அடைகிருன். தன்னுடைய ஆண்ட வனேயும், தன்னுடைய பரிசுத்தமான நபியை யும், எந்த தெய்வங்களை தன்னுடைய நபி கண் டித்தாரோ அதே தெய்வங்களின் வணக்கத் தோடு ஒப்பிட்டுச் சரிசமானமாக வழங்கு வதை அவனுல் சகிக்க முடியவில்லை. இந்த உணர்ச்சியை முரட்டுத் தனமான மதவெறி யென்று நினைப்பது தவறு. இஸ்லாம் மதத்தை மற்ற மதங்களோடு சரி சமான மாக ஒரே இடத்தில் வைத்து அனுஷ் டிப்பதை இஸ்லாமியர்கள் விரும்பவில்லை. உள்ளங்கை நெல்லிக்கனிபோன்ற இந்த உண் மையை ஒவ்வொரு இந்துவும் கண்டுகொள்ள முடியாமல் அவர்கள் கண்களை மறைப்பது காந்திய மதப் பிரசாரம் என்னும் மேக மண்டலம்.

மதங்கள் ஒன்றுக்கொன்று சகிப்புத் தன்மை காட்டவேண்டியது அவசியம். அந்தச் சகிப்புத் தன்மைக்கு அடையாளம் அந்தந்த மதத்தை அதனதன் இடத்தில் வைத்துக் கொண்டாடுவதே ஒழிய அவற்றை ஒன்ருகக்கொட்டிக் குழப்பிவிடுவது அல்ல. அறிவுள்ள முஸ்லிம் இந்து மதத்தை அழிக்க விரும்பவில்லை. இந்துக்கோவில்களுக்குள்ளும் இந்துக்களின் வீடுகளுக்குள்ளும் விக்கிரக ஆராதனை நடைபெறுவதை முஸ்லிம்கள் தடைசெய்யவில்லை. அவனவன் வீட்டிற்குள் அவனவனே அரசன். தன்னுடைய வீட்டிற்

குள் எவனும் எது வேண்டுமானாலும்செய்து கொள்ளலாம். ஒன்று சேராத மதங்களை ஒன்றாகக்கொட்டிக் குட்டை குழப்பவேண்டும் என்று நினைத்தாலும் அதைத்தன் வீட்டுக்குள் ஒருவன் செய்து கொள்ளலாம். ஆனால் பொது விடங்களில், பொது மேடைகளில், அப்படிக் குழப்புவது பெரிய ஆபத்தில் கொண்டுபோய்விடும். அரசியல் மேடைகளில் இந்து-முஸ்லிம் பிரார்த்தனைகளை ஒன்றாக நடத்தியதினால் தீமையே விளைந்திருக்கிறது.

மகாத்மா ஏன் இவ்விதமாக மதங்களை ஒன்றாகச் சேர்த்துக் குழப்பவேண்டும்? இதற்கு அவசியம் என்ன? மற்ற தேசங்களில் உள்ள அரசியல்வாதிகள் இம்மாதிரி வேண்டும் என்றே மதக்குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு அதன்மூலம் சங்கடங்களில் சிக்கிக் கொள்ளுகிறார்களா? ராம்துன் பஜனை நடைபெறும் ஒவ்வொரு நிமிஷமும், ஹிந்து முஸ்லிம் வேற்றுமையை அதிகப்படுத்தி, பாக்கிஸ்தான் ஸ்தாபனத்திற்கு ஒரு புதுபலத்தை சிருஷ்டிக்கிறதென்ற உண்மை இந்த நெருக்கடியான சமயத்தில்கூட நம் கண்ணுக்குப் புலப்படாதது ஏன்? இந்திய தேசீய இயக்கத்தைப் பற்றிக் குறைகூறும் வெளிநாட்டார் இதற்கு வெகுசுலபமாக ஒரு காரணம் கூறித் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். இந்த புத்திசாலிகளின் வாதமாவது :—

> இந்திய சரித்திரப் போக்கே ஒரு தனிரகம். இந்தியா மற்ற தேசங்களைப் போன்றது அல்ல. இந்தியாவில் மதச் சண்டைகள் உண்டு. ஆகவே இந்திய தேசீயம் மெலிவடைந்திருக்கிறது. என்பதாகும்.

இந்த புத்திசாலிகளின் வாதத்தில் புத்திசாலித்தனங் கிடையாது. நமது சரித்திரத்தை குறைகூறவேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. மதங்களும் மதப்பூசல்களும் நம்முடைய நாட்டில் மாத்திரந்தான் உண்டு என்று கூறுவது பொய். எல்லாத் தேசங்களிலுந்தான் உண்டு. ஆனால் மற்ற தேசங்களில் உள்ள அரசியல் வாதிகள் காலப் போக்கை உணர்ந்து மதத்தை அது இருக்க வேண்டிய இடத்தில் வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்தியாவின் துரதிர்ஷ்டம் நம்முடைய தலைவர்கள் காலப்போக்கின் உண்மையை உணரவில்லை. இந்த இருபதாவது நூற்றாண்டில் நடத்தவேண்டிய காரியங்களுக்குப் பதினைந்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட முறைகளைக் கையாளுகிறார்கள்.

நமக்கு ஏற்பட்டிருக்கும் இந்தத் தொல்லைக்கு நாமேதான் காரணம் என்பதை உணர வேண்டும். நம்முடைய தலைவர்களும், நம்முடைய அரசியல் வாதிகளும் தேசீய விடுதலையைப்பற்றி அழகாகப் பேசிவிட்டு, அழுகிப் போன பழய மதப் பழக்கவழக்கங்களை அநாவசியமாக அரசியல் அரங்கத்தில் இழுத்து விட்டிருக்கிறார்கள். இந்தப் பழய பண்டங்கள் அரசியல் முன்னேற்றத்திற்குத் தடையென்பதை உணராமல் அவை தாம் நம்முடைய நோக்கத்தை அடைய உதவிசெய்யும் என்று சொல்லுகிறார்கள். புதை குழியில் உள்ள சவத்தைத் தோண்டி எடுத்து அதில் உள்ள எலும்புக்கூட்டை நமது அரசியல் வண்டியில் பூட்டி ஓட்டப்பார்க்கிறார்கள். இந்த விபரீதப் போக்குதான் இந்து முஸ்லிம் பிரச்சினையென்

பது. இந்த விபரீதத்தின் விளைவுதான் பாக்கிஸ்தான் கோரிக்கை.

அரசியல் மேடைகளில் ராமபஜனை செய்வதின் மூலம் இந்து முஸ்லிம் ஒற்றுமையை நிலைநாட்டமுடியாது. அந்த பஜனையின் ஒவ்வொரு எழுத்தும் ஒற்றுமைக்குக் குழி தோண்டுகிறது. அரசியலும் மதமும் 15-வது நூற்றாண்டில் தான் ஒன்றுபட்டு வாழ முடிந்தது. அக்காலத்து நடவடிக்கையை இக்காலத்தில் அநுஷ்டிக்க முயலுகிறவர்கள் தாம் பாக்கிஸ்தான் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். அதற்கு உத்தரவாதம் ஜின்னாவல்ல.

IV

செத்ததும் சாகாததும்

மகாத்மா சிருஷ்டித்திருக்கும் இந்தச் சூரிய மண்டலத்தை ஓரளவு சுற்றிப் பார்த்து விட்டோம். இப்பொழுது அதை மதிப்பிட்டுப் பார்க்கலாம். ஜனங்களுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்னும் நல்லெண்ணத்தோடுதான் அது சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் எண்ணத்தைப்பற்றி இங்கு விசாரிக்கவேண்டியதில்லை. நீதிபதியின் கோர்ட்டிலேதான் மனதில் உள்ள நோக்கத்தைப் பற்றி விசாரிக்கவேண்டும். இந்த இடத்தில் பலனைப் பற்றிதான் நமக்குக் கவலை. பலனை அளந்து பார்க்கும்போது இந்த நிர்மாணத் திட்டம் என்பது ஒன்றுக்கும் உதவாமற் போய்விட்டது என்றுதான் முடிவுகட்ட வேண்டும்.

இந்த ஆடம்பரமான சூரிய மண்டல சிருஷ்டி தத்துவ ஆதாரவில்லாமல் இருளில் தத்தளிக்கிறது. வெறும் அந்தகாரத்தில் கண்ட கனவு மாதிரி பழைய நினைவுகள் பயங்கர உருவெடுத்த தோற்றமே இந்த சிருஷ்டி. இந்தக் கனவை எவ்வளவு விரைவில் மறக்கிறோமோ அவ்வளவு விரைவில் நம்முடைய வழியில் வெளிச்சம் தோன்றும். அரசியல் இயக்கத்தில் உள்ள இந்தத் தடையை நீக்கி விட்டோமானல் நமக்குச் சுதந்தரவாழ்வு கைகூடுமென்பது நிச்சயம். உலகில் உள்ள மானிட வர்க்கத்தில் ஐந்தில் ஒரு பாகம்

வாழும் இந்தியாவென்னும் இம்மாபெரும் கண்டத்தில், மக்களுடைய வாழ்க்கை உயர்வடைய வேண்டுமானால், அவர்களுடைய பழவினை மாதிரி தடுக்கும் இந்தத் திட்டத்தை எடுத்துவீசி எறியவேண்டும்.

ஆனால் வாசகர் ஒரு கேள்வியை எழுப்பக் கூடும். நான் கூறுவது உண்மையானால் இந்த நிர்மாணத் திட்டத்திற்குப் பொதுஜன ஆதரவு கிடைத்தது எவ்வாறு? என்று கேட்கலாம். தேர்தல்களில் எல்லாம் ஓட்டுக் கிடைக்கின்றனவே, கூட்டங்களில் எல்லாம் ஆயிரக்கணக்கில் அல்ல லட்சக்கணக்கில் மக்கள் கூடுகின்றனரே, எழுத்து வாசனையற்ற மூடஜனங்கள் மாத்திரமன்றிப் படித்த அறிவாளிகளும் இதை ஆதரிக்கின்றனரே, நான் சொல்லுகிற உண்மை எனக்குமாத்திரம் தெரிந்த ரகசியமா? 40 கோடி மக்களில் நான் ஒருவன் மாத்திரந்தானா புத்திசாலி? என்றெல்லாம் கேட்கலாம்.

இதற்கு பதில், நான்தான் புத்திசாலியென்று சொல்லிக்கொள்ளவில்லை. இங்கு நான் கூறுவது எனக்கு மாத்திரம் தெரிந்த ரகசியமும் அல்ல. அறிவுள்ள ஒவ்வொரு இந்தியனுக்கும் தெரிந்த உண்மையையே நான் கூறியிருக்கிறேன். இது பலபேர் அறிந்த உண்மை. ஆனால் நமது தேசத்தில் உள்ள விசேஷம் என்னவென்றால், மக்கள் தங்கள் மனதில் உள்ள உண்மையை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுவதுமில்லை அதையொட்டி வெளிப்படையாக நடப்பதுமில்லை. அறிவுள்ள இந்தியன் ஒவ்வொருவனையும் அந்தரங்கத்தில் விசாரித்துப் பார்த்தால்

நான் கூறுவது முழுவதும் சரியென்றே ஒப்புக்கொள்வான். நிர்மாணத்திட்டத்தில் நம்பிக்கையுள்ளவர்களோ, அதை அனுஷ்டிப்பவர்களோ ஒருவரும் இல்லை. மகாத்மாவின் அந்தரங்கக் கூட்டத்தில் கூட ஒருவரும் இல்லை. ஆனால் மகாத்மாவோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளப் பிரியப்பட்ட அனைவரும் மகாத்மா சொல்வதெல்லாம் சரியென்று வெளிப்படையாகமாத்திரம் தலையாட்டிவிடுகிறார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் நிர்மாணத்திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் ஆதரிப்பதாகக் கையைத்தூக்கிவிடுகிறார்கள். ஆனால் அநுஷ்டானத்திற்கு கொண்டு வருவதில்லை. இந்த ஆதரவு காற்றோடு போய்விடுகிறது.

இம்மாதிரி சம்பவம் நம் நாட்டில் மாத்திரந்தான் உண்டு என்று சொல்லுவதற்கில்லை வெளிநாடுகளில் உள்ள அரசியல் வாதிகள் இந்த அபாயத்தை உணர்ந்து அதற்குப் பரிகாரம் தேடிக்கொள்ளுகிறார்கள். மனித இயற்கையில் கூட்டத்தில் கோவிந்தா போடாமலிருக்க முடியாதென்பதை அவர்கள் உணருகிறார்கள். அனுஷ்டானத்துக்கு வரும்போது தினசரி ஏற்படும் சங்கடங்களும், தாமதங்களும், தடைகளும், ஸ்தல விரோதங்களும் இவையெல்லாம் ஒன்றுதிரண்டு எதிர்க்கும் போது மன உறுதி மாயமாய்ப் பறந்துவிடுகிறது. இவ்வித தடைகளை எதிர்த்து வளர்ச்சியடையக் கூடிய சக்தி ஒரு திட்டத்திற்கு உண்டாகவேண்டுமானால், அதற்கு அறிவுக்குப் பொருத்தமான தத்துவபலம் ஏற்படவேண்டும். அவ்வித தத்துவ பலம் இல்லாத காரணத்தினாலேயே நிர்மாணத் திட்டத்திற்குப்

பொதுக்கூட்டங்களில் ஏற்பட்ட ஆவேசமான ஆதரவு கூட்டங்களோடு மறைந்துவிட்டது. அன்றியும் அத்திட்டத்திற்கு, அடிப்படையாக உண்மை யென்னும் ஆதரவு இல்லாததால் ஒரு கூட்டத்திற்கும் மற்றொரு கூட்டத்திற்கும் ஏற்பட்ட இடைக்காலத்தில் இயற்கையாக உண்டாகும் அலட்சியம் என்றும் சேற்றில் அழுந்தி வெளிக்கிளம்ப முடியாமல் பிணம் போலக்கிடக்கிறது.

இந்த இடைக்காலமே எந்தத் திட்டத்திற்கும் சோதனைக்காலமாகும். அப்பொழுது தான் உயிருள்ள திட்டங்கள் காப்பாற்றப் பட்டு வளர்ச்சிபெறவேண்டும். நிர்மாணத் திட்டத்திற்குப் பேச்சளவில் ஏராளமான ஆதரவு கிடைத்தது உண்மை. அந்த ஆதரவு பேச்சளவில் மாத்திரந்தான். கூட்டங்களில் அதற்கு ஓட்டுக் கிடைத்தது உண்மை. ஓட்டைத் தவிர வேறொன்றும் கிடைக்கவில்லை. ராட்டைக்கு ஆதரவாக ஓட்டுக் கொடுப்பதற்கு எழும்பிய லட்சக்கணக்கான கைகள் ராட்டையைச் சுற்றுவதற்கு முயலவில்லை. ஓட்டுக்கொடுப்பதிலேயே நின்று விட்டன.

இரட்டை மனிதர்

நமது மனம் ஒருவழியில் நிற்காமல் சமயத்துக்குத் தக்கவாறு மாறுதல் அடைவதால் நமது தேசிய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. ஒவ்வொருவருடைய உடம்பிலும் உள்ள ஆத்மா ஒன்றாகத்திரண்டு விளங்காமல் இரண்டு கூறாக பின்னப்பட்டுக்கிடக்கிறது. நமக்குள் இருக்கும் இந்த த்வைத உணர்ச்சியானது, செயலில் நம்மை வேஷதாரிகளாகவும் பொய்

யர்களாகவும் ஆக்கிவிடுகிறது. மகாத்மாவின் முன்னிலையில் அவர் மூணுக் என்பதற் கெல்லாம் சரி சரியென்று கூத்தாடுகிறோம். பிறகு அனுஷ்டானத்தில் நம்முடைய வாக்குத்தத்தத்தை அறவே மறந்து விடுகிறோம். வேறுகாலங்களில் வேறு தேசங்களில் இம்மாதிரி நடப்பவர்களின் மேல் நம்பிக்கைத் துரோகக்குற்றம் சுமத்தப்படும். ஆனால் நமது நாட்டில், தற்சமயம் நமக்கு மகாத்மாவின் பேரில் ஏற் பட்ட மோகத்தின் பலனை நாமனைவரும் இரட்டை மனிதர்களாகக் காட்சியளிப்பதால் இந்தக் குற்றம் நம்முடைய இயற்கையாக முடிந்துவிட்டது. நாம் மகாத்மாவுக்குக் கொடுத்த வாக்குத் தத்தத்தை நிறைவேற்று வதில்லை. ஏனெனில், அதை நிறைவேற்றுவது முடியாதகாரியம் என்று நமக்குத் தெரியும். நிறைவேற்றாதது நமது குற்றம் அல்ல. ஆனால் மகாத்மாவின் முன்னிலையிலேயே "இது முடியாத காரியம்" என்று சொல்வ தற்குத் தைரியம் உண்டாகாததுதான் நமது குற்றம். இந்தக் குற்றத்தை மற்ற எல்லோரும் செய்வதால் நாமும் செய்துவருகிறோம். மற் றவர்களெல்லாம் சரியென்று சொல்லிவிட்டுப் பிறகு அதைப்பற்றி நினைக்காமலே யிருக்கும் போது, நாம் மாத்திரம் முடியாது என்று சொல்லி எதற்காகக் கெட்ட பெயர் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று நினைக்கிறோம்.

சீறு வாணம்

நம் நாட்டில் உண்டான தேசீயக் கொந் தளிப்பெல்லாம் இறுதியில் ஒரு சீறுவாணம் போல முடிவடைந்துவிட்டது. எல்லாம்

அர்த்தமற்ற வார்த்தைகள், நிலையற்ற உறுதிப் பாடுகள், அனுஷ்டிப்பில்லாத தீர்மானங்கள். இப்படியிருந்தும் இன்றைய நிலையில் நமது நோக்கம் நிறைவேறி வருகிறது. சுதந்தரம் எய்துகிறோம். பிரிட்டிஷார் வெளியேறுகிறார்கள். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் மகாத்மாவின் தலைமையில் நாம் நாடிய சுயராஜ்யத்தை அடைந்தே தீருவோம்.

ஆயினும் வாசகர் தமது அறிவை நிதானப்படுத்தி ஆலோசித்துப் பார்க்கட்டும். சுயராஜ்யம் வந்துவிடலாம். அதை நாம்தான் கொண்டுவந்தோமா என்பது கேள்வி. நாம் செய்த பல காரியங்களில் எது சுயராஜ்யத்தைப் பிடித்து இழுத்துவந்தது? நம்முடைய தீர்மானங்களிலும் திட்டங்களிலும் எவை யெவை சுயராஜ்யத்திற்குக் காரண காரியத் தொடர்போடு அமைந்தவை?

கைக்கெட்டியும் வாய்க்கெட்டவில்லை.

இதுவரையிலும் நாம் ஏற்படுத்திய தடைகளையெல்லாம் மீறியல்லவா சுதந்தரம் நம்மை வந்து அடைகிறது? உலகச் சரித்திரப் போக்கில் ஏற்பட்ட மாபெரும் சக்தியால் அல்லவா சுயராஜ்யம் அதன் வழியில் நாம் உண்டாக்கிய தடைகளைப் பெயர்த்தெறிந்து விட்டது? இயற்கையின் சக்தி தன் போக்கில் சூரியனையும் நட்சத்திரங்களையும் சிருஷ்டி செய்கிறது; கடலையும் மலையையும் உண்டாக்குகிறது; காற்றையும் மழையையும் வீசி அடிக்கச் செய்கிறது. இயற்கையின் சக்தியே உலக சரித்திரம் என்னும் நீரோட்டத்தைக் கிளப்பியிருக்கிறது. தனி மனிதர்களுக்கும்

மனித இயக்கங்களுக்கும் அந்த நீரோட்டத்தில் பங்குண்டு. அந்த நீரோட்டத்தைப் பின்பற்றி அதன் போக்கில் சென்றால்தான் அந்தப் பங்கு கிட்டும். அந்தப் போக்கை எதிர்த்தால் சமாளிக்க முடியாது.

நிர்மாணத்திட்டமென்பது இயற்கையின் போக்குக்கு எதிரிடை. மற்ற நாடுகளில் உள்ள அரசியல் வாதிகள் காலப்போக்கைப் பின்பற்றி இயற்கையின் முழுப் பலனையும் தங்கள் மக்களுக்குச் சம்பாதித்துக் கொடுக்கின்றனர். நமது நாட்டிலோவெனில், இயற்கையை எதிர்த்து அதன் போக்குக்குத் தடையுண்டாக்கி வீண்பழி கட்டிக்கொள்ளுகிறோம். ஆயினும் நம்முடைய அறியாமைக்கிடையே, நம்முடைய வசைச்சொற்களுக்கும் தடங்கல்களுக்கும் மத்தியில், இயற்கை நம்மை ஆசீர்வதித்து நமக்குச் சுதந்தரம் வழங்குகிறது.

நமது வீண் பிடிவாதத்தை விட்டு இயற்கையன்னையிடம் பயபக்தியோடு நடந்து கொண்டிருப்போமானால் நமக்குப் பெரும் பாக்கியம் கிட்டியிருக்கலாம். இப்பொழுது முடிவெய்திய உலக யுத்தத்தில் நாம் முறையோடு நடந்துகொண்டிருந்திருப்போமானால் உலக மக்கள் முன்னிலையில் நமக்குத் தலைமை ஸ்தானம் கிடைத்திருக்கும். மனித சரித்திரத்தில் ஏற்பட்ட அந்த நெருக்கடியில் நாம் காட்டிய வீண் பிடிவாதத்தினால் நமக்கு இப்பொழுது உலகமக்களின் சபையில் பின் வரிசையில் இடங்கிடைத்திருக்கிறது. ஆயினும் இன்றையதினம் நாம் குதித்துக் கும்மாளம் போட்டு வெற்றி கொண்டாடுகிறோம். எந்த வெற்றிக்காக? பின் வரிசையில் கிடைத்த

இந்த இடத்திற்காகவா? பின் வரிசையோ முன் வரிசையோ, ஏதோ நமக்கும் 'ஒரு இடம்' கிடைத்துவிட்டதே என்றா? இந்த வீண் குதிப்பையும் கும்மாளத்தையும் நிறுத்தி விட்டு ஆர அமர யோசிப்போமானால் நாம் அழாமலிருக்கமுடியுமா? கிடைத்திருப்பது அற்பம்! கிடைத்திருக்கவேண்டியது ஏராளம். நமது கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாமற் போனது என்ன? உலகத்து நான்கு வல்லரசுகளில் நாமும் ஒன்ருக விளங்கவேண்டிய தலைமைப் பதவி. இன்று உலகம் உள்ள நிலைமையில் நமக்கு இவ்வளவு ஆடம்பரமாக வழங்கப் படும் சுதந்தரம் என்று சொல்லப்படுவது எவ்வளவு அற்பம் என்பதை நாம் உணரவேண்டும். இன்றைய நிலையில் இதைக் கொடுக்காமலிருக்க யாருக்குத்தான் சக்தியுண்டு?

கதம்பம்

சென்றதை நினைத்து வருந்தியென்ன பயன்? போனது போயிற்று. நீண்டகாலமாக அந்நிய ஆட்சியில் நாம் அவதிப்பட்டதால் உண்டான மனச்சோர்விஞல் வேறுவிதமாக நடக்க நமக்குச் சக்தியில்லாமல் இருக்கலாம். நான் யாரையும் குறைகூறவில்லை. மகாத்மாவின்மேல் குற்றங் கூறுவதற்காக இந்தப் புத்தகம் எழுதவில்லை. என் வாழ்நாள் முழுவதையும் மகாத்மாவை வணங்கும் கூட்டத்திலேயே கழித்திருக்கிறேன். சில சமயங்களில் மற்றவர்களைவிட அதிகமாக என்னுடைய பக்தி மீறிக்கொண்டு கிளம்பியது உண்டு. சில சமயங்களில் குருட்டுத்தனமாக வணக்கம் செலுத்தும் கும்பலைக்கண்டு நான் பின்னடைந்ததுண்டு. மொத்தத்தில் கணக்

குப்பார்த்தால் நான் குறைகூறிய நாட்களை விட பக்திசெலுத்திய நாட்கள்தான் அதிக மாக இருக்கும். மகாத்மாவின் கொள்கை களில் உள்ள குற்றங்கள் என் கண்ணுக்கு எதிரில் மலைபோல் தோன்றின. ஆனால் அந் தக் கொள்கைகளில் உள்ள உண்மை என்னை அந்த மலைக்குமேல் தூக்கிச் சென்றது. மகாத் மாவின் கொள்கையென்பது ஒரு கதம்பம். அதில் நிலையுள்ளதும் நிலையற்றதும் ஒன்று பட்டுக் கலந்துகிடக்கிறது.

பிரகாசிக்கும் சொற்கள்

அவருடைய திட்டத்தில் நிலையில்லாதது, சவமாய்க் கிடந்து தடையாக விளங்குவது என்னவென்றால், அவருடைய நிர்மாணத் திட்டந்தான். ராட்டையென்னும் சூரியனும் அதைச் சுற்றிவரும் கிரகங்களுந்தான். புதி தாக இயற்கை வைத்தியம் என்று ஒரு கிரகம் தோன்றியிருக்கிறது! கூடியவிரைவில் அது வும் இந்தச் சூரிய மண்டலத்தில் சேர்க்கப் படும். இந்தச் சூரிய மண்டலமானது, பழங் கால எண்ணங்களைப் புதிப்பித்துக் காண்பிக் கும் ஒரு பயங்கரமான கனவேயன்றி வேறல்ல.

மகாத்மாவின் கொள்கையில் நிலையுள்ள பாகம் ஒன்று உண்டு. அதுவே 1919ஆம் வருஷம் அவர் தொடங்கிய தேசியத்தைக் கொண்டு செலுத்தியது. கிலாபத்தை நான் குறிப்பிட வில்லை. கிலாபத்தினால் தேசியத் திற்கு நன்மை கிடைக்கவில்லை. அக்காலத் தில் அஹிம்சையை அனுஷ்டிப்பதன் மூலம் உண்மையைக் கடைப் பிடிக்கவேண்டும் என்று வற்புத்தியது தான் மகாத்மாவின்

போதனையில் நிலையுள்ள பாகம். சென்னைக் கடற்கரையில் அவர் பேசிய பின் கண்டவார்த்தைகளைப்பெரிய எட்டில் எழுதவேண்டும்:

> நான் பிரிட்டிஷாருக்கு விரோதி அல்ல. நான் அசத்தியத்துக்கு விரோதி. நான் ஹம்பக்குகளுக்கு விரோதி.

உலக மக்கள் எதிர்காலத்தில் இருளில் சிக்கி அவதிப் படாமல் தப்பவேண்டுமானல் உலகத்தாரின் முன்னிலையில் இந்த வார்த்தைகளைப் பிரகாசிக்கச் செய்யவேண்டும்.

இந்த உண்மை உலகத்திற்குப் புதிதல்ல. மகாத்மாதான் இதைக் கண்டுபிடித்தார் என்று சொல்வதற்கில்லை. உண்மையை யாரும் உற்பத்திசெய்ய முடியாது. அஹிம்சையென்பது அன்புக்கு அறிகுறி. மக்கள் தங்கள் வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் அறிவு மூலம் தன் வயப்படுத்திக்கொள்ள வேண்டுமேயன்றித் தடியடி மூலம் அடக்கி யாளக் கூடாது என்பதுதான் அஹிம்சா தத்துவம். உண்மையும் அகிம்சையும் உலகத்தில் புதிய தோற்றங்கள் அல்ல. மனித வர்க்கம் உற்பத்தியான காலமுதல், பிரபஞ்சத்தில் ஜீவராசிகள் தோன்றிய நாள் முதல், உண்மையும அஹிம்சையுமே ஜீவன்களின் நோக்கமாக விளங்கிவருகிறது.

முடிவில்லாத ஆராய்ச்சி

உண்மையைப் பற்றிய ஆராய்ச்சிக்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. நம்நாட்டுத் தத்துவ ஞானிகள் உலகத் தோற்றத்தை பிரகிருதி புருஷன் என்று இரு கூறுகவும், அல்லது பிரம்மம் மாயை என்ற இரு கூறுக

வும் பிரிக்கிறார்கள். மேனாட்டுத் தத்துவ ஞானிகள் இதையே உயிர் வஸ்து என்று இரண்டு கூறாகப் பிரிக்கிறார்கள்.

மனிதர்களின் இந்திரியங்களின் மூலம் அறியப்படும் காட்சியை இவ்வித இருகூறு களுக்கும் இடையே நடக்கும் ஒரு யுத்தம் என்று கூறலாம். இந்த யுத்தத்தில் உயிருக்கு ஏற்படும் வெற்றிகளை முற்போக்கென்றும், அதற்கு ஏற்படும் தோல்விகளைப் பிற்போக்கு என்றும் கூறலாம். ஆதியில் மலையிலும், கடலிலும், மண்ணிலும், நீரிலும் மங்கிக் கிடந்த உயிர், அணுப்பிரமாணத்தில் வெளிப்பட்டு, புல்லாய், செடியாய், மரமாய், புழுவாய், பாம்பாய், பல்லியாய், பல்வகை மிருகங்களாய், மனிதனாய், பிறகு மனிதப் பிறவியுள் காட்டு மிராண்டியாய், விவசாயி ஆகி, அதன்பின் நாகரிகமடைந்து, யந்திரங்களின் மூலம் தனது சக்தியைப் பெருக்கிக் கொண்டு, பிரகிருதி யின் தோற்றமாகிய ஜட வஸ்துவை வெற்றி கொள்ளும் போக்குதான் முற்போக்கு. இந்த முற்போக்குக் எல்லை ஏது? இதனுடை நோக் கமே உண்மை யெனப்படுவது. அதற்குக் கையாளப்படும் முறையே அன்பு அல்லது அகிம்சை எனப்படுவது. மேலும் மேலும் மனித முன்னேற்றம் தொடர்ந்து செல்லும் பொழுதெல்லாம் உண்மையின் தோற்றம் மாறி மாறித் தூரத்திலே காட்சி அளிக்கிறது. உண்மை யென்பது நிரந்தரமாகப் பிடித்துக் காட்டக்கூடிய ஒரு பொருள் அல்ல. அது ஓரிடத்தில் நிலைபெற்று நில்லாது. அது ஒரு இயக்கம், ஒரு ஓட்டம். உயிருடைய அந்த ரங்க குணங்களை வெளிப்படுத்தும் போக்கு. வெளிப்படையாக நின்று பார்த்தால் அது

ஒரு போராட்டமாகவும், ஒவ்வொரு உயிரும் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள மற்ற உயிர்களோடு மோதி நடத்தும் ஒரு யுத்தமாகவும் காணப்படலாம். ஜெர்மனியை நாசப் படுத்திய ஹிட்லருடைய கண்களுக்கு இந்த வெளிப்படையான போராட்டந்தான் புலப் பட்டது. ஆகவே மற்றவர்களை அடக்க வேண்டித் தன்னுடைய மக்களைக் காவு கொடுத்து விட்டார். இப்போது ஹிட்லர் அழிந்துபட்ட போதிலும், உலகத்துக்கு அவர் போன்றவர் களால் உண்டாகும் அபாயம் மாத்திரம் அழிந்துவிட வில்லை. ஒரு இனத்தார் மற்ற இனத்தாரை முரட்டு பலத்தால் அடக்கியாள வேண்டும் என்ற எண்ணம், அதனுல் ஏற் பட்ட அபாயம், உலகத்தில் உயிர்கள் தோன் றிய நாள் தொட்டு இருந்துதான் வருகிறது. ஒரு இனம் மற்ற இனத்தை அடக்கவேண் டும் என்னும் கெட்ட எண்ணம் ஜெர்மனியில் தான் பிறந்தது என்பது தவறு. ஜெர்மானி யர் அந்த எண்ணத்தை இந்தியாவிலிருந்து தான் கடன் வாங்கினுர்கள். நமது வேதத்தில் அது இருக்கிறது. கீதையில் அதைக் கடைந் தெடுத்துத் திரட்டி உருவகப்படுத்தப்பட் டிருக்கிறது. புராதன காலந் தொட்டு உலகில் பல்வேறிடங்களில் அது அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. தேசங்களை ஜெயிக்க வேண் டும் என்றும், ஏகாதிபத்தியங்களை நிலை நிறுத்தவேண்டும் என்றும், முயற்சி செய்த வர்களுக்கெல்லாம் இந்த எண்ணமே ஊக்க மளித்து வந்தது. இன்று தென்னுப்பிரிக்கா வில் உள்ள வெள்ளையர்களின் மனம் இந்தக் கெட்ட எண்ணத்தால் விகாரப்பட்டிருக் கிறது. இதை டச்சுக்காரர்கள் இந்தோ

னேஷியாவில் அமுல் நடத்துகிறார்கள். இந்தியாவில் உள்ள கோடிக் கணக்கான மக்களை அடக்கி யாளுவதற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இதை ஒரு ராஜ தந்திரமாகக் கையாண்டு வருகிறது.

மகாத்மா சாதித்தது

இந்த இனப் போராட்டத்தையே பகவத் கீதையில் வர்ணாச்சிரமம் என்று விவரிக்கப் பட்டிருக்கிறது. இந்த இன உணர்ச்சியின் ஆபரணம் ஹிம்சை. அதனுடைய முடிவு குரு க்ஷேத்திரம் என்னும் போர்க்களமே. மனிதர் ஹிம்சையைக் கைவிடவேண்டுமென்றால் முதலில் இன உணர்ச்சியைக் கைவிட்டாகவேண்டும். அஹிம்சை யென்னும் அன்பு வழியைப் பின்பற்ற வேண்டுமானால் ஜாதியை ஒழிக்க வேண்டும். வருணாச்சிரமத்தின் முடிவு குரு க்ஷேத்திரத்தைத் தவிர வேறில்லை.

மகாத்மாவின் மேன்மைக்குக் காரணம் தற்காலத்தில் மனிதர்கள் மறந்திருக்கும் அன்பு வழியே உண்மை வழி யென்பதைத் தைரியமாக எடுத்துச் சொன்னதுதான். இந்தவழி அவர் கண்டுபிடித்ததல்ல. ஆயினும் இந்த உண்மையை அவர் வற்புறுத்தியது மாதிரி வேறு ஒருவரும் தற்காலத்தில் வற்புறுத்தவில்லை. அந்த உண்மையிலிருந்து பிரிக்க முடியாத மற்ற பாகத்தை அவர் அறவே ஒதுக்கிவிட்டார். அவருடைய போதனையில் இன உணர்ச்சியின் அழிவும் அஹிம்சை மார்க்கமும் பிரிக்க முடியாதபடி ஒன்றுபட்டிருக்கின்றன. மனிதவர்க்கம் ஒன்றேயென்பது அதன் முடிபு. மகாத்மாவி

னிடம் காணப்படும் கதம்பம் என்னவென்ருல் ஒரு பக்கம் அகிம்சையை வற்புறுத்தும் பெருமையும், மற்ெருரு பக்கம் கீதையை பாராயணம் செய்து கொண்டு வர்ணுச்சிரமத்துக்கு உயிர் கொடுக்கும் நேர்மையற்ற செயலும் அவரிடம் ஒன்றிக்கிடப்பதாகும்.

ஜாதிப் பாதுகாப்புத் திட்டம்

நிர்மாணத்திட்டம் என்பது மகாத்மாவின் கொள்கைகளில் இறந்துபட்ட பாகம் என்று கூறினேன். நிர்மாணத்திட்டத்தின் அஸ்திவாரம் என்ன? தெரிந்தோ தெரியாமலோ மகாத்மாவின் மனதில் ஒரு ஆழ்ந்த எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு அவரை அறியாமலே பல முயற்சிகளில் அவர் ஈடுபடுகிருர். அந்த எண்ணந்தான் ஜாதி அமைப்பைக் காப்பாற்றவேண்டுமென்னும் ஆசை.

ஜாதியைக் காப்பாற்றவேண்டுமானல் கிராமக் கைத்தொழில்களைக் காப்பாற்றியாக வேண்டும். ஏனெனில் கிராமக்கைத் தொழில்கள் அனைத்தும் ஜாதி அமைப்பென்னும் அஸ்திவாரத்தின் மேலேயே கட்டப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் புராதன நாகரிகமாகிய கிராமாந்தர வாழ்க்கையைக் காப்பாற்ற வேண்டுமென்று பேசுவதின் நோக்கம் ஜாதித் திட்டத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான். கிராமக் கைத்தொழில்களின் முறை ஜாதிப்பாகுபாட்டின் அமைப்பைத் தழுவித்தான் இருக்கிறது.

விஞ்ஞானத்தின் புதிய ஏற்பாடுகளையும், யந்திரத் தொழில் முறையையும் வெறுப்பதன்

காரணம் ஜாதித் திட்டத்தின்மேல் உள்ள அபிமானந்தான். நமது நாட்டில் யந்திர நாகரிகம் வளர்ச்சியடைந்து நவீன நாகரிக முறைகளில் தொழில்கள் அமைக்கப்படுமானால் ஜாதிகள் மாண்டு மடிந்துபோகும். அஹிம்சையைக் கைப்பிடிக்கவேண்டும் என்று மகாத்மா செய்த முயற்சிக்குப் பெருமை கொடுக்க நான் ஆசைப்படுகிறேன். அவ்வித முயற்சியின்றி மனிதவர்க்கம் முன்னேற்றமடைய முடியாது என்றும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். மனித வாழ்க்கையின் நோக்கமாகிய உண்மைக்கு ஆதாரமாவது அன்பென்னும் அகிம்சை. ஆயினும் அகிம்சை என்பது முழு உண்மையல்ல; உண்மையின் ஒருபாகமாகும். மற்ற பாகத்திலிருந்து அதைப் பிரித்துவிட்டால் அதனுடைய உண்மைத் தோற்றம் மாறிவிடும். பகவத்கீதையின் நோக்கத்திற்கும், அகிம்சையின் அந்தரங்கத்திற்கும் நேர் விரோதம். இவை இரண்டையும் கலக்கமுடியாது.

உலக குரு

அகிம்சா தர்மத்தை யாராவது கண்டு பிடித்தார்கள் என்று சொல்லவேண்டுமானால் அந்தப் பெருமை கௌதம புத்தரைச் சாரும். அவரே என்றென்றும் இந்தியாதேசத்துப் பெரியாராகக் கருதப்படுவார். உலகப் பெரியாராகப் போற்றப்படுவார். அவருடைய போதனையின் அஸ்திவாரம் அகிம்சை. ஆனால் அகிம்சையின் எல்லையை உணர்ந்து அதற்கு வரம்பு கட்டியிருந்தார். மரக்கறிதான் சாப்பிடவேண்டும் என்று அவருடைய பெயரைச்

சொல்லிக்கொண்டு புரளிசெய்பவர்களைப் போல அவரில்லை. அவர் இறந்ததற்கே காரணம் மாமிசம் சாப்பிட்டபொழுது அவருடைய தொண்டையில் ஒரு எலும்பு மாட்டிக்கொண்டதாகவும் அந்தப் புண்ணின் மூலம் அவர் இறக்கநேரிட்டதென்றும்சொல்லப்படுகிறது. இது அவருடைய எதிரிகளால் அவரைக் கேவலப்படுத்தவேண்டிப் பிற்காலத்தில் கட்டிவிட்ட ஒரு கதையாகவும் இருக்கலாம். இது எப்படியிருந்தபோதிலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் அகிம்சையை மிகைப்படுத்தி அதை பலவீனபடுத்துவதைப்போல அவர் செய்யவில்லை. அகிம்சையை வரையறுத்த காரணத்தாலேயே அவருடைய அகிம்சை உண்மையின் பரிபூரண பிரதிபிம்பமாகப் பிரகாசித்தது.

மகாத்மா செய்த பிழையை அவர் செய்யவில்லை. அகிம்சையையும் அதற்கு நேர் விரோதியான கீதையில் உள்ள வர்ணாச்சிரமத்தையும் ஒன்ருக்ச் சேர்த்துக் கூட்டவில்லை. புத்தருடைய வாழ்க்கை முழுதும் கீதைக்கு மாருக விளங்குகிறது. கீதையில் கண்ட சுலபமான வழியைப் பின்பற்ற அவர் சம்மதித்திருந்தால் இந்தியாவில் உள்ள ஜனத்திரள் முழுவதும் அவரைப்போற்றி வணங்கியிருக்கும். புத்த மதம் இந்தியாவைவிட்டுத் துரத்தப்பட்டிருக்காது. ஆனால் கஷ்டமானதும் பொதுஜன ஆர்வத்தை எதிர்க்கக்கூடியதுமான வேறு வழியையே அவர் நாடினர். ஏனெனில் சுலபமாக ஜனக்கூட்டம் சேர்க்கும் வழி உண்மை வழி அல்ல என்பது அவருக்குத் தெரியும்.

கனவு

ஒருக்கால் மகாத்மாவின் தலைமையில் தொடங்கப்பட்ட அகிம்சை இயக்கம் ஆதிபுத்தரின் உண்மை வழியில் சென்றிருந்தால் நம் இந்தியா தேசத்திற்கும் நமது மக்களுக்கும் எவ்வளவு நன்மை கிடைத்திருக்குமோ அது இப்பொழுது கிடைக்காமற் போய்விட்டதே என்று எண்ணும்போது நமது நெஞ்சம் குமுறுகின்றது. அவ்வாறு நடைபெற்றிருந்தால் நமது நாட்டில் அரசியலையும் மதத்தையும் ஒன்றாய்க் குழப்பியிருக்கும் நிலை ஏற்பட்டிருக்காது. பாக்கிஸ்தான் பிரச்சினையே தோன்றியிருக்காது. அரசியல் மேடைகளில் கீதாபாராயணம் நடைபெற்றிருக்காது. தீண்டாமை ஒழிந்தே போயிருக்கும். உண்மையான அகிம்சா மார்க்கத்தை நமது நாட்டார் கைப்பிடித்து உலகத்தாருக்கே வழிகாட்டியிருப்பார்கள். அகிம்சையின் பேரால் இப்பொழுது நடந்ததைப்போல் போலி நாடகம் நடைபெற்றிருக்காது.

இப்பொழுதுதான் என்ன? இன்னும் சமயம் வாய்க்கும். இந்தியாதேசம் தன்னுடைய நோக்கத்தை அடைய இன்னும் வெகுதூரம் போகவேண்டும். இப்பொழுதாவது உண்மை வழியைப்பின்பற்றி நடப்போமானல் உலகத்தாரை ஒரு புதுவழியின் மூலம் மேன்மையடையச் செய்வோம். ஆனல் அம்முயற்சியில் இடுபடுவதற்கு முன் இந்திய மக்கள் தங்களுடைய நிலைமையைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டும். இந்தியாவில் ஒரு புரட்சி நடந்தாகவேண்டும். கீதையில் கண்ட

இனவுணர்ச்சியை ஒழித்தாகவேண்டும். அகிம்சையைக் கைப்பிடிக்கவேண்டுமானால் கீதையைக் கைவிடவேண்டும்.

பிரார்த்தனை

தான் 125 வயது வரையில் வாழ வேண்டுமென்று மகாத்மா விரும்புகிறார். அவருடைய வயதில் இன்னும் ஒரு நூற்றாண்டு சேர்க்க முடியுமானால் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அவருக்கு என்னுடைய தாழ்மையான பிரார்த்தனை யாவது :—

மாந்தர் உள்ளத்தில் மருவிடும் கடவுளை
அவரவர் அறிவால் இறைஞ்சலே இயல்பாம்;
எண்ணற்ற கோடி இந்திய மக்கள்
மகாத்மாவைத் தேடி மன்றாடி நிற்பது
அவனியில் அவர்படும் அல்லல் நீக்கி
இன்ப வாழ்வினை எய்திட அன்றோ?
ஏக் தோ வென்றே இவர்களைத் தாளம்
போடவும், ராம் துன் பாடவும் மிகமிக
வற்புறுத்திடும் வம்பினால் பயன் என்?
தாணியில் இன்பம் தேடித் தவிப்போர்க்கு
மோட்ச வழிசொலல் மோசடி யல்லவோ?
கீதை யென்னும் சூதுசேர் கற்பனை
மக்களை வாட்டி மிக்க வருத்தும்
வருணச் சிரம வஞ்சகம் பேசும்;
நிறத்தையே வருணம் என்று நிகழ்த்துவர்;
வருணம் மனிதரால் வழங்குவ தன்றால்
பிறவியில் வருணம் வந்தது; பேதம்
கூறுதல் அநீதி! கொடுமை! கொடுமையே!

Printed at The Royal Printing Works,
11, Mount Road, Madras.

This Book in English

League of Youth - - -

by **S. Ramanathan** **Re. 1—8—0**

உமர்கய்யாம் ...... தமிழ் மொழி பெயர்ப்பு

சாமி. சிதம்பரன் ரூ. 1

THE ROYAL PRINTING WORKS
11, MOUNT ROAD, MADRAS—2